Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර් ஜூன். 29 - ஜூலை, 05, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 668








## அரசு-நோர்வே-புலிகள் அடுத்த நகர்வு என்ன?

இன்னொருவர் பார்வையில்

## வடக்கின் இயல்பு நிலைக்கு வேட்டுக்கள் வேண்டாம்!

அலசல்

## புது டில்லியின் புதிய அணுகுமுறை

எக்ஸ்ரே ரிப்போர்ட்



## பொலிஸ் வலையில் அழகி செரினா: வழக்கு சூடு பிடிக்கிறது!

## மனித உரிமைகளில் விழிப்புணர்வு அவசியம்!

சிறப்புக் கட்டுரை

## கனவு போவோம்! ரசிப்போம்!

சினி லடாய் கமல் - ஸ்ரேயா ஜோடி சேர இயக்குநர் ஷங்கர் எதிர்ப்பு!

# ஆன்மீகம்

## சச்சிதானந்தம்

‘சச்சிதானந்தம்’ என்னும் சொல் சிவனைக் குறிப்பிடுவதாகச் சிலர் அர்த்தம் கொள்வர். ஆனால், ‘சச்சிதானந்தம்’ என்பதன் உட்பொருள் காட்டி நிற்பதெல்லாம் வெவ்வேறு தத்துவங்களையென்பது எத்தனை பேருக்குத் தெரியும் என்பது கேள்விக்குறிதான். சத் என்பது எங்கும் நிறைந்திருக்கும் இறை ஆற்றலின் வெளிப்படப் பெற்ற நிலை. அதாவது அடங்கலாய் பொங்கி நிற்கும் காரண நிலை. ‘சித்’ என்பது அந்த ஆற்றல் வெளிப்பட்டு இயங்கும் பிரபஞ்ச நிலை. ‘ஆனந்தம்’ என்பது அந்த இயக்கத்திலிருந்து பொங்கும் இன்ப நிலை. இதுவே சத்,சித்,ஆனந்தம். இவைகளே சச்சிதானந்தமானது. இந்தத் தத்துவத்தின் மூலம் இயற்கையின் நியதிதான் பிரபஞ்ச இயக்கம். அதாவது உலகில் தோன்றிய உயிர்களுக்கெல்லாம் மூலப்பொருளாய் நிற்பது கண்ணுக்குப் புலப்படாத இறைசக்தி எனலாம்.

-என்.எஸ்.ராஜா, தம்பலகமம்.



## நற்செய்தி!

சகோதரனே! சகோதரியே! தாகத்தோடு தேடுகிறவர்களுக்கு ஏற்ற சமயத்திலே இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகரைக் குறித்துச் சொல்லவே நீ பிறந்திருக்கிறாய். அது அவருடைய கட்டளை.

“இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள். ஏசாயா 43:21 - வேதம் சொல்லுகிறது. ‘இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்’ மத் - 12:34. நம்முடைய இருதயத்திலே எம்முடைய இரட்சகருடைய வார்த்தைகள் நிறைந்திருந்தால் அவரைக் குறித்துப் பேசுவோம், சினிமாவும், தொடர் நாடகங்களும் நிறைந்திருந்தால் அவற்றைக் குறித்துப் பேசுவோம். சகோதரனே! நாம் ஓய்வாகப் பொழுதுபோக்கும் காலம் இதுவல்ல. நியாயத் தீர்ப்பு வரப்போகும் காலம். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். ஆவியை அவித்துப் போடாதிருங்கள்.” தெச 5:7,19.

ஆதலால் தூங்குகிற நீ விழித்து மரித்தோரைவிட்டு எழுந்திரு. அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார். எபேசியர் 5:14. எனக்காக மரித்து, என்னை நீதிமானாக்க எழுப்பினவரே, உம்முடைய அன்பைக் குறித்து மற்றவர்களுக்குச் சொல்ல என்னை அபிஷேகியும் சுவாமி என ஜெபிப்போமாக. ஆமென் -

-போல் - தெல்தெனிய.

## சீரிய வாழ்வும் திருமறையும்

பணத்தை ஒருவன் எவ்வாறு சம்பாதிக்க வேண்டும்? அதனை அவன் எவ்வாறு செலவிடுதல் வேண்டும்? பணம் ஈட்டுவதின் இன்பத்தை விட, அதை அவன் ஏழைகளுக்கு ஈவதில் எவ்வாறு நல்லின்பம் பெற முடியும்? என்பதையெல்லாம் இஸ்லாம் மதம் மிக அழகாக எடுத்தியம்புகிறது.


பணம் சம்பாதிப்பது மட்டும் திறமையாகாது. அப் பணத்தை நாம் செலவிடுவது இருக்கிறதே, அதுவும் திறமையான செயலாகும். ‘நான் தானே இப் பணத்தைச் சம்பாதித்தேன்; ஆகவே நான்தான் இதனை அனுபவிக்க வேண்டும்’ என்ற கொள்கை கீழானது.

பணமே வாழ்க்கை என்று எண்ணி விடுபவனுக்கு விடிவேயில்லை. அவன் தன் பணத்தை விட்டுப் பிரிவதற்கும், அதனை வறியவர்களுக்கு வாரி வழங்குவதற்கும் மனமில்லாது, அதனைக் கட்டிக் கப்பதிலே தன் வாழ்வைப் பாழடித்து இறுதியில் மரணப் படுக்கையில் துடிதுடித்து வேதனைப் படுகின்றான்.

சீரிய வாழ்வுக்கு திருமறை கூறுவது: அகீமுஸ் ஸலாத்த வஆதுஸ் ஸகாத்த என்பதாகும் அதாவது - “வணக்கத்தை நிலையாக்குங்கள், ஸகாத்தை வழங்கி வாருங்கள்” என்று பொருளாகும்.

-எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.665



பரிசுக்குரிய கவிதை

### இடமில்லையா?

தம்பி...
அங்கே பார்!
இலங்கையங்க...
நம்ம நாட்டுக்கு
பேச்சு வார்த்தைக்கு
வந்திருக்காங்க
ஏன் அங்க அதுக்குக்
கூட...
இடமில்லையா?

-அஜ்ஹத் எம்.ஜே.,
சீனக்குடா.

## கவிதைப் போட்டி இல.668



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 04.07.2006.

கவிதைப் போட்டி இல.668
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### கலரி

கலரியில் இருந்து படம்
பார்க்க
ரிக்கற் கேட்டு முட்டி
மோதும்
சிறுவர்கள் அல்ல இவர்கள்
தப்பியோடிப் பிடிபட்டு
கம்பி எண்ணும் தம்பிமார்.

–சீ.தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### சமாதானப் பழிக்காய்

நல்லவர்கள் குரல்
கொடுத்ததால்
கொல்லப்பட்டார்கள்
அவ்வழியின் வாரிசுகள்
என்பதால் எங்களை
சிறையிலடைத்து
விட்டார்கள்
விடுதலை கிடைத்ததும்
நாங்களும் குரல்
கொடுப்போம்
சமாதானம் கிடைக்கும்
வரை.

-அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர் - 01.

### விட்டு விடுங்கள்

போர் நிறுத்தம்
பேச்சுவார்த்தை
புதிய தீர்வு
காணும்வரை
வெளியில் வரச்
சொல்லாதீர்கள்
விட்டு விடுங்கள்
இப்படியே!

–மொகிதீன் எம்.சரீப்,
திருகோணமலை.

### இலட்சியம்

சிறையில் வாடும்
சின்ன மலரல்ல நாங்கள்
எழுந்தால் தொட்டு
விடுவோம்
சிகரம் கூட
காலடி தூரம் தான்
இந்த மண் மீது
எங்கள்
உரிமையும் சுதந்திரமும்
பறிக்கப்படாதிருந்தால்!

–ஏ.ஆர்.எம்.நதார்,
ஜின்னாநகர்.

### வேண்டுகோள்!

“தலைவனதும்
போராளிகளினதும்
ஆயுதங்களைப்
பறிமுதல் செய்யாதவரை...
நாங்கள் இனி
வீதியில் இறங்கி
விளையாட மாட்டோம்.”

–எம்.எம்.றிம்ஸி,
ஏறாவூர் – 03.

### சோதனைக் காலம்

வாடகையில்லாமல்
குடியிருந்தேன்
என் தாயின்
கருவறையில் சில
காலம்!
வாடகையுடன்
குடியிருக்கின்றேன்
மற்றவர்களின் வீட்டில் -
பல காலம்
இதுவே என் வாழ்வின்
சோதனைக் காலம்.

–ஆர்.புஷ்பவாணி,
கொழும்பு – 15.

### குயில்கள்

குவலயத்தில்
குதூகலித்து
மனம் மகிழும்
இளம் பிஞ்சுக்கள்
கூட்டில் வாழும்
குயில்களைப் போல
வாடித் துயரடையும்
நிலை - ஏனோ?

–வி.மருதாம்பாள்,
இரத்தினபுரி.



# வாசகர் சாலை

### அன்பின் முரசுக்கு!

சிரிக்கும் மானிடர் நெஞ்சில்
சிந்தனை எழுப்பி
ஞானமூட்டும் அன்பின் சின்னம்
அலையாத வடிவம்
(எங்கள் தினமுரசு)
வானவில் தாங்கும் பல வண்ணங்கள்
போல
கோடி தகவல்களைத் தாங்கி
வாசகர் நெஞ்சில், சூடு, சுவாரசியம்,
புதுமை, அற்புதம் சுமந்து
விளங்கும் எனதன்பின்
முரசுக்கு கோடான கோடி
நன்றி....நன்றிகள்.

–எம்.கலாரூபன்,
கந்தப்பளை.

### முத்தான முரசுக்கு!

முரசே உன்னில் வரும் ஆக்கங்கள் சிறப்பானவை.முரசே உனது கவிதைப் போட்டியில் வெளியான படம் மூலம் கத்ரீனா சூறாவளியின் தீவிரத்தை ‘நச்’சென்று உணர்த்தினாய். மேலும் அமெரிக்காவின் கத்ரீனா சூறாவளி தொடர்பான தகவல்களையும் சிறப்பாக எடுத்துரைத்தாய். உனது நுணுக்கமான சிந்தனைகள் காலத்திற்கேற்ற தகவல்கள் என்பவை எம்மை ஆனந்தமடையச் செய்கின்றன. மேலும் ஸ்போர்ட்ஸ், லேடீஸ் ஸ்பெஷல் மற்றும் அரசியல் கட்டுரைகள் சிறப்பாக உள்ளன.

–பரீனா பானு,
கிண்ணியா.

### வாழ்க முரசே!

சிறப்பான ஆக்கங்களைப் பொறுப்பாகச் சுமந்து வரும் முரசுக்கு வந்தனங்கள். உன்னில் வெளிவரும் ‘தேநீர் கோப்பைக்குள் இரத்தம்’ அம்பலத்திற்கு வராத அரசியல் உண்மைகளை அங்காடிக்குக் கொண்டுவருகிறது. இத் தொடர் மூலம் நீ பல எதிரிகளைச் சம்பாதிக்கலாம். ஆனாலும் உண்மைகளை உலகுக்கு உணர்த்திய திருப்தி உனக்கும் அதனை வாசிப்பதால் உனது வாசகர்களாகிய எமக்கும் நிச்சயம் உண்டு. உன் பணி தொடர்ந்து வான் புகழ் பெற வாழ்த்தும் வாசகன்.

–தேவபாலன்,
யாழ்ப்பாணம்.

# உங்கள் பக்கம்

## புத்தளம் வைத்தியசாலை ஊழியர்களின் அலட்சியம்!

**புத்தளம்** தள வைத்தியசாலையில் நடந்த பரிதாபமான - பாரபட்சமான ஈனச் செயலை இங்கு குறிப்பிட வேண்டியது முக்கிய கடமையாகிறது. புத்தளம் தில்லையடி அரபா நகர் கிராமத்தில் வசிக்கும் ஆர்.ரவ்லத் எனும் பெயர் கொண்ட எனது நண்பனின் 6 வயது மகள் ரஸ்னா வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சமயம், கட்டாக்காலி நாய் ஒன்றினால் இடது கால் பகுதியில் கடியுண்டாள். அச்சிறுமியை தகப்பன் சகிதம் புத்தள வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம்.

O.P.D.யில் பதிவு செய்து நம்பர் எடுத்து வைத்தியரும் பரிசோதித்த பின், 2ஆம் வார்ட்டில் போய் சிகிச்சை பெறுமாறு பணிக்கப்பட்டது. அங்கு சென்ற சமயம், அந்த வார்ட்டில் பணிபுரிந்த வைத்தியர் சகிதம் தலைமை தாதியும் இவருடன் பணிபுரிந்த ஏனைய நான்கு தாதிமார்களும் சேர்ந்து எமது வருகையையும் O.P.D. யினால் வழங்கப்பட்ட துண்டு ரசீதையும் பொருட்படுத்தாமல் அரட்டை அடித்துக் கொண்டு தங்கள் சொந்த விடயங்களைப் பற்றி அலசி ஆராய்ந்து கொண்டு இச்சிறுமியைக் கவனியாது அசமந்த போக்கில் இருந்தார்கள். இச்சிறுமியின் அவலக்குரலை தாங்காமல் துணைக்குச் சென்ற நான், அத்தாதியிடம் பிள்ளையின் நிலைமையை எடுத்துரைத்தேன். அதற்கு “நீ யார்? பிள்ளையின் தாயாரை கூட்டி வாருங்கள். இல்லையேல் 7ஆம் வார்ட்டுக்கு நம்பரை மாற்றி தந்துவிடுவேன்” என்று கூறி சிறுமியையும் பார்க்காமல் அலட்சியமாக நடந்து கொண்டார். இச் சிறுமியின் பரிதாப நிலை குறித்து அங்கிருந்த எவருமே அக்கறை கொள்ளவில்லை. நாம் சுமார் 45 நிமிடங்கள் பொறுமையுடன் தவித்திருந்த தறுவாயில், பிள்ளையின் தாயார் ஒருமணி நேரத்துக்குப் பின் சமுகமளித்து நிலைமையை எடுத்துரைக்க, நன்றாகத் தமிழ் தெரிந்த அந்தத் தாதி, அருகிலிருந்த பெரும்பான்மை மொழி பேசும் வைத்தியரிடம் காண்பிக்கச் சொல்லி பணித்தார். அந்தோ பரிதாபம்! இத் தாயாருக்கு சிங்கள மொழி தெரியாது. கடவுள் அருளால் அவ்வார்ட்டில் தங்கி சிகிச்சை பெறும் சகோதரி, இதைப் புரிந்து கொண்டு அவ் வைத்தியரிடம் சிங்கள மொழியில் நிலைமையை எடுத்துரைத்தார்.

அதற்குப் பிற்பாடு இச்சிறுமிக்குரிய சிகிச்சை ஏற்பாடு நடைபெற்றது. எம் நிலைமை அந்த வார்ட்டில் தங்கி சிகிச்சை பெறும் மனிதாபிமானமுள்ள அந்த சகோதரிக்கு புரிந்திருக்கிறது. ஆனால் மனிதாபிமானமே அற்ற இந்த ஈனப் பிறவிகளுக்கு புரியவில்லையே? இதுவா நீதி? இதுவா சேவை? இதே நிலைமை மற்ற சகோதர, சகோதரிகளுக்கும் ஏற்படக்கூடாது என்பதற்காக இதை எழுதுகிறேன். இதைப் படித்தாவது இவர்கள் போன்ற ஜென்மங்கள் இருந்தால் திருந்திக் கொள்ளட்டும்.

-எஸ்.ஏ.சி.நியாஸ் (சமூக சேவையாளர்), புத்தளம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# தற்கொலைக் குண்டின் எதிரொலி; தமிழ் மக்கள் அச்சம்

# கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் கெடுபிடிகள் அதிகரிப்பு



இலங்கை இராணுவத்தின் மூன்றாவது உயர்நிலை அதிகாரியும் பிரதி இராணுவத் தளபதியுமான மேஜர் ஜெனரல் பராமி குலதுங்கா, பன்னிப்பிட்டியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டதையடுத்து நாட்டின் முக்கிய நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது. கண்டி, அநுராதபுரம், மாத்தளை, குருநாகல் ஆகிய நகரங்களில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கொழும்பிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் சோதனைச் சாவடிகள் அமைக கப்பட்டுவருகின்றன வாகனங்களில் பயணம் செய்பவர்கள் பலத்த சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அடையாள அட்டைகளும் பரிசோதிக்கப் படுகின்றன.

“கடந்த இரண்டு மாதங்களுக்குள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீதும் பிரதி இராணுவத் தளபதி பராமி குலதுங்கா மீதும் புலிகள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். மிகக் கவனமாகப் புலனாய்வு செய்து, திட்டமிட்டே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இத் தாக்குதல்களை நடத்துவதற்குப் புலிகளின் தற்கொலைக் குழுக்கள் கொழும்பு வந்து சேர்ந்திருப்பதாக ஏற்கனவே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தன. இருந்தாலும் தேடுதல் நடவடிக்கைகளின் போது பெரும்பாலான அப்பாவித் தமிழ் மக்கள் வீண் சிரமங்களுக்கும் தொந்தரவுகளுக்கும் உள்ளாகலாமென்ற காரணத்தால் நாம் கடுமையான தேடுதல் நடவடிக் கைகளை மேற்கொள்ளவில்லை என்று கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான சரத் லூகொட தெரிவித்தார்.

கொழும்பில் பத்துக்கு மேற்பட்ட தற்கொலைக் குழுக்கள் நடமாடுவதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பெரும்பான்மை இனத்தவர்களையும் பணம் கொடுத்துத் தமது புலனாய்வு வேலைகளுக்குப் புலிகள் பயன்படுத்து வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தவிர்க்க முடியாமல் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குப் படையினரும் பொலிஸாரும் தள்ளப்பட்டுள்ளனர். வீதிச் சோதனை, வாகனச் சோதனை மட்டுமல்ல வீடுகள், லொட்ஜ்கள் ஆகியவற்றையும் சோதனையிட வேண்டிய நிலைக்கு நாம் ஆளாகியுள்ளோம். மீண்டும் அசம்பாவிதங்கள் நடைபெறாமல்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு

-அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



வன்செயல்களுக்குத் தமது உறவுகளைப் பலிகொடுத்ததால் பீதியுற்றும் ‘மக்கள் படை’ என்ற பெயரில் விடுக்கப்பட்ட மிரட்டல்களுக்கு அஞ்சியும் தமது வாழ் விடங்களை விட்டு வெளியேறி, யாழ்ப்பாணத்தில் தஞ்சமடைந்த அல்லைப்பிட்டி மக்களின் மீள்குடியேற்றத்துக்கு வெற்றிகரமாக உதவிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த நான்கு வாரங்களுக்கு மேலாக யாழ்ப் பாணத்தில் தங்கியிருந்து மக்கள் நலன் சார்ந்த பல பணிகளை மேற்கொண்டு வருகிறார். தனது யாழ்.அலுவலகத்தில் பொதுமக்களை அன்றாடம் சந்திப்பதோடு, அவ்வப்போது அதிகாரிகளையும் சந்தித்து மக்கள் பணியை முன்னெடுக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார். கடந்த 21ஆம் திகதி வடமராட்சி சமுர்த்தி உத்தியோகத்தர்களைச் சந்தித்து குறைநிறைகளைக்கேட்டறிந்ததோடு, மக்கள் நலன் சார்ந்த பணிகளை முன்னெடுக்குமாறும் அறிவுரை வழங்கினார்.

அங்கு அமைச்சர் உரையாற்றுகையில், “சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தங்களது பணிகளைத் தொழில் வாய்ப்பாக மட்டும் கருதாமல், அதனையொரு சமூகக் கடமையாகவும் கருதிச் சேவையாற்ற வேண்டும். மக்கள் நலன் சார்ந்த பணிகள் தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய, மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கைக்கு உதவ இந்தியா தயார்

“யுத்த நிறுத்தத்துக்குக் குழி பறிப்பதற்கும் அரசியல் தீர்வுக்கான கலந்துரையாடல் முயற்சிகளை நாசப்படுத்துவதற்காகவுமே தொடர்ச்சியான பல பயங்கரவாதத் தாக்குதல்கள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தத் தொடர்ச்சியான தாக்குதல்களின் பிந்திய அங்கமாகவே இலங்கை இராணுவத்தின் பிரதித் தளபதி மேஜர் ஜெனரல் பராமி குலத்துங்கவும் மேலும் மூவரும் கொல்லப்பட்டுள்ளார்கள்” என்று இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. பன்னிப் பிட்டியில் புலிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலைக் காரசாரமாகக் கண்டித்த போதே இந்திய வெளிவிவகார அமைச்சுப்பேச்சாளர் நவ்டேஜ் சர்மா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “அரசியல் இணக்கப்பாடொன்றினை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளை இந்தியா வரவேற்கிறது. அரசியல் தீர்வொன்றிற்குத் தேவையான அரசியலமைப்பு மாற்றங்களை மேற்கொள்ளும் முயற்சியில் இலங்கைக்கு உதவ இந்தியா தயாராக இருக்கிறது. இந்த சமாதான முயற்சியில் எமது சொந்த அரசியலமைப்பு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள நாம் தயாராக இருக்கிறோம். பல குடிமக்களையும் பாரதூரமாகக் காயப்படுத்திய மிலேச்சத்தனமான தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இலங்கை அரசாங்கத்துக்கும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இலங்கை, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளுமே பயங்கரவாதத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பயங்கரவாதத்திற்கு எதிரான பொதுவான போராட்டத்தில் இலங்கை மக்களோடு உறுதியாக நிற்க இந்தியா திட சங்கற்பம் பூண்டுள்ளது.

இலங்கையில் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணுவதோடு, இலங்கையிலுள்ள சகல சமூகங்களினதும் அபிலாஷைகளைக் கவனத்தில் எடுத்து தீர்வொன்றினைக் காண்பதற்காக விசுவாசமான கலந்துரையாடலினூடாக அரசியல் தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதே இந்தியாவின் கருத்தாகும்” என்றார்.

## தென்னாபிரிக்கா, அயர்லாந்திலிருந்து புலிகள் கற்றுக்கொள்ள வேண்டும்

-பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர்

“இலங்கையில் பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முடியாது. தென்னாபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸும், வட அயர்லாந்தில் ஐரிஸ் குடியரசு இராணுவமும் பயணம் செய்த அதே பாதையில் செல்ல வேண்டிய வேளை புலிகள் இயக்கத்துக்கு வந்துவிட்டது” என்று இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் டொமினிக் சில்கொட் தெரிவித்தார்.

எலிஸபெத் மகாராணியாரின் பிறந்த தினத்தையொட்டி கடந்த வாரம் கொழும்பில் நடை பெற்ற வைபவமொன்றில் உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

புலிகள் இயக்கம் ஆயுதங்களையும் வன்செயல் நடவடிக்கைகளையும் கைவிட்டு தமது முரண்பாடுகளுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணும் பண்பாடான, ஜனநாயக மக்கள் குடும்பத்தோடு இணைந்து கொள்ள வேண்டும். புலிகள் இயக்கம் தனது அரசியல் அபிலாஷைகளைக் குண்டுகள் மூலமோ, துப்பாக்கி ரவைகள் மூலமோ அடைய முயலக்கூடாது. அரசின் ஜனநாயக முறைமைகளுக்கூடாகவே அவற்றைப் பெற முயற்சி செய்ய வேண்டும்.

எந்த ஒரு நாட்டிலும் ஆயுதப் படைகள் மிகச் சரியாகச் செயற்படுவதில்லை. பிரிட்டனிலுள்ள நாம் கசப்பான அனுபவங்கள் மூலம் இதனை உணர்ந்துள்ளோம். ஆனால் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றில் பிரச்சினைகள் ஏற்படும்போது அவை குறித்து ஆராய்ந்து, தவறான வழி முறைகளில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் மூலம் தண்டிப்பதே சரியானதாகும். - இவ்வாறு அவர் கூறினார்.

## தற்கொலைக் குண்டுதாரி தங்கியிருந்த வீடு

மேஜர் ஜெனரல் பராமி குலதுங்க மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து இருநூறுக்கு மேற்பட்டோர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதோடு 23 பேர் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். தற்கொலைக் குண்டுதாரி பயன்படுத்திய மோட்டார் சைக்கிள், ஜா-எலயிலுள்ள விலாசமொன்றில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்த பொலிஸார், சம்பந்தப்பட்ட நபரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் கூறினர். தற்கொலைக் குண்டுதாரி கொழும்பின் சுற்றுப்புறப் பகுதியொன்றில் வீடொன்றினை வாடகைக்கு எடுத்து வேறு சிலரோடு தங்கியிருந்திருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிஸார் கூறினர்.

## பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் இந்திய உதவி கிட்டும்

இலங்கை - இந்தியா ஆகிய இரு நாடுகளையுமே பாதித்த பயங்கரவாதத்துக்கு எதிரான பொதுவான போராட்டத்தில் இலங்கை மக்களோடு இந்தியா உறுதியாக நிற்கும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளரான நவ்டேஜ் சர்மா தெரிவித்திருப்பதானது, இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் புதிய அணுகுமுறையைக் காட்டுவதாக அரசியல் ஆய்வாளர் மதிவண்ணன் தெரிவித்தார். அரசியலமைப்பு மாற்றத்துக்கூடாகவே இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சகல சமூக மக்களினதும் அபிலாஷைகளை புரிந்துகொண்டு தீர்வு காண்பதையே இந்தியா விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் அரசியலமைப்பு மாற்றத்துக்கு இந்திய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்திருப்பது அரசியல் தீர்வுக்கு அழுத்தம் கொடுப்பதாக அமைந்துள்ளது. இருந்தாலும், பயங்கரவாதிகளுக்கெதிரான போராட்டத்தில் இலங்கை மக்களோடு இணைந்து நிற்போமென அவர் தெரிவித்திருப்பது, புலிகளுக்கெதிரான போராட்டத்தில் இலங்கை அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கும் இந்தியாவின் புதிய அணுகுமுறையைக் காட்டுவதாக அவர் கூறினார்.

## ஆறு படை வீரர்கள் கைது

புலி இயக்கத்துடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் பேரில் ஆறு படை வீரர்கள் இதுவரை இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனரென்று தெரிய வருகிறது. வெலிஓயா, கல்யானபுர இராணுவ முகாமைச் சேர்ந்த கோப்ரல் ஒருவர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளார். புலிகளின் உளவாளியாக இருக்கலாமென்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகள் தரப்பினர் உட்பட மேலும் 28 பேர் புலிகளுடன் தொடர்பு வைத்துள்ளனரென்று கைது செய்யப்பட்டவர் கூறியதாகவும் தெரிய வருகிறது. திருகோணமலை, கோமரங்கடவலயைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டிருந்தார். இவர் ஐந்து மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தின் சிங்கப் படைப் பிரிவில் இணைந்தார் என்றும் தெரிய வருகிறது.

## தோ.தொழிலாளர் சம்பளம்; அரசின் தலையீடு வேண்டும்

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பாக கூட்டு ஒப்பந்தத்தில் அரசாங்கம் தலையிட்டு உகந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். காலங்காலமாக வெறும் கொடுப்பனவுகள் மட்டுமே அதிகரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. அவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் அதிகரிப்புச் செய்வதற்கு அரசாங்கம் தலையிட்டு ஆவன வேண்டும் என்று ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் குறிப்பிட்டார். 1990இலிருந்து வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்துவிட்டது. வெறும் இருபது, முப்பது ரூபா கொடுப்பனவுகளை அதிகரிப்பதால் அதிகரித்த வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய முடியாதென்றும் அவர் சொன்னார்.

## ஒரு கேள்வியும் சிறு பதிலும்

பன்னிப்பிட்டிய தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற தினத்தன்று இலங்கை விவகாரம் தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் நவ்டேஜ் சர்மா விளக்கிய பின்னர் பத்திரிகையாளர் ஒருவர் கீழ்க் கண்டவாறு கேள்வியை எழுப்பினார்.

***கேள்வி*** :- இலங்கை சம்பந்தமாக கூறுகையில், பயங்கரவாதக் குண்டுத் தாக்குதல் என்று குறிப்பிட்டீர்கள் இத் தாக்குதலுக்கு இலங்கை அரசாங்கம் புலிகள் மீது குற்றஞ் சாட்டியிருப்பதால், பயங்கரவாதிகளென்று நீங்கள் கூறுவது புலிகளென்று கொள்ள முடியுமா?

***பதில்*** :- எமது அறிக்கையில் அதனைத் தெளிவாகத் திட்டவட்டமாகக் குறிப் பிட்டுள்ளபோது நான் நினைக்கிறேன் மேலதிக விபரங்களை நான் தெரிவிக்க வேண்டிய தேவையில்லை.

## சிறைக் கம்பிகளுக்குப் பின்னால்...

ஆயுத மோதல்கள் அல்லது உள்நாட்டு வன்செயல்களின்போது தனி நபர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுகிறார்கள். இவர்கள் மோசமான சித்திரவதை அபாயத்தை எதிர்நோக்குவதோடு, சிலர் காணாமல் போயும்விடுகிறார்கள். நீதிக்குப்புறம்பான மரண தண்டனையும் வழங்கப்படுகிறது. சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி சிறையில் தடுத்து வைத்திருப்பவர்களைச் சென்று பார்வையிட்டு உரிய உதவிகளைச் செய்கிறது என்று ‘சிறைக்கம்பிகளுக்குப் பின்னால்” என்று தனது அறிக்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

## மலையகத்தில் 4000 வெற்றிடங்கள்

மலையகத்தில் சுமார் நான்காயிரம் தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்கள் இருப்பதாக மத்திய மாகாணத் தமிழ் கல்வியமைச்சர் எஸ்.அருள்சாமி தெரிவித்தார். மலையகத்தில் மூவாயிரம் தமிழ் மொழி மூல ஆசிரியர்களை நியமிக்க எடுத்த முயற்சி, நீதிமன்றத்துக்கு விவகாரம் கொண்டுபோகப்பட்டதால் இன்னமும் இழுபறி நிலையிலேயே இருக்கிறது. விரைவில் பேச்சு வார்த்தை மூலம் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம் என்றும் அவர் கூறினார்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## அர்த்தமற்ற மௌனத்தை இந்தியா கலைக்க வேண்டும்!

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

**இலங்கை** தமிழ் மக்களின் விடுதலைப் போருக்கு இந்திய அரசு உதவ வேண்டியது தார்மீகப் பொறுப்பு என்று புலிகள் கூறியதை இந்திய அரசு நிராகரித்தபோதும், இலங்கையின் இனப்பிரச்சினை, பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் தீர்க்கப்படவேண்டுமென வலியுறுத்தியதோடு, தனது செயற்பாடுகளையும் விரைவுபடுத்திய முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் புலிகளால் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இலங்கை அரசின் பிரதி இராணுவத் தளபதி பராமி குலதுங்க படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறான பயங்கரவாதத் தாக்குதல்களையும், பயங்கரவாத நடவடிக்கைகள் மீதான நம்பிக்கையையும் புலிகள் கைவிடப் போவதில்லை என்பதை நன்கு அனுபவ ரீதியாகப் புரிந்து கொண்டபடியினாலேயே இந்திய அரசு புலிகளைத் தடை செய்திருப்பதோடு அவர்கள் மீது நம்பிக்கையற்றும், அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் தன் நிராகரிப்பையும் வெளிப்படுத்தி வருகிறது.

தமிழகத்தில், இந்திய மத்திய அரசு இலங்கை விவகாரத்தில் தலையிட வேண்டுமென கொடுத்து வந்த அழுத்தங்கள் மேற்படி தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து சுருதி குறைந்து காணப்படுகிறது.

இவ்வாறான தாக்குதலின் பின்னர், இலங்கை அரசு விமானத் தாக்குதலை தமிழ் மக்களின் வாழிடங்கள் மீது நடத்துகிறது என்ற குற்றச்சாட்டுக்கும் இம்முறை இலங்கை அரசாங்கம் இடம் வைக்கவில்லை. அரசின் பொறுமையும், நிதானமும் புலிகள் மீது சர்வதேசத்தின் கண்டிப்பை அதிகரிக்க உதவியதோடு, புலிகளுக்குச் சார்பான குரல்வளைகளையும் நசுக்கிப் போட்டுள்ளது. அரசின் விமானங்கள் வன்னிக்கும், திருகோணமலைக்கும் பறக்கப் போகின்றன, தாக்குதல் நடத்தப் போகின்றன என்று பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அரசு காட்டிய பொறுமை, தற்கொலையாளியை ஏவி விட்ட புலிகளின் தைரியத்தை விடவும், அதைத் தாங்கிக் கொண்ட அரசுக்குத்தான் தைரியம் அதிகம் என்ற செய்தியை இன்று உலகத்துக்குக் கொண்டு சேர்ந்திருக்கிறது. அரசு எதிர்த் தாக்குதலை நடத்தாமல் இருந்தது ஒரு சிறந்த இராஜதந்திரமாகவே கருதப்படுகிறது. புலிகள் மீண்டும் ஒரு பாரிய பின்னடைவைக் கண்டிருக்கின்றனர்.

இந்தியாவுக்குத் தப்பிப்போன மக்கள் தவிர்ந்த, போகக் காத்திருக்கும் மக்களையும் சொந்த இடங்களை விட்டு விரட்டவும், அவர்கள் மீது நெருக்கடிகளை ஏற்படுத்தவும் வேண்டும் என்றால் அரசாங்கத்தை வம்புக்கு இழுத்து எதிர்த்தாக்குதலை நடத்தச் செய்வதுதான் ஒரே வழி.

இதற்காக எடுக்கப்படும் நடவடிக்கையில் அரசின் முக்கிஸ்தர்களைக் குறி வைத்து படுகொலை செய்தால், அது தமது இலக்கைத் தாக்கியதாகவும் இருக்கும். மறுமுனையில் அரசை தூண்டிவிட்டதாகவும் அமையும் என்று புலிகள் கணக்குப் பார்க்கின்றனர்.

பயங்கரமான ஆயுதத்தை விடவும் ஆபத்தானது மௌனம். இந்தியா இலங்கை விடயத்தில் இனியும் மௌனம் காக்குமாயின் அது எஞ்சியிருக்கும் இலங்கை மக்களுக்கு ஆபத்தாகவே முடியப்போகிறது. பயங்கரவாதம் முழு நாட்டையும் சுற்றிவளைத்து இரத்த ஆறை ஓடச் செய்யும்போது இந்தியா மௌனத்தைக் கலைக்கலாம் என்று நினைக்குமாக இருந்தால், பயங்கரவாதத்தினூடாக இந்தியா ஏதோவொரு சுய இலாபத்தை இலங்கை மண்ணில் அல்லது இந்தப் பிராந்தியத்தில் பெற்றுக்கொள்ளத் திட்டமிட்டுள்ளது என்ற சந்தேகங்களும் இப்போது எழத் தொடங்கியிருக்கின்றன. இந்தியா ஒரு ஜனநாயக நாடு. அது பிராந்தியத்தின் வல்லரசு. பயங்கரவாதத்தை இந்தியா ஒரு போதும் அனுமதிக்காது எனபது இந்தியாவின் அடிப்படை உண்மையாயின் அர்த்தமற்ற மௌனத்தைக் கலைத்து இலங்கையில் சகல மக்களும் சமமான அந்தஸ்தோடு கௌரவமாக வாழும் நிலையை உருவாக்க விரைந்து பங்களிப்புச் செய்ய வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் மேலும் பல குண்டுவெடிப்புகளும், மக்களின் இடப் பெயர்வுகளும் தொடரப் போவதை யாராலும் தடுக்க முடியாமல் போகும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# புதுடில்லியின் புதிய அணுகுமுறை

நரன்

இலங்கையில் சமாதானத்தை மீள ஏற்படுத்துவதற்குத் தேவையான "உகந்த நடவடிக்கைகளை" எடுக்குமாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி மத்திய அரசாங்கத்தைக் கோரியுள்ளார். அத்துடன் தி.மு.க. தலைமையிலான தமிழகத்தின் ஆளுந்தரப்பு ஆறு கூட்டணிக் கட்சிகளோடு கலந்து பேசி, அப்பாவி மக்களின் உயிர்களைப் பலியெடுக்கும் குண்டுத் தாக்குதல்களையும் விமானத் தாக்குதல்களையும் நிறுத்துவதற்கு முயற்சிகளை எடுக்குமாறும் பிரதமர் மன்மோகன் சிங்கைக் கோரியுள்ளன. கலைஞர் கருணாநிதியின் கருத்தும் தி.மு.க. தலைமையிலான தமிழக ஆளும் கூட்டணியின் கோரிக்கையும் இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையில் ஒரு சமநிலையை ஏற்படுத்தியுள்ளமை தெளிவாகத் தெரிகிறது. கிளைமோர் குண்டுத் தாக்குதல்களை நடத்துபவர்கள் புலிகள். விமானத் தாக்குதல்களை நடத்துபவர்கள் இலங்கை அரச படையினர். இரு தரப்பினரினதும் பெயரைக் குறிப்பிடாமல் அப்பாவி உயிர்களின் பலியெடுப்புகளை நிறுத்தக் கோரியிருப்பது, தமிழகத்தின் அரசியல் சீதோஷ்ண நிலையை விளக்குகிறது.

இந்தத் தீர்மானத்தை எடுத்த ஆறு கட்சிக் கூட்டணியில் நாடு பிரிவினையை (புலி எதிர்ப்பு) எதிர்க்கும் கட்சிகளான காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள் ஆகிய கட்சிகளோடு புலி ஆதரவுக் கட்சிகளான இராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சியும் கி.வீரமணியின் திராவிடக் கழகமும் இணைந்தே மத்திய அரசுக்கு இக் கோரிக்கையை விடுத்துள்ளன. இதேபோன்று எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தலைவியான ஜெயலலிதாவும், இலங்கை விவகாரத்தில் தலையிடுமாறு மத்திய அரசை மெத்தனமாகக் கோரியுள்ளார். புலி இயக்க எதிர்ப்பாளரான ஜெயலலிதாவின் அ.இ.அ.தி.மு.க.வோடு புலி இயக்க ஆதரவாளரான வை.கோ.வின் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகமும் தொல் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கமும் இணைந்து கடந்த மாநிலத் தேர்தலில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் வடக்கு - கிழக்கில் விமானப் படையினர் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களைக் கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்த தமிழகப் பத்திரிகைகள், கெப்பிட்டிகொல்லாவையில் அப்பாவிச் சிங்கள மக்கள் மீது புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதல் பற்றியும் அதேயளவு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் முருகன் - நளினி தம்பதியர் இக் காலகட்டத்தில் நடத்திய சாகும்வரையிலான உண்ணாவிரதம் பற்றி, ஏனோ தமிழகத் தமிழ்ப் பத்திரிகைகள் கோட்டை விட்டுவிட்டன. சிறையில் பிறந்த தமது மகள் ஆருத்ரா மேல் படிப்புக்கென தமிழகம் வர இந்திய மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று கோரி, இத் தம்பதியர் நடத்திய உண்ணாவிரதம் தோற்றுப் போய் விட்டதென்பது வேறு கதை.

1983இல் இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இன சங்காரத்தை எதிர்த்து, மத்திய அரசு தலையிட வேண்டுமென்று கோரி பந்த் நடத்தி இருபதாயிரம் தொண்டர்களோடு சிறை சென்றவர் கலைஞர் கருணாநிதி. அதேயளவுக்கு இலங்கைத் தமிழர்களுக்காக ஒரு காலத்தில் ஜெயலலிதாவும் குரல் கொடுத்து வந்தார். ஆனால், 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி தமிழகத்தில் தேர்தல் சுற்றுப் பயணம் வந்திருந்த ராஜீவ் காந்தி, புலிகளின் மனிதக் குண்டுதாரி வழங்கிய பூச்செண்டை வாங்கக் கைநீட்டியபோது, உடல் சிதறி மரணமானார். இக் கொலையையடுத்து தமிழகத்திலும் இந்தியாவிலும் புலிகளுக்கு இருந்து வந்த செல்வாக்குச் சிதறிச் சின்னாபின்னமாகியது. ராஜீவ் காந்தியின் கொலையையடுத்து நடைபெற்ற தமிழகத் தேர்தலில் கருணாநிதியின் கட்சி படுமோசமான தோல்வியைச் சந்தித்தது. தமிழக சட்ட சபையில் 191 ஆசனங்களைக் கொண்டிருந்த தி.மு.க, இரண்டே இரண்டு ஆசனங்களுக்கு முடக்கப்பட்டது. சந்தர்ப்பத்தைச் சரிவரப் பயன்படுத்திய ஜெயலலிதா அப்போது ஆட்சி பீடமேறினார்.

ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்னர், தமிழகத் திராவிடக் கட்சிகள் அனைத்துமே இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அடக்கி வாசிக்கத் தொடங்கின. விடுதலைச் சிறுத்தைகள், தி.க., பா.ம.க., ம.தி.மு.க. போன்ற உதிரிக்கட்சிகள் மட்டுமே புலிகளுக்காக வக்காலத்து வாங்கத் தலைப்பட்டன. இது, இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தமிழகம் கண்ட தேய்பிறை என்றும் சொல்லலாம். இலங்கை வாழ் தமிழ் மக்களோடு வரலாற்று, சமூக, கலாசார, பாரம்பரியத் தொடர்புகளைத் தமிழகத் தமிழ் மக்கள் கொண்டிருந்ததால் அது தொப்புள் கொடி உறவாகவும் வர்ணிக்கப்பட்டது. எனவேதான் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்திய மத்திய அரசு, எச்சரிக்கையோடு ஈடுபட வேண்டியதாயிற்று.

1977இல் இலங்கையில் அதிகாரத்துக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசு எடுத்த தொடர்ச்சியான தமிழர் விரோத நடவடிக்கைகளும் அடாவடித்தனங்களும் ஒடுக்கு முறைகளும் தமிழகத்தில் எதிரொலித்தன தமிழகம், புதுடில்லியை நெருக்கியதால் இந்திய மத்திய அரசின் பார்வை இலங்கை மீது திரும்பத் தொடங்கியது. இது இரண்டாம் பட்சக் காரணம்தான். சந்தேகத்துக்கிடமான தமிழ் தீவிரவாத இளைஞர்களைச் சுட்டு கொன்றுவிட்டு, நீதி விசாரணையின்றிச் சடலங்களைப் புதைக்க படையினருக்கு அனுமதி வழங்கும் வகையில் ஜே.ஆர்.அரசு கொண்டு வந்த சட்டம், அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியை ஆத்திரப் படுத்தியது. அவர் இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்ததோடு தமிழீழத் தீவிரவாதக் குழுக்களுக்கு உதவி, ஒத்தாசை, ஆயுதப் பயிற்சி, ஆயுதங்கள், நிதி எல்லாம் வழங்கினார். இருந்தாலும் அன்றிலிருந்து இன்றுவரை இலங்கையின் இறைமை, ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு பேணப்பட வேண்டுமென்று இந்தியா வலியுறுத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இலங்கையின் வடக்கு - கிழக்கில் தமிழீழம் பிரிக்கப்பட்டால், அதன் எதிரொலிகள் தமிழ் நாட்டைத் தாக்கி இந்தியாவின் பிரதேச ஒருமைப்பாட்டுக்குச் சவால் விடுமென்று இந்திய அரசுக்கு நன்கு தெரியும். 1960களின் முற்கூற்றில் இந்தியை மத்திய மொழியாகவும் உத்தியோகபூர்வ மொழியாகவும் இந்திய மாநிலங்களில் அமுல்படுத்த மத்திய அரசு முனைந்தபோது, தமிழகமே முதன் முதலாகப் பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்தது. இக் கோரிக்கையை முன்வைத்த தி.மு.க. தலைவர் அண்ணாத்துரை இந்திய - சீன எல்லை யுத்தத் தின்போது நாடு பிரிவினைக் கோரிக்கையை வாபஸ் பெற்றுக் கொண்டார். ஆனால் அதற்கு முன்னரேயே தெலுங்கான போராட்டம் நடத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை - இந்திய உறவுகளுக்கு அப்பால், சர்வதேச பகைப் புலனிலும் இப் பிரச்சினையை நாம் ஆராய வேண்டும். 1983 இன சங்காரத்திற்கு முன்னரேயே இந்திய மத்திய அரசின் பார்வை இலங்கையை நோக்கித் திரும்பத் தொடங்கி விட்டது. 1981ஆம் ஆண்டளவிலேயே இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் இலங்கை முக்கியத்துவம் பெறத் தொடங்கிவிட்டது. இந்திய சார்பு, மற்றும் சோசலிஸ நாடுகளுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திய திரு-திருமதி பண்டாரநாயக்காக்களின் பின்னர் 1977இல் ஆட்சி பீடமேறிய ஜே.ஆர்.அரசு, அமெரிக்க சார்பு - மேற்கு நாட்டுச் சார்பு நிலைப்பாட்டினை எடுத்தது.

உலகம், சோவியத் ரஷ்ய முகாம் - அமெரிக்க முகாமென இரண்டாய் பிளவுபட்டிருந்த காலகட்டம் அது. இந்தியா, சோவியத் ரஷ்யாவின் நெருங்கிய நட்பு நாடாக விளங்கியது. பாதுகாப்பு ஒப்பந்தம் கூடச் செய்யப்பட்டிருந்தது. பாகிஸ்தான் வலுவான அமெரிக்க நேச அணியாகத் திகழ்ந்தது. அமெரிக்காவுக்குச் சார்பாக நேட்டோ என்றழைக்கப்படும் வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகளும் சோவியத் சார்பில் வார்சோ ஒப்பந்த நாடுகளும் இராணுவ அமைப்புகளைக் கொண்டிருந்தன. இந்தியாவும் பாகிஸ்தானும் ஏற்கனவே மூன்று யுத்தங்களைச் சந்தித்திருந்தன. இலங்கையிலும் அமெரிக்க சார்பு அரசாங்கம் ஆட்சி பீடமேறியது.

இது இந்தியாவுக்கு மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்தியது. இலங்கையின் இனப் பிரச்சினை மோதல் சம்பந்தப்பட்ட விடயத்தில் பாகிஸ்தான், இஸ்ரேல், அமெரிக்கா ஆகியவற்றின் இராணுவத் தலையீடுகளும் இடம்பெறத் தொடங்கியிருந்தன. அமெரிக்க - சோவியத் ரஷ்யப் பனிப்போரின் விளைவாக இரு நாடுகளுமே தத்தமக்கெனச் செல்வாக்குப் பிராந்தியங்களை ஏற்படுத்தும் போட்டியில் ஈடுபட்டிருந்தனர். பாகிஸ்தானிலிருந்து துருக்கிவரை அமெரிக்காவின் செல்வாக்கு வளர்ந்திருந்த காலகட்டத்தில்தான் கிழக்குப் பாகிஸ்தான் யுத்தத்தின் மூலம் பங்களா தேசமாகப் பிரிந்தது. 1972இல் பங்களாதேஷ் தோற்றம் பெற்றது. அது சோவியத் சார்பு முகாமோடு சேர்ந்து கொண்டது. இந்தியாவில் இந்திரா காந்தி, பாகிஸ்தானில் ஸியா - வுல் - ஹக், பங்களாதேஷில் முஜிபுர் ரஹ்மான், இலங்கையில் ஜே.ஆர்., சோவியத் ரஷ்யாவில் பிரஸ்நேவ் அவருக்குப் பின்னர் மிக்கேயில் கொர்பச்சேவ், அமெரிக்காவில் ரொனால்ட் றீகன் ஆகியோர் ஆட்சிப் பொறுப்பிலிருந்தனர். இந்த நிலையில் இந்தியாவின், ஐக்கியத்துக்கும் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் சவால் விடுவதற்கான சர்வதேச முயற்சிகளும் முடுக்கி விடப்பட்டிருந்தன.

அத்துடன் தமிழகம் உட்பட மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலுள்ள தமிழ்ப் பகுதிகளை உள்ளடக்கும் பரந்த தமிழ்ப் பிரதேசக் கோரிக்கையை புலிகள் வைத்திருந்தனர். எனவே இலங்கை விவகாரத்தில் இந்தியா ஈடுபாடு காட்ட வேண்டிய கட்டாயத் தேவை அதற்கு ஏற்பட்டிருந்தது. இலங்கையில் பிரதேச ஒருமைப்பாட்டையும் இந்தியாவின் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் பொறுப்பை, இந்தியா தனது பொறுப்பாக ஏற்றுக் கொண்டிருந்தது. இதனால்தான், இந்திராகாந்தி வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவையும், இந்திய கொள்கைத் திட்டமிடல் ஆணைக் குழுவின் தலைவர் பார்த்தசாரதியையும் கொழும்புக்கு அனுப்பி இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சித்தார். இந்திராகாந்தியின் பணியை அவரது மறைவுக்குப் பின்னர் ராஜீவ் காந்தி முன்னெடுத்துச் சென்றார். ராஜீவின் முயற்சியால் நடைபெற்ற திம்புப் பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்தது. 1986இல் முன்வைக்கப்பட்ட டிசம்பர் 19ஆம் திகதிய யோசனைகளும் முறியடிக்கப்பட்டன. ராஜீவின் முன் முயற்சியால் மேற்கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தமும் புலிகளினதும் ஜனாதிபதி பிரேமதாசாவினதும் கூட்டு முயற்சியால் தோற்கடிக்கப்பட்டது. 1400 ஜவான்களை இலங்கை மண்ணில் இழந்த இந்தியா, கையைச் சுட்டுக்கொண்ட நிலையில் வந்தவழியே பின்வாங்கிவிட்டது. இக் காலகட்டத்தில்தான் சோவியத் ரஷ்ய அதிபர் முன்வைத்த 'கிளாஸ்நொட்', 'பிரெஸ்றொய்கா' ஆகிய இரு கொள்கைகளும் சோவியத் ரஷ்யாவை துண்டு துண்டுகளாகத் தகர்த்து விட்டதென சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



இலங்கை – இந்திய ஒப்பந்தம் 19 வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி பிற்பகல் மூன்று மணிக்குக் கைச்சாத்திடப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்றனர். முன் வரிசையில் இடமிருந்து வலமாக இந்திய அமைச்சர்கள் பி.சிதம்பரம், கே.நட்வார்சிங், பி.வி.நரசிம்மராவ், இலங்கை அமைச்சர்களான ஏ.சீ.எஸ். ஹமீத், கே.டபிள்யூ தேவநாயகம், காமினி திசாநாயக்கா ஆகியோர் காணப்படுகின்றனர்.

1987ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, 19 வருடங்கள் கடந்துவிட்ட இந்த நிலையில், இந்திய மத்திய அரசு இலங்கை இனப் பிரச்சினையில் ஈடுபாடு காட்ட வேண்டுமென்ற கோரிக்கை தமிழகத்திலிருந்து விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தான் இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காணமுடியாதென்றும் இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க இந்தியா உதவுமென்றும் பெங்களூரில் ஊடகவியலாளர் மத்தியில் பேசிய இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். இதேவேளை, புலிகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, அந்த இயக்கம் பற்றிப் பேச விரும்பவில்லையென்றும் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் புதுடில்லியில் நடத்திய பேச்சுவார்த்தையின்போது, இலங்கை இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார். இவற்றை வைத்துப் பார்க்கையில் இந்தியா கடந்த காலத்தைப் போன்று, இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலையிடா விட்டாலும் புலி இயக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை தொடர்ந்தும் கடைப்பிடிக்குமென்று திட்டவட்டமாகத் தெரிகிறது. அப்பாவி மக்கள் மீதான தாக்குதல்களைப் புலிகள் நடத்தினாலும் படையினர் நடத்தினாலும் அது கண்டிக்கப்பட வேண்டியது என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக இருக்கிறது. கெப்பிட்டிகொல்லாவ படுகொலை போன்று பேசாலை, வங்காலை ஆகிய இடங்களில் இடம்பெற்ற படுகொலைகளையும் இந்தியா கண்டிக்கிறதென்பது தெளிவானது.

மனிதப் படுகொலைகளை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுக்கும் அதே நேரத்தில், அதற்குச் சமாந்தரமாக இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்பதே இந்தியாவினதும் தமிழக அரசினதும் நிலைப்பாடாகயிருக்கிறது. புலிகள், தமிழகத்திற்குள் ஊடுருவக் கூடாதென்பதற்காக தமிழக அரசு கண்காணிப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தியிருக்கிறது. புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக கடலோர ரோந்து நடவடிக்கைகளை மாநில அரசும் மத்திய அரசும் அதிகரித்திருக்கின்றன. இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடும் நோக்கம் இல்லையென்றும் தமிழ் மக்களுக்கு கௌரவமான, கண்ணியமான தீர்வு வழங்கப்பட வேண்டுமென்றும் இந்தியா கூறியிருப்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். எனவே புலிகள் இயக்கத்தையும் இலங்கை வாழ் தமிழ் மக்களையும் இந்திய மத்திய அரசும் தமிழக மாநில அரசும் பிரித்துப் பார்ப்பதை கவனத்திற் கொள்ளவேண்டும்.

மயிலே மயிலே இறகு போடு, இறகு போடு என்று கேட்டு கொக்கினைப் போல் ஒற்றைக் காலில் நின்று தவம் புரிவதால் புலிகள் இயக்கம் வழிக்கு வரப் போவதில்லை. இதனையே அவர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் வன்செயல்கள் நிரூபிக்கின்றன. இலங்கையைப் போன்று இந்தியாவும் பயங்கரவாதப் பிரச்சினைக்கு முகம்கொடுத்த - கொடுத்துவரும் நாடென்பதால், இந்தியாவின் ஆக்கபூர்வமான உதவியை இலங்கை எதிர்பார்க்கலாம்.

---

## ஊரிலிருந்து....



**எங்கட** மண்ணுக்குக் கிடைக்க இருந்த மிகப்பெரிய முதலீட்டு வளம் ஒன்று சத்தமில்லாமல் கை நழுவிப் போய்ட்டுது. முகத்தில வேதனை ஆதங்கத்துடன் மாஸ்டர் வந்தார். கடல் உணவு வகைகளைப் பதப்படுத்தி தகரத்தில அடைக்கிற மிகப்பெரிய கிழக்காசிய கொம்பனி ஒண்டு எங்கட வடபகுதி தீவுகளில ஒண்டில தொழில் தொடங்க இருந்திச்சினமாம். அரச கட்டுப்பாட்டுப் பகுதி எண்டாலும் ஒரு மரியாதைக்கு புலிகளுக்கும் தகவல் சொல்லுப்பட்டுதாம். அவ்வளவுதான், எங்கட ரேட் இவ்வளவு தாங்கோ எண்டு புலிகள் கேட்க அதுக்கு இன்னுமொரு பக்டரியே தொடங்கலாம் எண்டு துண்டக் காணம் துணியைக் காணம் எண்டு ஓடினவை இப்ப கேரளாவில ஆரம்பிக்கப் போயினமாம்.

அதுமட்டுமில்லை. விஷயத்தை, தங்கட அரசாங்கத்திண்ட காதிலையும் அந்த குள்ளமனவை போட்டபடியினால் அவையும் புலிகளை தடை செய்யிற வழியைத் தொடங்கீட்டினமாம்.

# வடக்கின் இயல்பு நிலைக்கு வேட்டுக்கள் வேண்டாம்!

அலசுவது

- மதியூகி -

**வடக்கில்** இயல்பு நிலையை உருவாக்குதல் என்பது இலகுவான வீடயமில்லை. வடக்கு என்று கூறும்போது யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலையை உருவாக்குவதாகும்.

அங்கு வாழும் மக்கள் தனியே பொருளாதார நெருக்கடிக்கு மட்டும் முகங் கொடுக்கவில்லை. பழிச்சொற்களுக்கும், கொலைக் குற்றங்களுக்கும், சட்டவிரோதச் செயல்களுக்கும் முகம் கொடுக்கிறார்கள். வடக்கு, கிழக்கில் வேறு எங்கும் இல்லாத படைகள் யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்றுள்ளன. பொங்கி எழும் மக்கள் படை, மக்கள் படை, எல்லாளன் படை, குளக்கோட்டன் படை, குலோதுங்கன் படை- இப்போது புதிதாக தமிழ் தேசிய தொழிற்சங்கக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் என்று நாளுக்கு நாள் ஒவ்வொரு பெயரில் மக்களின் இயல்பு வாழ்வுக்குக் குந்தகமான செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன. இதில் படைத்தரப்பு மீதான தாக்குதல்களும், மக்களை பணிப்புறக்கணிப்பு செய்ய வேண்டுமென்றதுமே தொடர்ச்சியான நடவடிக்கைகளாக இருக்கின்றன. இதில் - மேற்குறிப்பிட்ட பெயர்களிலான துண்டுப்பிரசுரங்களும், பத்திரிகை அறிக்கைகளும், கைக்குண்டு




அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்திக்கச் செல்லும் மக்கள்.

வீச்சுக்களும், படுகொலைகளும் முக்கியமானவையாக இருக்கின்றன.

இவ்வாறு மக்களின் இயல்புவாழ்வைக் குழப்புகின்ற சம்பவங்களுக்கிடையில் அங்கு வாழும் மக்கள் மூன்று விதமான பிரச்சினைகளுக்கு அன்றாடம் முகங் கொடுக்கின்றனர். யுத்தத்தினால் நிரந்தரமாகப் பொருளாதாரத்தில் வீழ்ச்சி கண்டவர்கள், உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள், கடற்கோளால் பாதிக்கப்பட்ட மக்கள் என்று மக்கள் இருக்கையில், அந்த மக்களுக்கு உதவவோ, அவர்களின் நிரந்தரக் குடியேற்றங்களுக்கு உண்டான திட்டங்களை எடுக்கவோ, எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரை எவரும் எடுத்ததாகத் தெரியவில்லை.

ஆறாம் மாதம் தொடக்கம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்குத் தீர்வாக எத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார் என்று அமைச்சின் உயர் அதிகாரி ஒருவரைக் கேட்டபோது, அமைச்சரின் முக்கிய கவனத்துக்கு உட்பட்டிருக்கும் வீடயங்களாக போக்குவரத்து, மின்சாரம், குடி நீர், சுகாதாரம் என்பவை இருப்பதால் இந்த வீடயங்களில் மக்கள் நாளாந்தம் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கும், அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் முகமாக சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடனும், அதிகாரிகளுடனும் நேரடியாகத் தொடர்பு கொண்டு தீர்வுகளைக் கண்டுவருவதாகவும், சில வீடயங்களில் இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதிலும் மின்சாரம், போக்குவரத்துத் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் பயனாக சக்திவாய்ந்த இரண்டு மின்பிறப்பாக்கிகள் யாழ்ப்பாணத்துக்கு மின்சார சபையினால் அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்ற அதேவேளை, மேலதிகமாக பஸ் வண்டிகளும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவுள்ளன. இதேவேளை இந்த வீடயங்களை நடைமுறைப்படுத்துவதில் ஆளணிப் பற்றாக்குறையும் இருப்பது அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆகவே குடா நாட்டில் அரச அலுவலகங்களில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். இதற்காக ஏராளமான விண்ணப்ப படிவங்களும், தமக்கு நேரடியாகவே விண்ணப்பதாரிகளின் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்ததோடு, தான் அதுகுறித்து விரைவாக நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

அன்றாட மற்றும் அடிப்படைப் பிரச்சினைகளாக இனங்காணப்பட்ட மேற்படி வேலைத்திட்டத்துக்கு அப்பால், பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிலும், வறுமை காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், விதவைகள், அங்கவீனர்கள், அநாதைகள் ஆகியோருக்கும் இந்த இழப்பீடுகள் கிடைக்கவுள்ளன.

இதற்கு மேலதிகமாக இவ்வாறானவர்கள் சுயமாகவே தமது வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ளக் கூடிய விதத்தில் அவர்களுக்குப் பொருத்தமான சுயதொழில் வாய்ப்புகளும் ஏற்படுத்தப்படுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இதன் முதல் கட்ட சுயதொழில் முயற்சியாக சித்திரம், ஓவியம், சிற்பம் ஆகியவற்றில் ஆர்வமுள்ள அங்கவீனர்களுக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளத்திற்கு அருகில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. பயிற்சி வழங்கப்படும் காலப்பகுதியில் பயிற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வேலைத்திட்டங்கள் திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போதே யாழ். மத்திய பஸ் நிலையத்தின் பொது மலசல கூடம், சமூக சேவை அமைச்சரின் பணிப்புரைக்கமைய திருத்தம் செய்யப்பட்டு மக்களின் பாவனைக்கு கடந்த 19ஆம் திகதி முதல் திறந்து விடப்பட்டுள்ளது. அந்த பஸ் நிலையம் முன்னர் கைவிடப்பட்ட நிலையில் இருந்தபோது 2000ஆம் ஆண்டு, வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருந்தபோது திருத்திக் கட்டியதுடன், வீதிகளையும் செப்பனிட்டு மக்களின் பாவனைக்கு உகந்ததாகச் செய்திருந்தார் என்பது நினைவு கூரத்தக்கதாகும்.



அல்லைப்பிட்டியில் புதிதாக மின்கம்பங்களும், கேபிள்களும் இணைக்கும் காட்சி.

இவை இவ்வாறிருக்க, கடந்த ஐந்தாம் மாதம் அல்லைப்பிட்டியிலும், தீவகப் பகுதிகளிலும் ஒரே இரவில் நடைபெற்ற படுகொலைச் சம்பவங்களைத் தொடர்ந்து, இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தஞ்சம் புகுந்திருந்த அல்லைப்பிட்டி மக்களை, புலிகள் வன்னிக்குப் போகும்படி துண்டுப்பிரசுரங்கள் வாயிலாகவும், நேரடியாகவும் வற்புறுத்தியபோதும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அம் மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் விருப்பங்களைப் பெற்றதன் பயனாக அந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தினார். அப்போது அந்த மக்கள் தமக்கான பாதுகாப்புக்கு உத்தரவாதத்தையும், தமது அத்தியாவசிய தேவைகள் பற்றியும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். அதைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கு உலர் உணவு மற்றும் தொழில்களை மீளவும் ஆரம்பிக்க தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதோடு இப்போது மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, மின் கம்பங்கள் நடும்பணி நடைபெற்று வருகிறது. கொழும்பிலிருந்து வரவுள்ள இரண்டு மின்பிறப்பாக்கிகள் குறிப்பாக இந்தப் பகுதி மக்களின் மின்சாரத் தேவைக்கே


**அன்றாட மற்றும் அடிப்படைப் பிரச்சினைகளாக இனங்காணப்பட்ட மேற்படி வேலைத்திட்டத்துக்கு அப்பால், பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிலும், வறுமை காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், விதவைகள், அங்கவீனர்கள், அநாதைகள் ஆகியோருக்கும் இந்த இழப்பீடுகள் கிடைக்கவுள்ளன.**

பயன்படுத்தப்படவுள்ளதாக அறியமுடிகிறது. இது தவிரவும், பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம் போன்ற வீடயங்களிலும் கூடுதல் கவனம் எடுக்கப்பட்டிருப்பதாக அரச உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். துரிதமாக நடைபெற்று வரும் இந்தச் செயற்பாடுகளை முடக்கும் நோக்கத்தோடு யாழ்.குடாநாட்டில் இல்லாத தமிழ் தேசிய தொழிற்சங்கக் கூட்டமைப்பு எனும் அமைப்பின் பெயரால் கடந்த 23.06.06.ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் நடத்தும்படி பத்திரிகை அறிக்கை ஊடாகக் கேட்கப்பட்டிருந்தது. படுகொலைக்குப் பயந்த மக்கள் வீடுகளில் இருந்து விட்டார்கள். இது இயல்பு நிலையைக் குழப்பும் நடவடிக்கை என்று கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அன்றைய தினம் வேலணைப் பகுதிக்குச் சென்று, மக்களின் குறைகேள் செயலமர்வு ஒன்றை நடத்தினார். அதில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். தமது அவலங்களையும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதேபோல் கடந்த 26.06.06.ஆம் திகதி தொடக்கம் குடாநாட்டில் பணிப்புறக்கணிப்பைச் செய்யுமாறு அனாமதேய வேண்டுகோள் பத்திரிகை மூலமாக விடுக்கப்பட்டபோதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்க வழமையாக வருவதைப் போன்று நூற்றுக்கணக்கான மக்கள் அமைச்சரின் அலுவலகத்துக்கு வருகை தந்திருந்தனர். அந்தப் பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளும் பிரசன்னமாகியிருந்தனர். மறுபக்கத்தில் இராணுவக் கட்டளைத் தளபதி சந்திரசிறி, அரச அதிகாரிகளைச் சந்தித்து பணிப்புறக்கணிப்புச் செய்ய வேண்டாம் என்றும், அவ்வாறு நடந்து கொண்டால் அது மேலும் மக்களின் இயல்பு வாழ்வை நெருக்கடிக்குள் தள்ளும் நடவடிக்கையாகவே இருக்கும் என்றும் கேட்டுக் கொண்டார்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்...)

## அதிரடி அய்யாத்துரை



**ஆளும்** தரப்புக்கு அடுத்தடுத்து அதிர்ச்சி காத்திருக்கெண்டு சொன்னாலும் சொல்லிச்சினம், சொன்ன ஈரோஸ் பெரிய பாலாவின்ர வாய்க்குச் சீனி போட வேணுமுங்கோ.

முதல் அதிர்ச்சி கெப்பிட்டிக்கொல்லாவையில கொடுத்திச்சினம். 67 பேருக்குக் குண்டு வச்சிப் பிறகு வத்தளையில குண்டுகளோடை வந்திறங்கி அதிர்ச்சி கொடுத்திச்சினம். அது ஓயிறதுக்குள்ளேயே பன்னிப்பிட்டியவில மூன்றாம் நிலை உயர் இராணுவ அதிகாரிக்குக் குண்டு வச்சி கொலை செய்து, ஒரு பேரதிர்ச்சி கொடுத்திருக்கினம். இதின்ர தொடர்ச்சியாக அடுத்த அதிர்ச்சி எங்க நடக்கப் போகுதெண்டு பாதுகாப்புத் தரப்பும் - மக்களும் மண்டையைப் போட்டு உடைச்சுக் கொண்டிருக்கினம். தலைநகரிலதான் அடுத்த அதிர்ச்சி நடந்தாலும் நடக்குமெண்டு சில ஊகங்களும் உலா வரத்தான் செய்யுது. எது எப்புடி எண்டாலும், இனி குண்டு வெடிப்பும், கொலையளும் எண்டுதான் ஒவ்வொரு விடியலும் இருக்கப்போகுது.

உதில துன்பியல் சம்பவம் என்ன தெரியுமோ, பொதுமக்கள் படுகொலையாகுவதைப் பற்றிக் கவலைப்படாமல் குண்டுகளை வெடிக்க வைக்கப் போகினம்போல இருக்கு. ஏன் தெரியுமோ, அப்பதானே ரெண்டெழுத்தார் சொன்னமாதிரி சம்பவங்களின்ர பாதிப்பை நாடு பூராவும் உணரச் செய்ய முடியும். மகா ஜனங்கள் அறிமுகமில்லாதவை தொடர்பாக கூடுதல் விழிப்பாக இருக்கிறது நல்லதுங்கோ...

**போர்** நிறுத்தத்தை கண்காணிக்கவெண்டு வந்தவை பொறுப்பா ஒண்டையும் கண்காணிக்கவோ, கண்டு கொள்ளவோ இல்லையெண்ட விமர்சனம் எல்லாத் தரப்பாரிட்டையும் ஏராளமாக இருக்குதெண்டது உண்மைதான். ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்தவை அந்தக் குழுவில இருக்கக் கூடாதெண்டு ரெண்டெழுத்தார் பிடிவாதம் பண்ணுறது அவையின்ர சின்னப் புள்ளத் தனத்தைத் தான் காட்டுதெண்டு சொல்லினமுங்கோ. ஏன் தெரியுமோ, அவை ரெண்டெழுத்தாரை பயங்கரவாதிகள் எண்டு தடை செய்திருக் கேக்க, தாங்கள் நல்ல பிள்ளையள் எண்டு இவை ஊடாகக் காட்டி, அந்தத் தடையை இல்லாமல் செய்ய வழியைப் பாக்காமல், அவை இருக்கக்கூடாது எண்டு பிடிவாதம் பண்ணுறது மேல மேல, இவை தங்கள் மேல ஒரு ரெட் மார்க்கை ஏற்படுத்தத்தான் உதவும் எண்டு அறிஞ்சவை சொல்லினம்.

உந்த மாதிரிக் கருத்துக்களை சரியெண்டு ஏற்றுக் கொண்ட பேராசிரியர் கூட நான் எப்புடி உதுகளை அவைக்கு எக்ஸ்பிளைன் பண்ணுறது எண்டு, சொன்னவரிட்டையே கேட்டாராம். பாத்தியளோ, பேராசிரியர் என்னதான் தேசியம் பேசினாலும் தன்ர தேசியத்தை அவையளிட்டை இழந்துபோய்தான் இருக்கிறார் எண்டு அந்த இலக்கியக் கூட்டத்தில பேராசிரியரோடை பேசின இன்னொரு மூத்த இலக்கியவாதி சொல்லுறாருங்கோ...

"**பன்றியோடை** சேர்ற கன்றுக்குட்டியும் மனிசக் கழிவைத் தின்னுமாம்" எண்டுவினம். அதுபோலைத்தான் வடக்கு, கிழக்கில தமிழ் சனத்தின்ர தலையில சகதி அடிச்சுப்போட்டு பதவிக்கு வந்தவையின்ர போக்குகளும் இருக்குதுங்கோ. யாரைச் சொல்லுறன் எண்டது தெரியுதோ, உந்தக் கூத்தமைப்பு எம்.பி.மாரையும் அவையின்ர சார்பில உள்ளூராட்சி அதிகாரசபையில போட்டியிட்டு தெரிவானவையையும் தானுங்கோ. கூத்தமைப்புக்காரரும் எம்.பிப் பதவியைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு ஒண்டும் உருப்படியாச் செய்ய இல்லை எண்டால், உள்ளூராட்சி அதிகாரங்களைப் பெற்றுக் கொண்ட கூத்தமைப்புக்காரரும், சனத்துக்கெண்டு ஒண்டையும் செய்யாமல் தங்கட தங்கட பிஸினசுகளைப் பாத்துக்கொண்டு திரியினம். இப்புடியானவை எதுக்காக பதவிகளுக்கு வருகினம் எண்டு சனங்கள் கேக்குதுகளாம். இப்ப உப்பிடிக் கேட்டு என்ன பிரயோசனமுங்கோ. உதுதான் நடக்கப்போகுதெண்டு அப்பவே தலையில அடிச்சுக் கொண்டமே எண்டு வாத்தியார் சொல்லுறாருங்கோ. வாத்தியார் சொல்லிறது உண்மை தானுங்கோ. வேற யாரும் உந்தப் பதவிகளுக்கு வந்து சனத்துக்கு சேவை செய்திச்சினமெண்டால் சனத்துக்குப் போராட்ட குணம் இல்லாமப் போயிடுமெண்டாலதானாம் ரெண்டெழுத்தார் உப்பிடி ஒண்டுக்கும் உதவாதவையைப் புடிச்சு போட்டியிடப்பண்ணி பதவிகளில அமர்த்தினமாம்.

**முன்னமெல்லாம்** குடா நாட்டில ஹர்த்தால், ஆர்ப்பாட்டம் எண்டால் கொஞ்சப் பேர் காட்டின சண்டித்தனங்கள் என்ன! படைத்தரப்பின்ர சென்றிப் பொயின்டுகளுக்கு கல் எறியிறதும், டயர் கொளுத்திறதும் எண்டு குடா நாட்டை ஒரு பிரட்டு பிரட்டுவினம். உப்பிடியான கோஷ்டியள் எல்லாம் ஊரைக் குழப்பிப் போட்டு வன்னிக்குள் ஓடிட்டினமெண்டதை கடைசியாகப் போன சனிக்கிழமை நடந்த ஹர்த்தால் காட்டிக் குடுத்திட்டுதுங்கோ. உந்தக் கோஷ்டியள் ஓடிட்டினமோ இல்லாட்டில் ஒளிஞ்சு இருந்து கொண்டு அவை தான் கைக்குண்டுத் தாக்குதலையும், படுகொலைகளையும் செய்து கொண்டிருக்கினமோ எண்ட சந்தேகம் ஒருபக்கம் சனத்துக்கு இருக்குது. அதை ஒருபக்கம் விட்டுப் போட்டுப் பார்த்தால் கடைசியா நடந்த ஹர்த்தால் ஒரு உப்புச்சப்பில்லாம இருந்ததுங்கோ. ஆனால் சனம் வம்பு எதுக்கெண்டு அவை அவையின்ர இடத்தில இருந்திட்டினம். உதை ஊடகங்கள் நல்லா ஊதிப் பெருப்பிச்சு தங்கட விசுவாசத்தைக் காட்டிச்சினம் எண்டதுதானுங்கோ லேட்டஸ்ட் ஸ்பெஷல். அப்புடியெண்டால், உந்த ஊதுகுழல் ஊடகங்கள் இருக்கும் வரைக்கும் ரெண்டெழுத்தார் கிரவுண்டில இறங்காமலே ஒரு கடதாசியிலேயே ஹர்த்தால் நடத்திட்டுப் போகலாம் போல எண்டு நான் சொல்லயில்லையுங்கோ, சனம் சொல்லினம்.

**ஊடகமொண்டு** இருக்குதெண்டதுக்காக தங்கட இஷ்டத்துக்கு எழுதிறதும், சொல்லிறதும், நாட்டில தேவையில்லாத குழப்பங்களை ஏற்படுத்துது எண்டு அதிகாரத் தரப்பு எத்தனையோ தடவை எடுத்தச் சொல்லியும் எந்த ஊடகமும் ஏறெடுத்துப் பார்க்காமல், அதுக்கு ஒரு கொமன்ட், இதுக்கு ஒரு கொமன்ட் எண்டு பக்கச்சார்பான தங்கட வாசிப்பை வாய்கிழிய வாசிச்சுக் கொண்டிருக்கினம். உது நீண்ட காலத்துக்குச் சரிவராதெண்டிட்டு அதிகாரத் தரப்பார், முன்னர் அதிகாரத்தில் அம்மணி இருக்கேக்க இருந்த மாதிரியான கட்டுப்பாடுகளை மீளவும் கொண்டு வருவதைப் பற்றி யோசிக்கினமாம். உதைக் கேள்விப்பட்ட சில தமிழ் ஊடகங்கள் பதறிப்போய் உந்தச் சட்டம் வேண்டாமெண்டும், அது சுதந்திரமாக செய்திகளைச் சொல்ல தடையை ஏற்படுத்தும் எண்டும் குய்யோ முறையோ எண்டு கூச்சல் போடினம். சில பத்திரிகைகள். உந்த விசயத்தை ஆசிரியர் தலையங்கம் வரைக்கும் கூட முக்கியத்தும் கொடுத்து விமர்சிக்கினம். சரி, ஊடகத்துக்கு சுதந்திரமாக இயங்க உரிமை இருக்க வேணுமெண்டது நியாயம் தானுங்கோ. உந்த நிலைப்பாட்டையும் வேண்டுகோளையும் தனியே அரச தரப்பிற்ற மட்டும் முன்வைச்சு வேலைக்கு ஆகுமோ. மறுபக்கத்தில துப்பாக்கி கொண்டும் மிரட்டல் கொண்டும், உங்களை சுதந்திரமாக பக்கச் சார்பில்லாமல் இயங்க விடுகினமில்லை. உதுகளைப் பற்றி என்ன செய்யப் போறியள் எண்டதுக்கு யாரும் வாய் திறக்கினமில்லையுங்கோ. மடியில கனம் இல்லாட்டில் வீணா ஏனுங்கே. இவை பதற்றப் படுகினம் எண்டதுதான் என்ர கேள்வி. தாங்கள் சரியா நடக்கினமெண்டால் என்ன சட்டம் வந்தாலும் யாரும் ஒண்டும் செய்ய ஏலாதெல்லோ. தட்டிஸ் பொயின்ட்ஸிங்கோ,

**பார்ளிமெண்டுக்குள்ள** கூத்தமைப்புக்காரர் காட்டிற கூத்துக்கு ஒரு நாளைக்கு அவமானப்படுவினம் எண்டு நான் நினைச்சுக் கொண்டேயிருந்தன். அது இவ்வளவு சீக்கிரமே நடக்குமெண்டு நான் நினைக்கயில்லையுங்கோ எண்டு குருவியார் சொல்லேக்க, எனக்கு தமிழ் உணர்வு கொஞ்சம் துடிக்கத்தான் செய்தது.

இருந்தாலும், இவையும் கொஞ்சம் ஓவராத்தான் கொடுக்குக் கட்டிக்கொண்டு இங்கிதம் தெரியாமல் வாய்க்கு வந்தபடியெல்லாம் கதைக்கிறவையள். அது ஏன் சபைக்குள்ளேயே சண்டைக்குப் போறது. கோஷ்டி சேர்றது எண்டதை உந்தக் கூத்தமைப்புக்காரர்தான் கொண்டு வந்திச்சினம். முன்னம் ஒருக்கால் அமைச்சர் தேவமானவரை உதே கூத்தமைப்புக்காரர் தாக்கப் பாத்திச்சினமாம் எண்டு செய்தி வரேக்கை கூத்தடிச்சுக் கொண்டாடினதுக்கு, போன வாரம் சபையில நடந்த கைகலப்புகளும், கத்தல்களும் ரொம்பவும் கசப்பாகத்தான் இருந்திருக்கும். உதைத்தான் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் எண்டுவினமோ தெரியல்லை. திருவாணமலையிலை, அல்லைப் பிட்டியிலையும், யாழ்ப்பாணத்திலையும், மட்டக்களப்பிலையும் மன்னாரிலையும் தமிழ் சனங்கள் வகை தொகையில்லாமல் படுகொலை செய்யப்படேக்க ஏன் பொல்லாப்பு என்று ஒதுங்கி இருந்தவை கெப்பிட்டிக் கொல்லாவை மக்களுக்கு அஞ்சலி செலுத்த வேணுமெண்டு சிவப்புச் சட்டைக்காரர் கேக்கதான் உஷார் வந்திருக்கெண்டால் அது வம்பு இழுக்கிற நோக்கம்தானே எண்டு சில எம்.பி.மார் கேட்டிச்சினம். சரி, சபைக்குள்ள உந்தளவுக்கு பிரச்சினை போயிருக்கக் கூடாது எண்டதுதான் குருவியாரின்ர கவலையாக் கிடக்கு. உதைக் கண்டிச்சி யாரும் கடதாசி ஹர்த்தால் நடத்தயில்லையே. அவைக்கு, கூத்தமைப்புக்காரருக்கு நடந்தது பொலிரிக்ஸ் லாபம்தானோ எண்ட டவுட்டும் குருவியாருக்கு இருக்குதுங்கோ...

# கனவு!


**இந்தியாவின்** இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏழை முஸ்லிம் பெற்றோருக்கு மகனாகப் பிறந்து, மேற்படிப்பைத் தொடரக் கூட பணமில்லாமல் வறுமையிலிருந்த ஒருவர், இன்று, இந்தியத்திருநாட்டின் மதிப்புக்குரிய ஜனாதிபதியாக இருக்கிறார் என்றால். அது அவர் காணாத கனவுதான். ஆனால் பாரத மாதா கண்ட கனவு நிறைவேறியிருக்கிறது. என் விருப்பத்துக்குரியவர்களில் ஒருவரான இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் கண்ட கனவு வானில் பறக்க வேண்டும் என்பதுதான். ஒரு விமானியாக தொழில் பார்க்க வேண்டும் என்ற கனவோடு போராடிய அந்த இலட்சிய புருஷன், விமானியாகாத போதும், அவர் கண்டுபிடித்த ஏவுகணைகள் இந்தியாவின் கௌரவத்தை பாதுகாத்துக்கொண்டு அவருக்காக வானில் பறந்தன. இந்திய அணுகுண்டின் தந்தையானார். இன்று இந்தியாவின் விஞ்ஞானிகளுக்கெல்லாம் விஞ்ஞானியாக வாழ்கிறார். சிறுவர்களை நேசிக்கும் அந்த மேதை, சிறுவர்களிடம் கூறுவதெல்லாம் நாளையைப் பற்றி கனவு காணுங்கள் என்பதுதான்.

கனவுகளைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? சுயமிழந்த தூக்கத்தில் ஞாபகத்துக்குப் பிடிபடாத ஒரு மாயத்திரையில் என்னென்னவோ காட்சிகள் ஒரு திரைப்படம் போல் வந்து போகின்றன. சில கனவுகளை மீண்டும் மீண்டும் ஞாபகப் படுத்தியும் காணமுடிகிறது. அவற்றை விடிந்ததும் மற்றவர்களுக்கும் ஒரு சினிமாக் கதைபோல் சொல்லமுடிகிறது. சில கனவுகளை எவ்வளவு முயற்சி பண்ணியும் ஞாபகப் படுத்த முடிவதில்லை. நான் சில கனவுகளை முதல் நாள் கண்டதைப் போலவே இரண்டாம் நாள் இரவிலும் கண்டிருக்கிறேன்.

எனக்கு அநேகமாக வருகின்ற கனவெல்லாம் நான் சைக்கிளில் விழுவதுபோலவும், பாம்பு துரத்துவது போலவும், எங்கேயோ செத்த வீடு நடப்பதுபோலவும், புதிதான ஒரு இடத்துக்கு நான் போயிருப்பதுபோலவும் தான் இருக்கும். அந்தக் கனவுகளில்




பாம்பு துரத்தினாலோ, யாரும் அடிக்கத் துரத்தி னாலோ வேக மாக ஓடமுடிவதில்லை. அந்தப் பயத்திலேயே கனவைத் தடைப்படுத்திக்கொண்டு நித்திரையையும் தடைப்படுத்திக் கொண்டு நடுநிசியில் விழித்துக் கொள்வேன். அநேகமானவர்களுக்கு இதுபோன்ற கனவுகள் தான் அதிகமாக வருவதுண்டு என்று நினைக்கிறேன். சிலர் கனவு



தருவது
-தேசன்

கண்டு வாய் புலம்புவார்கள். எனது அப்பாவுக்கு அதுதான் வாடிக்கை. ஆழ்ந்த நித்திரையில் பற்களைப் போட்டு நறநறவென்று கடிப்பார். இல்லாவிட்டால் சங்கேத பாஷையில் எதையாவது வாய் உளறுவார். அப்பாவுக்கும் சரி எனக்கும் சரி எங்களைப்பற்றிய அம்மாவின் கனவுகளுக்குப் பயம். இப்படித்தான் ஒரு நாள் நித்திரையில் இருக்கும் போது அம்மா என்னைத் தட்டி எழுப்பி வீட்டுக்கு வெளியே கூட்டிக் கொண்டு வந்து சிறுநீர் கழிக்கும்படிச் சொல்லி அந்த ஈரமண்ணை அள்ளி புளிய மரப்பக்கமாக இருக்கும் எங்கள் வளவின் கேட்பக்கமாக வீசி எறிந்துவிட்டு தண்ணீர் கொண்டு எனது முகத்தைக் கழுவிவிட்டு பின்னர் போய் படுக்கும்படி சொன்னார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்போது எனக்கு பத்து வயதிருக்கும் என்று நினைக்கிறேன். அடுத்த நாள் அம்மாவிடம் அதுபற்றி கேட்டபோது, முன்னைய நாள் நான் எங்களூர் ஆஸ்பத்திரியில் இருக்கும் நாவல் மரத்தில் ஏறி விளையாடிவிட்டு, சவக்காம்பிரா பக்கமும் போய் விளையாடிவிட்டு வந்தேனாம். அங்கு இருந்து ஏதோ பிசாசு என்னைப் பின் தொடர்ந்து வந்துள்ளதாம். அந்தக் காட்சி அப்பிடியே அம்மாவுக்கு கனவில் வந்ததாம். அந்தப் பிசாசை விரட்டத்தான் அம்மா அப்படிச் செய்தாராம் என்று அம்மா சொல்லவும், அன்றைக்குப் பிறகு நான் எங்கு போய் விளையாடினாலும் அம்மாவின் கனவில் வந்து விடக்கூடாது என்பதற்காக சாமிகளைக் காவல் நிற்கும்படி கும்பிட்டு விட்டுத்தான் தூங்கப் போவேன். இதைப் போல் சிலர் கனவு கண்டு விட்டு யாரிடமாவது சொன்னால், அதைக் கேட்பவர்கள் உடனடியாகச் சொல்வார்கள், அது நேத்திக்கடன் செய்ய வேண்டும் அல்லது ஏதோ நல்லதோ, கெட்டதோ நடக்கப் போகிறது கவனமாக இருக்க வேண்டும் என்று எதையாவது சொல்வார்கள். இதில் நன்மைகள் நடப்பது போல் கனவு கண்டால் அதை யாரிடமும் சொல்லக் கூடாது என்பார்கள், ஏன் என்றால் அது நடக்காமல் போய் விடுமாம்.

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெவ்வேறு இரண்டு கனவுகளில் இயேசுநாதரையும் முருகனையும் தனித் தனியாகக் கண்டிருக்கிறேன். அவர்கள் தங்க நிறத்தில் வானத்தில் தெரிவார்கள். நான் நிற்பது ஒரு கோயிலாக இருக்கும். ஒரு சில பக்தர்களும் என்னோடு நின்று வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். இப்படி நான் கண்ட கனவுகளுக்கு என்ன அர்த்தமென்பதோ அதற்குப் பிறகு அந்தக் கனவுகளின் பலனாக எனக்கு என்ன நடந்தது என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. அதே போல் ஒருநாள் நான் தங்கியிருந்த வீட்டில் 'கத்தி' ஒன்று தொலைந்து விட்டது. எல்லோரும் தேடினோம் கிடைக்கவில்லை.

அந்த நாள் இரவு என் தூக்கத்தில் ஒரு கனவு. அதில் அந்தக் கத்தி அந்த வீட்டுக்குப் பின்பக்கமாக இருக்கும் பெரிய வேம்பு மரத்தில் கொத்தியவாறு இருக்கிறது என்று.

அடுத்த நாள் விடியவும் நான் சென்று பார்த்த போது கனவில் கண்டதைப் போலவே கத்தி இருந்தது. இந்தக் கனவு இன்று வரை எனக்குள் ஒரு பரவசத்தையும், ஆச்சரியத்தையும் தந்து கொண்டிருக்கிறது. இந்தக் கனவு ஞாபகம் வரும் போதெல்லாம் என் அம்மாவின் கனவுகளும் வந்துவிடும்.

கனவுகள், நடுநிசியில், அதிகாலையில் - பகல் பொழுதில் தோன்றுகின்றன. இதில் பகல் கனவுகள் உதவாதவை என்கிறார்கள், நடுநிசிக் கனவு தூக்க மயக்கத்தில் வருகிறதாம், அதிகாலையில் காணுகின்ற கனவுகள் முக்கியமானவை. அவை சில நேரம் நடந்து விடுமாம்.

எல்லாம் சாத்திரங்களைப் போல நம்பிக்கையோடு ஒட்டிப் போய் விடுகின்றன.

யாரையாவது நினைத்துக் கொண்டு படுத்தால் அவர் கனவில் வருவார் என்று சொல்வார்கள். எனக்கு அப்படி யாரும் வந்ததில்லை. என் மனைவியின் கனவில் ஒவ்வொரு நாளும் நான் ஆஜராகி விடுகின்றேனாம். மனைவி சொல்லும்போது சிரிப்புத்தான் வரும். என் கனவில் நான் வந்தேனா என்று என் மனைவி கேட்டுவிட்டால் நான் அகப்பட்டு விடுவேன். எனக்கு கடந்த நான்கு ஐந்து வருடங்களாக கனவு காணுகின்ற பாக்கியம் மிக அரிதாகத்தான் இருக்கிகிறது. என் மனைவியை நான் நினைத்துக் கொள்கிறேனோயில்லையோ என்று மனைவி நினைத்தாலும் எனக்குத்தான் தெரியும் எனக்கு நித்திரை போதாதென்று. எட்டு மணித்தியால நித்திரை என்பது எனக்கு வாய்ப்பதேயில்லை.

கனவுகள் வருவது பற்றி நடத்தப்பட்ட ஆய்வுகள் இன்னும் முடிவு பெற்றதாக இல்லை. மனதினுடைய ஆழத்தில் புதைந்து கிடக்கும் எண்ணங்களும், கற்பனைகளும், ஆசைகளும் தன்னிலை மறந்த தூக்கத்தில் மூளை மீட்டிப் பார்க்கிறதே கனவு என்கின்றனர். நாம் உண்ணும் உணவு ஜீரணமாகும்போது ஏற்படும் இரசாயன மாற்றங்கள் காரணமாகக் கனவுகள் தோன்றுவதாகவும் சொல்கிறார்கள், நாம் பார்த்த காட்சிகள் மூளை ஓய்வெடுக்கும்போது ஞாபக நரம்புகளில் இருந்து அழிந்துபோகும் போது கனவுகளாகத் தெரிகின்றன என்றும் சொல்கிறார்கள். இப்படிக் கனவுகள் வருவதற்கு என்ன காரணம் என்ற தேடல் தொடர்கிறது. அதனூடே கனவுகளைத் திரைப்படங்கள் போல் பதிவு செய்துகொள்ள முடியுமா என்ற ஆய்வும் நடந்து கொண்டிருக்கிறது. கனவுகளைப் பதிவு பண்ண முடிந்தால் எப்படியிருக்கும்?. அது சாத்தியமானால் அந்தக் கருவியை வேண்டி முதலில் என் மனைவி காணுகின்ற கனவுகளைப் பதிவு செய்ய வேண்டும். ஏனெனில் என்னைப் பற்றி நான் கனவு காண்பதை விடவும் என் மனைவி கனவு காண்பது தான் அதிகம். கட்டுப்பாடுகளற்ற கனவுத் தேசத்தில் உங்கள் கனவுகள் முடியுமான பரப்பெங்கும் விரியட்டும்.

கலாம் கனவு காணச் சொல்கிறார் என்பதற்காக படுக்கையிலேயே கிடந்துவிடாதீர்கள். அவர் அந்தக் கனவைச் சொல்லவில்லை. அவர் உறுதியான முயற்சி, கடின உழைப்பு, சரியான அணுகுமுறை, தெளிந்த பாதை, இரும்பு நிகரான துணிவு இவை அனைத்தையும் தனக்குள்ளே ஏற்படுத்திக் கொள்ளும் ஒருவர் தியான நிலையில் எதிர்காலம் பற்றியும் தேசம் பற்றியும் ஆக்கபூர்வமான கனவு காணச் சொன்னார். இனி நீங்களும் கனவு காணுங்கள்.

---

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*
முரசு விமர்சனம்
தினமுரசு வாரமலர்
த.பெ. இல - 1772
கொழும்பு.




## செய்தியின் தரத்தைக் கவனிக்குமா தென்றல்?

இலங்கையில் மிகப் பழைய வரலாற்றைக் கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 'தென்றல்' அலைவரிசை இலங்கையில் மட்டுமன்றி, இந்தியாவிலும் அதிகமான வானொலி நேயர்களின் அபிமானத்தைப் பெற்றதொரு வானொலிச் சேவையாகத் திகழ்கின்றது. காலத்திற்கு ஏற்றவகையிலும் புதிய புதிய நிகழ்ச்சிகளை மிகத் திறமையாகத் தொகுத்து வழங்குவதில் தென்றலுக்கு நிகர் தென்றலேதான். மிகவும் அனுபவம் மிக்க, திறமையான அறிவிப்பாளர்களையும், தயாரிப்பாளர்களையும் உருவாக்கி, உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் புகழை ஒலித்தோங்கச் செய்துள்ள தென்றல், நாளுக்கு நாள் பெருகிவருகின்ற தனியார் வானொலிச் சேவைகளுடன் போட்டிபோட்டு வீறுநடை போடுவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

எனினும் காலங்காலமாக எமது முதியவர்கள் முதல் இன்றைய தலைமுறையினர் வரை விரும்பிக் கேட்கும் செய்திச் சேவையை ஒலிபரப்பிவரும் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் 'தென்றல்' சேவையின் செய்தி ஒலிபரப்பின் தரம் கெட்டுப்போனது மிகவும் மனவேதனைக்குரியதாகும். செய்தியைப் பகுதி பகுதியாக உடைந்து உள்நாட்டுச் செய்தி, வெளிநாட்டுச் செய்தி, விளையாட்டுச் செய்தி என்று ஒலிபரப்புவதுடன் அதிகமான விளம்பரங்களையும் செய்திக்கு மத்தியில் ஒலிபரப்பி அதிக நேரத்தை வீண்விரயம் செய்வதால், செய்தியின் சுவை குறைந்துவிட்டது. எனவே இவ்விபரங்களைக் கவனத்தில் கொண்டு முன்னைய காலங்களில் ஒலிபரப்பியதைப் போன்று ஒரே தடவையில் சுவைபட எல்லாச் செய்திகளையும் ஒலிபரப்பினால் அது மிகவும் வரவேற்கக் கூடியதாகவிருக்கும். இதனைக் கவனத்திலெடுக்குமா தென்றல்?

*-முர்சிதா றஊப், மருதமுனை - 06.*




# மலையாள மாந்திரீக சக்தியின் வெற்றிகள்

இலங்கையில் மாந்திரீகத் துறையில் சுடர்விட்டு நிருபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம் என்றால் அது எமது நிறுவனம் மட்டுமே! வாங்கும் பணத்திற்கு பற்றுச் சீட்டு வழங்குவது என்றால் அது நாம் மட்டுமே! காரணம் தெட்டத் தெளிவான திடமான மாந்திரீக சித்தமே!

இதையொட்டி தினமும் எல்லா தினசரி பத்திரிகைகளிலும் தொலை காட்சியிலும், வானொலியிலும் விளம்பரம் செய்வதென்றால் எமது சேவையே! என்பதற்கு எடுத்து காட்டாக எல்லா வெளிநாட்டவர்களுக்கும் அவர்கள் எத்திசையில் வசித்தாலும் கடல் கடந்து செயல்படும் வண்ணம் அவரவர் முகவரியில் நாம் நேரடியாக மூன்றே நாளில் மாந்திரீக பொதிகளைக் கையளிப்பது என்பது எமது நிர்வாகத்தின் சிறப்புத் தன்மையே!

நான் வெளிநாட்டுக்குச் செல்லாமலேயே அனைத்து உலக மக்களுக்கும் தொலை பேசியில் என்னுடன் தொடர்புகொள்பவர்களுடன் அவரவர்க் குறைகளைக் கேட்டறிந்து ஏனோ, தானோ என்று இல்லாது தெட்டத் தெளிவான சேவை செய்வதாலேயே எமது நிறுவனம் நம்பிக்கை வாய்ந்த ஒரு வரையறுக்கப்பட்ட (Liability) கம்பனி நிறுவனமாக திகழ்கிறது. எத்தனை பேரிடம் பரிகாரம் செய்தாலும் கடைசியில் என்னிடம் வருவது என்பது நான் கண்ட உண்மையே! என்னிடம் வருவதற்கு உங்களுக்கு ஸ்ரீ துர்க்கா தேவியின் தேவ சித்தமும் அவசியமே! நான் ஒரு வேலையைப் பாரம் எடுக்கும் போது, அவர்களின் ஜாதகத்தை அக்கு வேறு ஆணி வேறாகப் பரிசீலனை செய்த பின்பே வேலைகளை ஆரம்பிப்பேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கு ஒப்ப நீரிழிவு நோயில் இருந்து பூரணமாக விடுதலை பெற, ஆண்கள் - பெண்கள் இரு பாலாரும் ஆஸ்த்மா நோயிலிருந்து விடுபட, மூல ரோகம் தீர, இளம் நரை போக்க, கூந்தல் அடர்த்தியாக வளரச் செய்ய, விசேடமாக ஸ்திரி - புருஷ வசியம், மூன்றே நாளுக்குள், விட்டுப் பிரிந்த கணவன் - மனைவி ஒன்று சேர, ஓடிப்போனவர் தேடி வர, கணவன் மனைவி தாம்பத்திய உறவு குறைப்பாட்டை நிவர்த்தி செய்ய, ஆண்மை குறைபாட்டில் இருந்து சந்தோஷம் பெற, தாமதிக்கும் திருமணம் தங்கு தடையின்றி நடக்க, திருமண தோஷம் அகல, குழந்தை பாக்கியம் கிட்ட, பூதம் காத்த காணி பூமி தோஷம் அகன்று, காணிகளை விற்பனை செய்ய, கல்வியில் சித்தி பெற, வெளிநாட்டுப் பிரயாணத் தடை நீங்க, வெளிநாட்டில் நிரந்தர வதிவிட வசதி கிட்ட வேளாண்மை செழிக்க, குடும்பத்தில் ஒற்றுமை நிகழ, தன் பிள்ளைகள் தாய் தந்தை பேச்சைக் கேட்டு திருந்தி வாழ, குபேர வாழ்வு பெற, லட்சுமி கடாட்சியம் கிட்ட, ஞாபக சக்தி பெற, மனம் விரக்தியடைந்தவர்கள் மனப் படபடப்பு, பதற்ற நிலை, கை, கால் நடுக்கம், இரவில் பயந்து எழுதல், மனப் பேதம் தீர, சூனியம் அகற்ற, மருந்தீட்டல் அகலப்பண்ண அத்துடன் அருள் வாக்கு பெற, அருள் ஞானத்தில் கூறும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை. நடப்பது, நடக்கப்போவது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, எந்த மாதம் நீங்கள் எண்ணிய எண்ணங்கள், எண்ணியபடி சரிவரும் என்று தெரிந்து அறிந்து செயல்பட இந்த அருள் ஞான சித்த வாக்கு கை கொடுக்கும்.

எமது ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் மாதம் தோறும் மாதக் கடைசியில் நடைபெறும் அக்கினி குண்டல யாக பூசையில் கலந்து கொண்டால் சகல பாவ தோஷ விமோசனம் கிட்டும்.

"என்னிடம் தீய வேலைக்கு இடமில்லை"
நல்லதை நினைப்போம். நல்லதையே செய்வோம்;
ஓம் சக்தி - சக்தி - சக்தி

தேவையான நேரத்தில் தேவைப்படுபவர் -
உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி.
பேராசிரியர் டாக்டர் P.K.சாமி J.P.
(J.D.G.A.N)
Malaiyala Manthireeka Uchada Peedam.
162, Kotahena St, Colombo - 13.
T.P. 0112 342463 - 0112 342464
0112 2470615 - 0112 449110
0114 4613127
Fax - 0112 344831
E-mail - drpksamy@sltnet.lk

கிளை -
Sri Durkadevi Alayam,
No 33, Daily Fair, Nuwaraliya
T.P.052 2222508
052 2235097, 052 4490031, 052 4490035
052 2223093
Fax - 052 2223093
இன்னும் விபரங்களுக்கு எமது வெப் தளத்தை நாடுங்கள் :-
www.drpksamy .com

# அரசு - புலிகள் - நோர்வே அடுத்த நகர்வு என்ன?

கட்டுநாயக்காவிலுள்ள விமானப் படைத் தளத்திலிருந்து இஸ்ரேலியத் தயாரிப்பான கிபீர் யுத்த விமானம், கடந்த 23ஆம் திகதி காலை பயிற்சிக்காகப் புறப்பட்டது. இந்த ஜெற் விமானம் எழுப்பிய ஒலி, கட்டுப்பாட்டு எல்லையைத் தாண்டியதும் பாரிய குண்டு வெடிப்புக்களைப் போன்று பெரும் சத்தத்தை எழுப்பியது. இந்தச் சத்தம் பமுனுகமவுக்கு அண்மையிலுள்ள வத்தளைப் பகுதியெங்கும் கேட்டது. பமுனுகம கடலில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளையடுத்து, மூன்று கடற்புலிகள் மிதக்கும் குண்டுகளுடனும் நீச்சல் கருவிகளுடனும் பிடிபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கிபீர் ஜெற் விமானத்தின் 'சோனிக்' சத்தம், பெரும் பீதியை ஏற்படுத்தியிருந்தது. நீருக்குக் கீழ் குண்டொன்று வெடித்ததாக வானொலி நிலையங்கள் அறிவித்தன. விமானப் படைப் புலனாய்வு செய்து நிலைமைகளைக் கண்டறிவதற்காக நீர்கொழும்புக் கடலுக்கு அப்பால் ஹெலிகொப்டரொன்றினை அனுப்பி வைத்தது. ஆனால், ஏதாவது வித்தியாசமாக நடைபெற்றதா? இல்லையா? என்பதனை அதனால் கண்டுபிடிக்க முடியவில்லை. பின்னர் கிபீர் யுத்த விமானத்தின் பயிற்சி நடவடிக்கை பற்றியும் சோனிக் சத்தமே குண்டு வெடிப்புப் போன்று கேட்டதாகவும் விமானப்படையின் கட்டுப்பாட்டு அறை அறிவித்தது. பீதி அடங்கினாலும் உண்மையான அச்சுறுத்தலா அல்லது கட்டுக்கதையாவென்ற சந்தேகத்தை இச் சம்பவம் இரண்டொரு நாட்களாகக் கிளப்பி விட்டிருந்தது.

முழு நாட்டிலும் நிலவிய பீதி மனோபாவத்தை இச் சம்பவம் பிரதிபலித்தது. வன்னிக் காட்டுக்குள் வாழும் புலித் தலைவர், வன்செயல்களைக் கட்டவிழ்த்து விடத் தீர்மானித்ததும் மக்கள் பீதி மனோபாவத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். அதிலும், நாடு முற்றுமுழுதான யுத்தத்தை நோக்கித் திரும்பினால், தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படுமென்று தமிழ்ச்செல்வன் அறிவித்த பின்னர், குறிப்பாக இப் பீதி மனோபாவமே காணப்பட்டது. நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் வழங்கிய ஐந்து கேள்விகளுக்குப் பதிலளித்த புலிகள், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்கப் போவதாக உறுதியளித்திருந்தார்கள். ஆனால், கெப்பிட்டிகொல்லாவையில் பயணிகள் நிறைந்த பஸ்ஸொன்றின் மீது கிளைமோர்க் குண்டுத் தாக்குதல் நடத்திய பின்னரே அமைதியைக் கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ளதாக அறிவித்தார்கள்.

## முன்கூட்டிய அறிவித்தல்

புலித் தலைமையின் முன்னைய அறிவித்தலும் குடிமக்களுக்கு அவர்கள் பயிற்சி அளித்தமையும், முழு அளவிலான யுத்தம் வெடிப்பது தவிர்க்க முடியாததென அறிவுறுத்தியது. புலிகளின் சில முக்கிய நிலைகள் மீது பந்தோபஸ்துப் படையினர் நடத்திய மும்முனைத் தாக்குதலைப் பயன்படுத்தி, சமாதான முன்னெடுப்புகளிலிருந்து வெளியேறுவதற்கு அதனையொரு காரணாகப் புலிகள் பயன்படுத்தியிருக்க முடியும். சமாதான முனைப்புகளிலிருந்து வெளியேறப் புலிகள் இயக்கம் முயற்சிப்பதாகச் சில தினங்களுக்கு முன்னர்தான் அரசாங்க சமாதான செயலகம்கூட அறிவித்திருந்தது. ஆனால், புலித் தலைமையின் தீர்மானம் வேறுவிதமாக அமைந்திருந்தது. புலிகள், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அனுசரித்துச் செயற்படுவார்களென்று தமிழ்ச்செல்வன், நோர்வே தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கரிடம் தெரிவித்திருந்தார்.

ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த பின்னர், இரு தரப்புகளுக்கும் நோர்வே ஏற்பாட்டாளர்கள் ஐந்து கேள்விகளைச் சமர்ப்பித்திருந்தனர். நோர்வேயின் கேள்விகள் வருமாறு :

1. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை உறுதியாக அனுசரித்து நடப்பீர்களா?

2. நோர்வே அரசாங்கத்தின் தலைமை, ஒருங்கிணைப்பு, ஏற்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு பாகுபாடின்றிச் செயற்படுவதையும் அது தொடர்ந்து இருப்பதையும் அதன் செயற்பாட்டினையும் இரு தரப்பினரும் வேண்டி நிற்கின்றனரா?

3. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 3.9 ஷரத்திற்கேற்ப சகல சந்தர்ப்பங்களிலும் கண்காணிப்புக் குழு அங்கத்தவர்கள், ஊழியர்கள் மற்றும் கண்காணிப்புக் குழுவின் சொத்துக்கள் ஆகியவற்றிற்கு இரு தரப்புகளுமே பூரண பாதுகாப்பு உத்தரவாதத்தை அளிக்க முடியுமா?

4. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதன் தற்போதைய செயற்பாட்டு மட்டங்களைப் பேணுவதற்கு, அதற்குத் தேவையான பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்கக் கூடியதாக ஒப்பந்தத்தின் 3.5 ஆவது ஷரத்துக்கு திருத்தங்கள் செய்வதை இரு தரப்புகளுமே ஏற்றுக் கொள்ளுமா?

5. ஒப்பந்தத்தின் 3.5 ஆவது ஷரத்துக்கு திருத்தங்கள் செய்யப்படுமானால், திருத்தப்படுகின்ற தீர்வு இனம் காணப்பட்டு, தீர்மானிக்கப்பட்டு, அது பூரணமாக அமுல்நடத்தப்படும் வரையிலான ஆறு மாத கால இடைமாற்றுக் கட்டத்தில் கண்காணிப்புக் குழுவின் அங்கத்தவர்களுக்கும் சொத்துகளுக்கும் பூரண பாதுகாப்பு உத்தரவாதங்களை இருதரப்புகளும் அளிக்குமா?

***"புலிகள் தந்திரோபாயத்தை மாற்றுகின்றனர்" என்ற தலைப்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் சம்பந்தமான ஆய்வாளர் ரங்கா ஜெயசூரிய என்பவர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இந்தக் கட்டுரை கடந்த 25ஆம் திகதிய 'சண்டே ஒப்சேர்வர்' ஆங்கிலப் பத்திரிகையில் வெளியானது.***


ஐந்து கேள்விகளுக்குமே அரசாங்கம் 'ஆம்' என்று பதிலளித்திருக்கிறது. கேள்விகள்:

1,3,4 ஆகியவற்றிற்கு புலிகள் இணக்கம் தெரிவித்திருக்கிறார்கள். இரண்டாம், ஐந்தாம் கேள்விகளைப் பொறுத்தவரை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான சுவீடன் டென்மார்க், பின்லாந்து ஆகியவை கண்காணிப்புக்குழுவிலிருந்து நீக்கப்படவேண்டுமென்று புலிகள் இயக்கம் கோரியுள்ளது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் மாற்றம் செய்வது தொடர்பாக ஆறு மாத கால அவகாசம் வழங்குவதையும் புலிகள் இயக்கம் நிராகரித்துள்ளது. குறுகிய கால அவகாசமே வழங்கப்படுமென்று புலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்தவர்களை கண்காணிப்புக் குழுவிலிருந்து விலக்க வேண்டுமென்ற புலிகளின் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது. நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் குறிப்பிட்டதைப் போன்று, புலிகள் இணக்கம் தெரிவித்திருக்கும் மூன்று விடயங்களும் நிபந்தனையுடன் கூடியவையென்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் ஒரு தலைப்பட்சமாக எவ்வித மாற்றங்களையும் செய்ய முடியாதென்றும் அவ்வாறு மாற்றம் செய்வதானால், அரசாங்கத்தின் அனுமதி தேவையென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் தாம் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் இக்குழு தொடர்ந்தும் பணியாற்றலாமென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, பாரபட்சமாக நடந்து கொள்வதாக மூன்று வாரங்களுக்கு முன்னர்தான் அரசாங்கம் அறிவித்திருந்ததால், இப்போது பூரண நம்பிக்கை தெரிவித்திருப்பது சுவாரஷ்யமானதென்று கருதப்படுகிறது. இதற்கிடையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் எதிர்காலம் பற்றியும் பந்தோபஸ்துப் பற்றியும் கலந்துரையாடுவதற்காக எதிர்வரும் 29ஆம் திகதி நோர்வே ஏனைய நோர்டிக் நாடுகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

புலிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகள் மீது பாதுகாப்புப் படையினர் மும்முனைத் தாக்குதல்களை இரண்டு நாட்களாக நடத்திய பின்னரும் முற்று முழுதான யுத்தத்தைப் புலிகள் ஏன் பிரகடனப் படுத்தவில்லையென்று சிலர் யோசிக்கலாம். முற்று முழுதான யுத்தம் ஆபத்தான சூதாட்டம் என்ற இலகுவான பதிலைப் புலிகளின் தலைமைத்துவம் உணர்ந்திருக்கலாம். யுத்தம் ஆரம்பித்தால், அது நீண்டகாலம் நீடித்துச் செல்லக்கூடிய சாத்தியங்களே தென்படுகின்றன. ஓயாத அலைகள் - 3 போன்றே யுத்தம் நீடித்துச் செல்லும். இந்த யுத்தத்தின் போதுதான் ஆனையிறவு வீழ்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது.



புதுக்குடியிருப்பில் இரு வாரங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட படம். நாகமணி சின்னத்தம்பி என்ற 68 வயது வயோதிபருக்கு கொட்டன் பொல்லு ஒன்றினைப் பாவித்து புலிகள் துப்பாக்கி சுடும் பயிற்சி அளித்தபோது...

ஆனையிறவு தோல்விக்குப் பின்னர் இதுவரையில் இலங்கையில் பயன்படுத்தப்படாத நவீனரக ஆயுதங்களை படையினர் கொள்வனவு செய்துள்ளனர். எனவே நவீன ஆயுதங்கள் பயன்படுத்தப்படலாமென்பதால், இழப்புகளும் மிக அதிகமாக இருக்கும் என்றும் கருதப்படுகிறது. முற்றுமுழுதான யுத்தமொன்று ஆரம்பிக்கப்பட்டால், யுத்த நிறுத்த காலத்தின்போது வடக்கு, கிழக்கில் ஏற்படுத்தப்பட்ட புதிய சமூகக் கட்டமைப்பு வசதிகள் பாதுகாக்கப்படும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இப்புதிய கட்டமைப்பு வசதிகளை புலிகள் தமது யுத்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தவே செய்வார்கள்.

இதே நேரம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அனுசரித்து நடப்போமென்று வெறும் வார்த்தையளவிலேயே புலிகள் தெரிவித்தனர். அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருக்கும் தமது உறுப்பினர்களையும் குடிப்படையினரையும் பாவித்து தாக்கி விட்டுத் தப்பியோடும் நடவடிக்கைகளைப் புலிகள் தொடர்ந்தும் செய்வார்கள். அதாவது வடக்குக் கிழக்கில் தொடர்ந்தும் தமது மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களைப் புலிகள் தடையின்றி மேற்கொள்வார்கள். கடந்த வாரம் நாகர் கோவில் முன்னரங்கப் பகுதியில் படையினருக்கும் புலிகளுக்குமிடையில் அரை மணித்தியால மோதல்கள் நடைபெற்றிருக்கின்றன. யாழ்.குடா நாட்டைச் சேர்ந்த மூவாயிரம் குடிமக்களுக்கு கிளிநொச்சியிலும் பளையிலும் புலிகள் அடிப்படை ஆயுதப்பயிற்சி அளித்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், படையினரின் புலனாய்வுத் தகவல்களின்படி இவர்களில் 800 பேர் மட்டுமே தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. இவர்களில் அநேகமானோர் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களென்றும் அவர்கள் நடத்தும் தாக்குதல்களைப் பொறுத்துப் பணம் வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. கிளைமோர் தாக்குதல் ஒன்றை வெற்றிகரமாக நடத்தினால், ஐயாயிரம் ரூபாவும் கொலைப் பட்டியலிலுள்ள ஒருவரைக் கொன்றால் இருபதாயிரம் ரூபாவும் வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

## கிளைமோர் தாக்குதல்கள்

படையினரின் பதில் தாக்குதல்களையடுத்து, புலிகள் நடத்தி வந்த கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள் வெகுவாகக் குறைந்துள்ளன. படையினரின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதும் அவர்களை மட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குள் முடக்குவதுமே கிளைமோர் தாக்குதல்களின் நோக்கமாகும். 1980ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் இவ்வாறான தாக்குதல்களின் மூலமாகவே புலிகள் படிப்படியாக யாழ்ப்பாணத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர். இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் தாக்குதல்களை அதிகரிக்கப் போவதாக புலிகள் அறிவித்திருந்ததால், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அனுசரித்து நடக்கப்போவதாக அவர்கள் குறிப்பிட்டிருப்பது பச்சைப் பொய்யாகும்.

## அதிர்ச்சித் தாக்குதல்

ஆனால், அதிர்ச்சித் தாக்குதல்களைப் புலிகள் நடத்தக்கூடிய சாத்தியங்கள் இருக்கவே செய்கின்றன. பமுனுகமவில் ஆறு புலி உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டமை அவர்கள் நடத்த இருந்த பாரியளவிலான தாக்குதல் ஒன்றினைத் தடுத்து நிறுத்தியிருக்கிறது.

கல்பிட்டி கடற்பரப்பில் 'கடற் கொந் தளிப்பு' காரணமாக கைதுசெய்யப்பட்ட கடற்புலியிடமிருந்து 80 கிலோகிராம் எடையுடைய சி-4 ரக வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. உக்ரேனில் பழுது பார்க்கப்பட்ட எம்.ஐ.-17 ரக இரண்டு பயணிகள் ஹெலிக்கொப்டர்களை ஏற்றிவரவிருந்த கப்பலொன்றினைத் தாக்குவதற்காகவே இந்த வெடிபொருட்கள் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. சயனைட் குடித்து தற்கொலை செய்து கொள்ள முயன்ற நான்கு புலி இயக்க உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்ட தினத்துக்கு மறுநாள், குறிப்பிட்ட கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. வடமேற்குக் கடல்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் டோரா படகினைத் தாக்குவதற்கும் இப்புலி இயக்க உறுப்பினர்கள் திட்டமிட்டிருக்கலாமென்றும் கடற்படையினர் சந்தேகிக்கின்றனர்.

## முற்றுமுழுதான யுத்தம்


புலிகள் முற்றுமுழுதான யுத்தத்தைப் பிரகடனப்படுத்துகிறார்களோ இல்லையோ பூநகரியைச் சுற்றி தமது படையணிகளைக் குவித்திருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்கு ஏவுகணைகள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறான தாக்குதல் ஒன்று நடத்தப்படும் பட்சத்தில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து மண்டை தீவுக்கூடாக கடல் வழித் தாக்குதலில் புலிகள் ஈடுபடலாமென்றும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

*நன்றி : சண்டே ஒப்சேர்வர்*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**நான்** படத்திற்கான உரையாடல்களைப் படிக்கும் பொழுது - கசிந்து உருகிக் கண்ணீர் மல்க, என்னை ஆரத்தழுவிப் பாராட்டுவார். தமிழ் சினிமாவில் அப்படி ஓர் தேர்ந்த ரசிகனை நான் இதுகாறும் சந்தித்ததில்லை. என்னைக் கேட்காமல் வசனத்தில் ஒரு 'கமா'வைக் கூட மாற்ற மாட்டார். நான் கம்பனல்ல, ஆனால் கே.ஆர்.ஜி என்னளவில் ஒரு சடையப்ப வள்ளலாகவே



காட்சியளித்தார். பல லட்ச ரூபாய் நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல், என் வசனங்களின் மீதுள்ள காதலால் 'அதிஷ்டம் அழைக்கிறது' படத்தை நான் விரும்பிய வண்ணம் தயாரித்த மிகச் சிறந்த மனிதர் கே.ஆர்.ஜி. இன்றைக்கும் திரு. கே.ஆர்.ஜி.க்காக கதை, வசனம், எழுத வேண்டுமென்றால், என் பேனா அவருக்கு வணக்கம் போட்டு வேலை செய்யும். எழுத்தாளனைப் பொன் போல் போற்றிக் காக்கும் ஒரு பெருந்தகையாளரை, கே.ஆர்.ஜி. போல் நான் கண்டதில்லை. இயக்குநருக்கு மேல் என்னை உச்ச இடத்தில் வைத்து உற்சாகப்படுத்திய உத்தமர் திரு. கே.ஆர்.ஜி.

அன்று மாலை அவருடைய படத்திற்கான உரையாடல்களைப் படித்துக்காட்ட, அவருடைய அலுவலகத்திற்குப் போயிருந்தேன்.

காலையில் நான் இளையராஜாவுடன் திரிலோக்சந்தர் கம்பனியில் பணியாற்றியது பற்றிப் பேச்சு வந்தது. அப்போது, அங்கிருந்த உதவி இயக்குநர் ஒருவர் "அண்ணே! அவங்க நம்ம ஊர்க்காரங்க.. நம்ம கோஷ்டிதான்.. எப்படீண்ணே இளையராஜாவோட மியூசிக் இருக்குது?" என்று என்னை வினவினார்.

இளையராஜா வெகு சீக்கிரத்தில் பெரிய இசையமைப்பாளராக பரிணமிப்பார். என்று என் கணிப்பை அந்த உதவி இயக்குநரிடம் கூறினேன்.

'அப்படியா?' என்று அவர் வியந்து போனார்.

மறுநாள் என் வீட்டிற்கு உரையாடல்களை வாங்கிப் போக வந்திருந்த அந்த இளைஞர் "உங்க 'அம்மா' கவிதைப் புத்தகம் எனக்கு ஒண்ணு கொடுங்கண்ணே..அதில் என்னை வாழ்த்தி எழுதிக்கொடுங்க.." என்று கேட்டார்.

"இளையராஜாவைப் போல், உனக்கும் ஒளிமயமான எதிர்காலம் இருக்குதய்யா... அதிஷ்டம் உன்னையும் சீக்கிரம் அழைக்கத்தான் போவுது.." என்று சொல்லிவிட்டு, என் 'அம்மா' கவிதை நூலில் அவரை வாழ்த்திநாலு வரி எழுதி, அதை அவர் கையில் கொடுத்தேன்.. அதை அந்த உதவி இயக்குநர் மிகுந்த மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டார்.

திரு.ரா. சங்கரனிடம் இருக்கும் போதே அவரை எனக்குத்தெரியும். திரையுலகில் புதிய ரத்தத்தைப் பாய்ச்ச வேண்டுமென்கிற தாகம் நிரம்ப உடையவர் என்பது அவரது பேச்சில் தெரியும். அந்த இளைஞர் விழி நிறையக் கனவுகளை அப்பிக் கொண்டு நிற்பதை நான் பல முறை கவனித்திருக்கிறேன்.

'சரஸ்வதி பூஜை' என்று நான் ஒரு கதையை அப்போது அந்த இளைஞரிடம் சொன்னேன்.

"அண்ணே" இந்த மாதிரிக் கதையப் படம் எடுக்கணும்னுதான் எனக்கு ஒரே வெறி..." என்றெல்லாம் என் கதையை விமர்சித்து உற்சாகமாப் பேசினார்.

அந்த உதவி இயக்குநர்தான் பாரதிராஜா.

### ஆத்ம திருப்தி

எம்.ஜி.ஆர். படங்களுக்கு நான் பாடல்கள் எழுதிக்கொண்டிருந்த நாட்களில், ரசிகர்களிடமிருந்து கத்தை கத்தையாக எனக்குக் கடிதங்கள் வருவதுண்டு. அனேகமாக எல்லோருமே எம்.ஜி.ஆர். பக்தர்களாக இருந்ததால், வருகின்ற கடிதங்களெல்லாம் என்னை வாழ்த்தியே வரும்.

(தொடரும்.......)




## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....




**எ**திரிகள் தன்னை நம்பவில்லை என்று தெரிந்து கொண்ட பேடன் பவல், மேற்கொண்டு விளக்கம் எதுவும் சொல்லாமல் அங்கிருந்த காவலாளியிடம் புகைபிடிக்கலாமா எனக் கேட்டார். அவனும் அனுமதித்தான். உடனே பேடன் பவல், தான் புகைபிடிக்கும் பைப்பில் படம் வரைந்த காகிதங்களைத் திணித்து பற்ற வைத்து புகைக்கத் தொடங்கிவிட்டார்.

எதிரி முகாமுக்குள் நுழைந்து படம் வரைந்ததாகக் குற்றம் சாட்டி அதிகாரியின் முன் கொண்டுபோய் அவரை நிறுத்தினார்கள். அவரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து எந்தப் படமும் கிடைக்கவில்லை.

பேடன் பவல் ஒற்றனாகச் சுற்றினாலும், தன்னுடைய நாட்டுக்குள் வேற்று நாட்டு ஒற்றர்கள் புகுந்து செயல்படுவதையும் கண்டறிந்து பல சாதனைகள் புரிந்தார். இரண்டாவது உலகப் போரின் போது ஜெனரல் கேஹ்லாங் என்பவர் ஜெர்மன் உளவுத் துறையின் தலைவர்களில் ஒருவராக விளங்கினார். 1945இல் ஜெர்மனி தோற்றுப் போய் ஹிட்லரின் ஆட்சி முடிவுக்கு வந்தது. வெற்றி பெற்ற நேச நாடுகளின் கையில் அகப்பட விரும்பாத கேஹ்லாங், தான் வேலை செய்த கிழக்குப் பகுதியின் ரஷ்ய இராணுவம் பற்றி சேகரித்து வைத்திருந்த தகவல்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு தலை மறைவானார்.

ஜெர்மனியைத் தோற்கடிப்பதில் அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒன்றுபட்டு செயல்பட்டிருந்தாலும் ரஷ்ய இராணுவத்தைப் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ள அமெரிக்கா ஆர்வத்தோடு இருந்த அமெரிக்கர்களுக்கு வேண்டிய தகவல்கள் அனைத்தும் தலைமறைவாக இருந்த ஜெனரல் கேஹ்லாங்கிடம் இருந்தன.

அவர்களின் தேவையை உணர்ந்த ஜெனரல் கேஹ் லாங் அவர்களோடு தொடர்பு கொண்டு அவர்களுக்குத் தேவையான தகவல்கள் தன்னிடம் இருப்பதாகத் தெரிவித்தார். அமெரிக்க இராணுவத் தலைமையும் ஜெனரல் கேஹ்லாங் ஏற்கனவே ரஷ்யர்களை உளவு பார்த்து அனுபவம் பெற்றவராதலாலும் அவரிடமிருந்து தங்களுக்குத் தேவையான தகவல்கள் நிறையக் கிடைக்கக் கூடும் என்பதாலும் ரஷ்ய இராணுவ இரகசியங்களை அறிவதற்கென்றே அவருடைய தலைமையில் தனியாக உளவுத்துறை ஒன்றை அமைத்து செயல்பட அனுமதித்தார்கள். சோவியத் யூனியனுக்கு எதிரான உளவுத்துறையாக அது செயல்படத் தொடங்கியது.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், ஜெர்மனி எதிரி நாடாக இருந்த போது அந்த நாட்டுக்காக அமெரிக்காவின் எதிரியாக உளவு வேலையில் ஈடுபட்டவர் ஜெனரல் கேஹ்லாங். ரஷ்யா தங்களுடைய நட்பு நாடாக இருந்த நிலையிலும் அந்த நாட்டின் இராணுவ இரகசியங்கள் தங்களுக்குத் தேவைப்பட்ட போது எதிரி நாட்டின் உளவுத்துறை தலைவரை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள அமெரிக்கர்கள் தயக்கம் காட்டவில்லை.

ஒரு நாட்டில் வேலை செய்யும் உளவாளி, அந்த நாட்டுக்குச் சம்பந்தம் இல்லாமல் ஒன்றுக்கொன்று எதிரியான இரண்டு நாடுகளுக்கு ஒற்றனாக ஒரே சமயத்தில் செயல்படுவதும் உண்டு. அம்மாதிரி சந்தர்ப்பங்களில் இந்த நாட்டுக்காக அந்த ஒற்றன் தனக்காக மட்டுமே வேலை செய்வதாக எண்ணிக் கொள்வான். அதைப் போலவே அடுத்த நாட்டுக்காரனும் நினைத்துக் கொண்டிருப்பான்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# பொலிஸ் வலையில் அழகி செரீனா : வழக்கு சூடுபிடிக்கிறது!

**க**ள்ளநோட்டு வழக்கில் சிக்கியுள்ள மதுரைப் பெண் செரீனா, தன் தாயுடன் நள்ளிரவு வேளை காரில் தப்ப முயன்றார். அவரை அதிரடியாக சுற்றிவளைத்த பொலிஸார், வீட்டுக்குள் சிறை வைத்தனர். இதையடுத்து, செரீனா விவகாரத்தில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த இளம்பெண் செரீனாவை கஞ்சா வழக்கில் பொலிஸார் கைது செய்தனர். செரீனாவின் தாய் ரமீஜா, கார் டிரைவர் சதீஷ் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். செரீனாவின் வீட்டில் பொலிஸார் நடத்திய சோதனையின் போது செரீனாவின் ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டது. கடந்த 3 ஆண்டுகளாக நடந்து வந்த இந்த வழக்கில் கடந்த 5ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது. செரீனா உள்பட 3 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில், செரீனாவிடம் கைப்பற்றப்பட்ட பணத்தில் 30 லட்சம் ரூபாய்க்கு கள்ள நோட்டுகள் இருந்ததாக புதிய சர்ச்சை எழுந்தது. இது குறித்து வருமானவரித் துறையினர் மதுரை கருப்பாயூரணி பொலிஸில் புகார் செய்தனர். அதன்பேரில் செரீனா, ரமீஜா, டிரைவர் சதீஷ், கடம்பூர் ஜமீன் ஜகதீஷ் ராஜா ஆகியோர் மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரனை நடத்தினர். இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றப்பட்டது.சி.பி.சி.ஐ.டி பொலிஸார் தனிப்படை அமைத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். இந்த வழக்கில் செரீனாவின் பின்னணியில் இருந்து செயல்பட்ட முக்கியப் புள்ளி சிக்குவார் என தகவல்கள் வெளியாகின.

கைது நடவடிக்கைக்கு பயந்து செரீனா, ரமீஜா, சதீஷ் ஆகியோர் ஐகோர்ட் மதுரை கிளையில் முன்ஜாமீன் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுக்கள் மீது இன்று விசாரணை நடக்கிறது. கள்ள நோட்டுத் தொடர்பாக செரீனாவை பொலிஸார் எந்த நேரத்திலும் கைது செய்யக்கூடும் என்ற பரபரப்பு நிலவி வந்தது.

இதற்கிடையே, 20ஆம் திகதி நள்ளிரவு 11.45 மணி அளவில் மதுரை அன்பு நகரில் உள்ள செரீனா வீட்டுக்கு ஒரு கார் வந்தது. அதில் பெரிய, பெரிய சூட்கேஸ்கள் ஏற்றப்பட்டன. பின்னர் செரீனாவும் ரமீஜாவும் காரில் ஏறி தப்ப முயன்றார். இந்தத் தகவலை அறிந்த கருப்பாயூரணி பொலிஸார் விரைந்து வந்து செரீனாவின் காரை சுற்றிவளைத்தனர். எங்கே செல்கிறீர்கள். எதற்காக தப்பிக்க முயற்சிக்கிறீர்கள் என்று பொலிஸார் கேட்டதற்கு, எங்கும் செல்லவில்லை என்று கூறி சமாளித்தனர். அவர்களை வீட்டுக்குள் அனுப்பிய பொலிஸார், டிரைவரிடம் விசாரணை நடத்தினர்.


செரீனா

அதன் போது செரீனா தன் தாயுடன் தப்பிச் செல்ல முயன்றது தெரியவந்தது. இதையடுத்து, செரீனா வீட்டுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இது பற்றி சி.பி.சி.ஐ.டி. பொலிஸாருக்கு கருப்பாயூரணி பொலிஸார் தகவல் கொடுத்தனர். செரீனா செல்ல முயன்ற கார் யாருக்கு சொந்தமானது? அவர்கள் எங்கு தப்பிக்க முயன்றனர்? என்பது குறித்து விசாரணை நடத்தப்படுகிறது. நள்ளிரவில் செரீனா தப்ப முயன்ற சம்பவம் பொலிஸ் வட்டாரத்தில் மட்டுமின்றி மதுரை மக்கள் மத்தியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### செரீனாவுக்கு காய்ச்சல்

**மதுரை மேலூர் ரோட்டில் இருக்கும் தனியார் ஆஸ்பத்திரிக்குத் தாய் ரமீஜாவுடன் செரீனா காலை 6.15க்கு வந்தார். காய்ச்சல் இருப்பதாகக் கூறிய செரீனாவுக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர். ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆக செரீனா அனுமதி கேட்டார். பொது வார்டில்தான் படுக்கை இருக்கிறது. தனியறை கிடைத்த பிறகு தகவல் தருவதாகக் கூறி டாக்டர்கள் அவரைத் திருப்பி அனுப்பினர். செரீனாவின் ஜாமீன் மனு, விசாரணையில் இருக்கிறது. இதனால், பத்திரிகையாளர்களும் பொலிஸாரும் அடிக்கடி வருவார்கள் என்பதாலேயே ஆஸ்பத்திரி நிர்வாகம் இவ்வாறு கூறியதாகக் கூறப்படுகிறது.**

### சி.பி.ஐ. விசாரணை?

செரீனா வீட்டில் கைப்பற்றப்பட்ட பணம், டெல்லியைச் சேர்ந்த ஆடிட்டர் சோப்ராவுக்குச் சொந்தமானது. நிலம் வாங்குவதற்காக அதை தன்னிடம் சோப்ரா கொடுத்து வைத்திருந்தார் என்று கடம்பூர் ஜமீன் ஜெகதீஷ் ராஜா தெரிவித்திருந்தார். அந்தப் பணத்தைதான் செரீனாவிடம் ஜெகதீஷ் கொடுத்து வைத்திருந்தார். இப்போது, அதில் கள்ள நோட்டுகள் இருப்பதாக தெரியவந்ததால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கள்ள நோட்டு வழக்கில் ரிசர்வ் பாங்க், டெல்லியில் உள்ள வருமான வரித்துறை அலுவலகம் உட்பட பல தரப்பில் விசாரணை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. டெல்லியைச் சேர்ந்த ஆடிட்டர் சோப்ராவிடமும் விசாரணை நடத்தப்படும் என்று தெரிகிறது. எனவே, இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்ற பரிந்துரைக்கலாமா என்று சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் ஆலோசித்து வருகின்றனர்.

முதல்கட்ட விசாரணையில் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றுவது குறித்து முடிவு செய்யப்படும் என்று சி.பி.சி.ஐ.டி. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# அரசியல் சட்டத்தை உருவாக்கிய அம்பேத்காரின் வாழ்க்கைப் பாதை

"**இந்திய** அரசியல் சட்டத்தின் தந்தை" என்று போற்றப்படும் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார், தனது விடா முயற்சியாலும், உழைப்பாலும் எதிர்ப்புகளைத் தவிடு பொடியாக்கி முன்னுக்கு வந்தவர்.

மராட்டிய மாநிலம் ரத்தினகிரி மாவட்டம் அம்பாவாடே என்ற கிராமத்தில் 14.04.1891இல் பிறந்தார். தந்தை ராமாஜி மாலோஜி. தாய் பீமாபாய். ஏழைக் குடும்பமான இவர்களுக்கு 14 குழந்தைகள். கடைசிப் பிள்ளைதான் அம்பேத்கார். பெற்றோர் அவருக்கு வைத்த பெயர் பீமாராவ் ராம்ஜி. இவர்களது குடும்பம், மகார் என்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தது.


இளம் வயதில் அம்பேத்கார்

அம்பேத்கார் கல்வி நிலையங்களில் அனுபவித்த கொடுமைகள் ஏராளம். உயர்ந்த சாதிப் பிள்ளைகளும், ஆசிரியர்களும் பள்ளி நிர்வாகமும் தாழ்ந்த சாதிப்பிள்ளைகளைக் கேவலமாக நடத்தினர். தாழ்ந்த சாதிப்பிள்ளைகள், உயர் சாதிப்பிள்ளைகளுடன் சேர்ந்து உட்காரக்கூடாது, உயர்சாதிப்பிள்ளைகளுடன் பேசக்கூடாது, தொடக்கூடாது என்று ஒதுக்கி வைத்தனர்.

இந்த அவமானத்தையெல்லாம் தாங்கிக் கொண்டு படிக்க வேண்டுமா என்றுகூட அம்பேத்கார் நினைத்தது உண்டு. ஆனால் அம்பேத்கார் என்ற அந்தண ஆசிரியர் ஒருவரின் அன்பும் அரவணைப்பும் அவர் எண்ணத்தை மாற்றின. தாழ்த்தப்பட்டவர்களும் மனிதர்களே. அவர்களையும் சமமாக மதித்து நடத்த வேண்டும் என்ற உயரிய கொள்கையுடைய அந்த ஆசிரியர், அம்பேத்கார் படித்து முன்னேற எல்லா உதவிகளையும் செய்தார். அவருடைய அன்புக்கு அடிமையான அம்பேத்கார், பீமாராவ் ராம்ஜி என்ற தன் பெயரை அம்பேத்கார் என்று மாற்றிக்கொண்டார். அன்று முதல் அவர் பெயர் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கார் (பி.ஆர்.அம்பேத்கார்) என்று வழங்கப்படுகிறது.

## திருமணம்

14ஆவது வயதில் மெட்ரிகுலேஷன் படித்துத் தேறியதும், அம்பேத்காருக்கு அவர் தந்தை திருமணம் செய்து வைத்தார். மனைவி பெயர் ராமாபாய். பிறகு பம்பாய் கல்லூரியில் இண்டர் மீடியட் படித்து முடித்தார். அடுத்து பரடோ மன்னனின் உதவி பெற்று பி.ஏ.படித்துப் பட்டம் பெற்றார். பின்னர் பரோடா அரசின் படையில் சேர்ந்து பணியாற்றினார். அங்கும் மற்றவர்களால் தொல்லை. இடையில் தந்தை காலமாகி விடவே, வேலையை விட்டுவிட்டு பம்பாய் திரும்பினார்.


முதல் மனைவி ராமாபாயுடன்

மேலும் மேலும் படிக்க விரும்பினார். ஆனால் பொருளாதாரம் இடம் கொடுக்கவில்லை. மீண்டும் பரோடா மன்னரின் உதவி பெற்று 1913இல் அமெரிக்கா சென்று கொலம்பியா பல்கலைக்கழகத்தில் படித்து எம்.ஏ.பட்டம் பெற்றார்.

பின்னர், பல சிரமங்களுக்கு இடையே லண்டன் சென்று படித்து, பொருளாதாரத்தில் ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி எம்.எஸ்.சி. பட்டம் பெற்று பம்பாய் திரும்பினார். மேலும் படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்று வக்கீல் தொழிலில் ஈடுபட்டார். தாழ்த்தப்பட்டவர்களின் நலனுக்காக ஒரு சங்கத்தை நிறுவினார். தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக அல்லும் பகலும் பாடுபட்டார். அவருடைய சேவையைப் பாராட்டி பம்பாய் மாகாண கவர்னர், பம்பாய் மேல்-சபை உறுப்பினர் பதவியை அளித்தார்.

## கட்டுப்பாடு

மாகாத்து என்ற நகரில் பொதுக்குளத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் நீர் எடுக்கக்கூடாது என்று கட்டுப்பாடு இருந்தது. அம்பேத்கார் அங்கு சென்று, இதைக் கண்டித்துப் பேசினார். அவரே குளத்தில் இறங்கி நீர் அருந்தினார். தாழ்த்தப்பட்ட மற்றவர்களும் நீர் அருந்தினர். பெரும் மோதல் ஏற்பட்டு, பிரச்சினை கோர்ட்டுக்குச் சென்றது. எல்லா மக்களும் நீர் எடுக்கலாம் என்று கோர்ட்டு தீர்ப்பு கூறியது. இது அம்பேத்காருக்கு கிடைத்த பெரிய வெற்றியாகும்.

காந்தியை பின்பற்றுபவராகத் தோன்றினாலும், கொள்கை அளவில் அம்பேத்காருக்கும், காந்திக்கும் கருத்து வேறுபாடு இருந்தது. அது பிறகு சமரசமாகத் தீர்ந்தது.

## மனைவி மரணம்

அம்பேத்காரின் மனைவி ராமாபாய் 27.05.1935 ஆம் ஆண்டு காலமானார். இதனால் பேரதிர்ச்சி அடைந்த அம்பேத்கார் வாழ்க்கையில் சலிப்படைந்தார். துறவி போல வாழ்ந்தார். பின்னர் சுதந்திர தொழிலாளர் கட்சி என்ற கட்சியைத் தொடங்கினார். அம்பேத்காரின் முயற்சியால், பல மாநிலங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சம உரிமை கிடைத்தது.

உயர்ந்த சாதியினரை உறுப்பினர்களாகக் கொண்டிருந்த வைசிராய் நிர்வாக சபையில், அம்பேத்காரின் சேவையைப் பாராட்டி அவரும் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அத்துடன் தொழிலாளர் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டு 3 ஆண்டுகள் பதவி வகித்தார். தொழிலாளர் முன்னேற்றத்துக்காக அரும் பணியாற்றினார்.

1946ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் திகதி, ராஜேந்திர பிரசாத் தலைமையில் அரசியல் நிர்ணயசபை செயல்படத் தொடங்கியது. அதில், சட்டம் இயற்றும் குழுவில் அம்பேத்காரும் நியமிக்கப்பட்டார். இந்தக் குழுவினர் இயற்றியதுதான் இந்திய அரசியல் சட்டம்.

சுதந்திர இந்தியாவின் பிரதமராக நேரு பொறுப்பு ஏற்றதும், அவரது மந்திரிசபையில் அம்பேத்கார் சட்ட அமைச்சராக இருந்து பணியாற்றினார். அரசியல் நிர்ணய சபையின் 3ஆவது கூட்டத்தில், தீண்டாமையை ஒழிக்க சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் அம்பேத்காரின் நீண்ட கால முயற்சி வெற்றி பெற்றது.

## மறுமணம்

அம்பேத்கார், ஓயாமல் உழைத்ததால் உடல் நலம் குன்றி பம்பாய் மருத்துவமனையில் சேர்ந்தார். சாரதா அம்மையார்.என்ற டாக்டரின் கனிவான சேவையால் அவர் குணம் அடைந்தார். அதைத்தொடர்ந்து அந்த அம்மையாரின் விருப்பத்துடன் அவரை மறுமணம் புரிந்து கொண்டார். இதன் மூலம் பிராமண வகுப்பைச் சேர்ந்த சாரதா அம்மையார், கலப்புத் திருமணத்திற்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார்.


இரண்டாவது மனைவி சாரதா அம்மையாருடன்.

நேரு மந்திரிசபையில் சட்ட மந்திரியாகப் பணியாற்றியபோது, மற்றவர்களுக்கும் அம்பேத்காருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் மந்திரிப் பதவியை விட்டு விலகி எதிர்க்கட்சித் தலைவர் ஆனார்.

## புத்த மதம்

பல காரணங்களால் இந்து மதத்தின் மீது சலிப்பு அடைந்த அம்பேத்கார், 1956ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்து மதத்தை விட்டு, மனைவி சாரதா அம்மையாருடன் புத்த மதத்தைத் தழுவினார். பிறகு புத்த மதத்தைப் பரப்பும் முயற்சியில் தீவிரப் பங்கு கொண்டார்.



மனைவி ராமாபாய் இறந்த துயரத்தால் துறவிபோல வாழ்ந்தார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தன் வாழ்நாளையே அர்ப்பணித்த டாக்டர் அம்பேத்கார் 1956ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ஆம் திகதி காலமானார். 1990இல் இந்தியாவின் உயர்ந்த விருதான பாரத ரத்னா விருது அவருக்கு (மறைவுக்குப்பின்) வழங்கப்பட்டது.

---




**முடியாமல்** காட்டுக்குள் பின்வாங்கிச் சென்றனர். அமெரிக்க படைகளும் தரையிறங்கி ஆகாய மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் அதிரடித் தாக்குதல்களை நடத்தத் தொடங்கினர். ஆகாய வழித் தாக்குதல் தீவிரமடையவே செய்வதறியாத வியட்கொங் இராணுவத் தளபதி மிகத் துல்லியமாக குறிபார்த்து அதி வேக போர் விமானம் ஒன்றிற்கு SAMs மூலம் தாக்குமாறு கட்டளையிட்டார். 5 தேர்ச்சி பெற்ற போர் வீரர்கள் SAMs ஐ மிகத் துல்யமாக இலக்கு வைத்து அதிவேக விமானத்தை தாக்கினார்கள். தாக்குதலில் சேதமடைந்த விமானம் புகைந்து கொண்டே சென்று வீழ்ந்து நொறுங்கியது. திடீரென வியட்நாமியர்கள் SAMs மூலம் தாக்குதலை மேற்கொண்டதால் பயந்த அமெரிக்கர்கள் வியட்நாமியரிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இருப்பதை அறிந்து தாக்குதலை உனே நிறுத்தும்படி விமானங்களுக்கு கட்டளையிட்டது தலைமையகம். துரைமார்க்க படைகளையும் உடனே அவ்விடத்தை விட்டு வாபஸ் பெறும்படி கட்டளையிட்டது. கட்டளைக்கு அமைய உடனடியாகவே விமானப்படையும், தரைப்படையும் ஆற்றங்கரையை விட்டு வெளியேறியது.


குண்டு மழை பொழியும் அமெரிக்கா விமானங்கள்

பெருமூச்சு விட்ட வியட்கொங் இராணுவத்தினர் மகிழ்ச்சியில் குதூகலித்தனர். ஆயினும் புதிய முறையில் அமெரிக்க இராணுவம் இவ்வளவு தூரம் போரில் நிதானமாக தாக்கியும் அமெரிக்க படைகள் தங்கள் கண்களைக் கட்டிவிட்டு வேறுவிதமான தாக்குதல்களை நடத்தத் துணிந்ததைக் கண்ட வியட்கொங் இராணுவத் தளபதி தன்னுடைய உளவாளிகள் மூலம் தலைநகரில் என்ன நடக்கிறது என்பதை துல்லியமாகக் கண்டறிந்தார். இந்தத் தகவல்கள் அவருக்குப் பெரும் பயனுடையதாக அமைந்தது.

ஆச் செய்தியில் தலைநகரில் உடனடியாக விமானப்படை தளபதி மாற்றப்பட்டதும், அவருக்குப் பதிலாக இளமையும், ஆர்வமுள்ள ஒரு இளம் வீரர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதுதான். இந்தத் தகவல்களால் பெரிதும் குழப்பமடைந்தார் வியட்கொங் இரா்ணுவத் தளபதி. அவரின் குழப்பத்திற்கு காரணமும் இருந்தது. இவருக்கு முற்பட்ட விமானப்படை தளபதி தூர நோக்கற்றவர். இதனால் இவரின் திட்டங்கள் மிகக் குறுகிய காலத்திக்குள்ளேயே வெளியே கசிந்துவிடும் அல்லது மற்வர்களால் ஊகிக்க முடிந்துவிடும். ஆனால் புதிதாக வந்திருப்பவரோ எப்படிப்பட்டவர் என்ன செய்வார் என்று தெரியாமல் குழம்பினார். ஆயினும், வியட்கொங் உளவாளிகள் புதிதாக வந்தவரின் பலவீனத்தை மிகத் துல்லியமாகக் கண்டுபிடித்தனர்.

புதிதாக வந்த தளபதிக்கு ஒரே மகள். அவர் அவளை அதிகளவு செல்லம் கொடுத்து வளர்த்தார். ஆனால், அவரின் மனைவியோ இவரைவிட்டு வெகுதூரம் விலகி விட்டார். அதாவது இவரிடமிருந்து விவாகரத்து பெற்றுவிட்டார். இதனால் பெரிதும் மனமுடைந்த தளபதி தனது மகளை பள்ளிக்கூட விடுதியில் சேர்த்துவிட்டு தான் நினைத்தது போல் வாழ்ந்து வந்தார். அதாவது எந்தப் பெண்ணையும் கண்டால் உடனே படுக்கையறைக்கு அழைத்து விடுவார். படுக்கையில் அவரின் தேவைகளைத் திருப்திகரமாக பூர்த்தி செய்தால் போதும் அவள் கேட்பதையெல்லாம் படுக்கையிலேயே அவளுக்குக் கொடுத்துவிடுவார். இதைவிட அவள் கேட்பதற்கெல்லாம் மாந்திரீகம் செய்தது போல் பதிலளிப்பராம்.

இது பயனுள்ள தகவலாக இருந்தாலும், வியட்கொங்கை பொறுத்தவரையில் இதனை நிறைவேற்ற முடியாத ஒன்றாகவே இருந்தது. ஏனெனில் போரினைக் காரணம் காட்டி தனது நாட்டு பெண் ஒருவரை விமானப்படை தளபதிக்கு ஆசைநாயகியாக்க அவர் விரும்பவில்லை. ஆயினும் இதைத்தவிர வேறுவழியின்றியும் குழம்பினார். இதனால் சில இராணுவ தாக்குதல்களை முன்கூட்டியே அறிய முடியாமல் போனது உண்மையில் குழப்பத்திற்குரிய விடயமாகவே இருந்தது. தனது படைகள் முன்நோக்கி நகர்வதைக் கண்ட ஜனாதிபதி ஜோன்சன் இன்னும் இராணுவத் தளபாடங்களையும் இராணுவத்தினரையும் எண்ணிக்கையில் அதிகரித்தார். தமது இராணுவம் தொடர்ந்தும் என்றுமில்லாத வகையில் அழிவடைகிறதே என்று வியட்கொங் இராணுவத்தினர் கூட நினைத்தனர். இதைப்பற்றி இராணுவத் தளபதியிடம் இவர்கள் கலந்துரையாடிய போது தான் காரணம் புலப்பட்டது. யாரை உளவாளியாக அனுப்பலாம் என்று அவர்களும் குழம்பினார்கள். இந்த விடயம் எப்டியோ வியட்நாமிய மக்களுக்குக் கசிந்தது.

ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியையாக இருப்பவர் யோவான் இவரின் காதலன் ஒரு இராணுவச் சிப்பாய். இவர்கள் இருவரும் மிக நீண்ட காலமாக ஒருவரையொருவர் உயிருக்குயிராகக் காதலித்து வந்தார்கள். இவர்களிடையே இருந்த காதல் காரணமாக ஒருவரையொருவர் ஒவ்வொருநாளும் சந்தித்து பேசிக் கொள்வார்கள். இந்நிலையில் இவரின் காதலன் போர்முனையில் அமெரிக்க இராணுவத்திரால் கொல்லப்படுகிறார். இதனால் பெரும் துயர்கொண்ட யோவான் அமெரிக்க இராணுவத்தினரை பழிதீர்க்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தார்.

விமானப்படை தளபதி மூலம் பழி தீர்க்க சரியான தருணம் தனக்குக் கிடைத்து விட்டதை உணர்ந்த யோவான் வியட்கொங் இராணுவத் தளபதியிடம் வந்து தான் உதவிசெய்வதாக கூறிச்சென்றாள்.


யோவானைப் பற்றிச் சொல்வதாயின் பார்த்தால் இன்னொரு முறை திரும்பிப் பார்க்கும் அழகுடையவள். இளமை மிரட்சி உடையவள். மிகவும் வாளிப்பான தோற்றமுடைய அவளுக்கு அவளுடைய கண்கள் தான் மிகவும் அழகானவை. ஏனைய வியட்நாமியப் பெண்களைவிட அவளின் கண்கள் ஒரு வித்தியாசமான வடிவமுடையவை. அவள் உடல்கட்டமைப்பு காண்பவரை ஏங்க வைக்கும். அது மட்டுமல்ல அவளை மனைவியாக்க ஆசைப்படுவார்கள். இப்படிப்பட்ட ஆசிரியையைக் கண்டால் விமானப் படைத்தளபதிக்கு என்ன சொல்லவா வேண்டும்.


ஆற்றை கடக்கும் அமெரிக்காவின் டாங்கி

மிகத் தந்திரமாக யோவான் விமானப்படைத் தளபதி மது அருந்த வரும் ஒரு விடுதியில் அவரின் கண்ணில்படும்படி ஒரு இடத்தில் அமர்ந்து தனது தோழிகளோடு பேசிக் கொண்டிருந்தாள். இவளைக் கண்டதும் விமானப் படைத் தளபதி நிலைகுலைந்து போனார். அவர் அவள் பக்கமே பார்த்துக்கொண்டிருந்தார். விமானப் படைத் தளபதி தன்னையே உற்று நோக்குவதை கவனித்து விட்ட யோவான் தான் அவரைக் கவனிக்காதது போல் பாவனை செய்து கொண்டிருந்தாள். ஆயினும் இடையிடையே அவரைப் பார்க்கவும் செய்தாள். இறுதியில் ஒரு தடவை அவரைப் பார்த்து ஒரு புன்சிரிப்பொன்றை உதிர்த்து விட்டாள். *(தொடரும்)*



அன்னை! அன்னை ஆடுங் கூத்தை நாடச் செய்தாய் என்னை.
சத்திப் பய்தான் தலையொடு தலைக் முட்டிச் - சட்டச்
சடசட சட்டென் றுடைபடு தாளங்கொட் - அங்கே
எத்திக் கினிலும் நின்விழி யனல் போய் எட்டித் - தானே
- சுப்பிரமணிய பாரதியார்



# தங்கப் பறவை!



முன்னொரு காலத்தில் சாந்தபுரி என்ற நாடடை ராஜவர்மன் என்ற அரசன் ஆண்டு வந் தான். அவனுக்கு பொற்கொடி என்றொரு மகள் இருந்தாள். அந்த நாட்டில் எல் லாரும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். பொற் கொடி ஒரு இயற்கை விரும்பி. இயற்கை அழகை அனுபவிப்பதில் மிகவும் பிரியம் இருந்தது. எப்போதும் ஏரி, குளம், நதிக் கரைகளில் சுற்றிக் கொண்டே உல்லாசமாக இருந்தாள். ஒரு நாள் பக்கத்து நாட்டு அரசனான சந்தீப் தனது தூதனை அனுப்பி மன்னர் ராஜவர்மனுக்கு மிகப் பிடித்த பரிசு எது என்று கேட்டு அனுப்பியிருந்தார்.

"என் மகள் பொற்கொடிக்கு எது பிடிக்குமோ, அதுவே எனக்கும் பிடிக்கும்" என்று ராஜவர்மன் தூதனை அனுப்பி வைத்தான். பொற்கொடிக்கு இயற்கை, மிரு கங்கள், பறவைகள் ஆகியவை விருப்ப மானவை என்று அறிந்து கொண்டு, அவள் இதுவரை பார்த்ததே இல்லாத ஒரு பரிசைத் தேர்ந்தெடுத்து ராஜவர்மனுக்கு அனுப்பினான்.

அரசவைக்கு அந்தப் பரிசு வந்து சேர்ந்தவுடன் அனைவரும் அது என்ன என்று அறிய மிகுந்த ஆவலுடன் சூழ்ந்து கொண்டனர். ஒரு தங்கக் கூண்டுக்குள் ஒரு மிக அழகான தங்க வண்ணப் பறவையைக் கண்டு அனை வரும் வியப்பில் ஆழ்ந்தனர். பொற் கொடி மிக வியப் புடன் அதைப் பார்த்தாள்.

அந்தப் பறவையை கூண்டுடன் எடுத்துச் சென்று பொற் கொடி, விளையாடும் இடத்தில் ஒரு மூலையில் தொங்கி விட்டனர்.

பொற்கொடி விளையாட விரும்பும் போது, அந்தக் கூண்டிலிருந்து பறவையை வெளியில் எடுத்து, இளவரசியுடன் விளை யாடச் செய்து, பிறகு அதைத் திரும்பக் கூண்டிலேயே அடைத்து வைத்தனர். அந்தப் பறவையும், இளவரசியும் சில நாட்களிலேயே நண்பர்கள் ஆகிவிட்டனர். விளையாட்டு முடிந்தவுடன் இளவரசி கையினால் ஒரு சைகை

## பாப்பா முரசு சிறுகதை

செய்தால், உடனே பறவை தானே கூண்டுக்குள் சென்று விடும்.

ஆனால், சில நாட்களிலேயே, அந்தப் பறவைக்கு விளையாட்டு ஆர்வம் குறைந்து விட்டது. வெளி உலகத்தையே காணாததால் பறவை ஆர்வம் குறைந்து காணப்படுகிறது என இளவரசியின் தோழி கூறினாள்.

அடுத்த முறை பறவையைக் கூண்டி லிருந்து எடுத்தவுடன், அதைத் திறந்த வெளியில் எடுத்துச் சென்று விளையாட ஆரம்பித்தாள் பொற்கொடி. ஆரம்பத்தில் பறவை மகிழ்ச்சியுடன் விளையாடியது.

ஆனால், சில நாட்களுக்குப் பிறகு, பழைய படியே உற்சாகம் இழந்து காணப்பட்டது. அதற்கு அந்தத் தோழி, பறவை ளை சுதந்திர மாகப் பறக்கவிட வேண்டுமென்றும், அவற் றைக் கூண்டில் அடைப்பதே தவறு என்றும் கூறினாள்.

எனினும், அப்படிப்பட்ட சுதந்திரம் கொடுத் தால், பறவை ஒரேயடியாக வெளி யில் பறந்து சென்றுவிடும். பிறகு திரும்பி வராது என்ற பயத்தினால், தோழியின் சொல்லைக் கேட்கவில்லை பொற்கொடி.


ஒரு நாள் காலை தன் கூண்டுக்குள் தங்க வண்ணப் பறவை இறந்து கிடந்தது. அன்றி லிருந்து துயரில், மூழ்கிய பொற்கொடி, சிரிப்ப தையே நிறுத்திவிட்டாள். இதைக் கண்ட அரசன், மருத்துவரை அழைத்து, இறந்த பறவைக்கு உயிர் கொடுத்து தன் மகளை மகிழ்விக்க முடியுமா என்று கேட்க, அது முடியாதென்றும் ஆனால், அதே போல இன்னொரு பறவை கிடைத்தால் இளவரசி பழையபடி மகிழ்ச்சி அடைவாள் என்றும் கூறினார் மருத்துவர்.

அந்த மாதிரி தங்க வண்ணப் பறவையைப் பல இடங்களில் தேடியும் கிடைக்காததால், மறுபடியும் பக்கத்து நாட்டு அரசன் சந்தீப்புக்கு செய்தி அனுப்பி, மற்றொரு தங்க வண்ணப் பறவை வரவழைக்கப்பட்டது. அரசர் அதை இளவரசியிடம் விளையாடக் கொடுத்தார். ஆனால், பொற்கொடிக்கு பறவைகளின் சுதந்திரத்தின் அருமை நன்றாகப் புரிந்துவிட்டது.

ஆகவே, கூண்டுடன் பறவையை காட் டுக்கு எடுத்துச் சென்று பறவையைக் கூண்டை விட்டு விடுதலை செய்து விட்டாள். கூண் டினையும் காட்டிலேயே ஒரு மரத்தில் நிரந்தர மாகத் தொங்க விட்டுவிட்டு வந்துவிட்டாள்.

சுதந்திரம் என்பது பறவை, விலங்கு களுக்கு மட்டுமல்ல, மனிதர்களுக்கும் எத்தனை அவசியமானது என்பதை உணர்ந்து, நாட்டில் அடிமைகளாக இருக்கும் பலரை விடுதலை செய்யச் சொன்னாள் இளவரசி. அவளது இரக்க குணத்தால் விடுதலை பெற்றவர்கள் இளவரசியை மிகவும் வாழ்த்தினர்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 05.07.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 650**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 648

**பரிசுக்குரியவர்:**
எம்.என்.எப். ருமானா,
இல. 53/1, பாடசாலை வீதி, கொடபிடிய, அகுறஸ்ஸ.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ம. தேவமனோஜினி, 31, ரொசிட்டா பஸார், கொட்டகலை. | கே. பிரசாந்தி, தரம் 6, நு/கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. |
| ரொஸ்னியா ஜுட், தரம் 8, புனித கப்ரீல்ஸ், ஹட்டன். | டிவின்ஷன் டேவிட், கிங்ஸ்ரன் சர்வதேசக் கல்லூரி, ஆண்டு 3. மோதரை, கொழும்பு - 15. |
| ரிபீக்கா, கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை, கொழும்பு 15. | எல்.ஏ.எஸ். சித்தி பாத்திமா, 9ஆவது ஒழுங்கை, சதமியாபுரம், தில்லையடி, புத்தளம். |
| யோ.சிவரஞ்சினி சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | வை. பிர்னா ஜும்லாட், மக்குளூற்று, வெள்ளைமணல். |
| பூ. டிலானி, 25/15,அருளம்பலம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். | ச.நிலோஷி, 4ஆம் குறுக்கு, திருச்செந்தூர் கல்லடி. |

# ஆத்திசூடி

## மிகை படச் சொல்லேல்

நீ உன்னைப் பற்றி மற்றவர்கள் முன் அதிகமாகப் புகழ்ந்து பேசாதே.

எஸ். நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# காற்று

வடக்கே இருந்து வருவது
வாடைக் காற்று ஆகும்
தெற்கே இருந்து வருவது
தென்றல் காற்று ஆகும்.

நேற்று வளர்ந்த செடிகளும்
நீண்ட பெரிய மரங்களும்
காற்று இன்றி வளராது
காட்டுப் பூவும் மலராது.

மனிதன் உயிரும் காற்றினால்
மாறா மலே உலவுது
இனிமை காற்று இல்லையேல்
இந்த உயிரும் போகுது.

காற்று மண்டலம் இல்லையேல்
கவர்ச்சி மேகம் தெரியாது
காற்று இன்றி உலகமும்
சுச்சித மாகச் சுழலாது.

ஆலை மோட்டார் ரயிலும்
அவைகள் விடும் புகையும்
காலை மாலை இரவில்
காற்றை அசுத்தம்
செய்யும்.

உற்று
நன்றாய்
உணர்ந்து
உயர்ந்த
பூங்கா அமைப்போம்
சுற்றுச் சூழல்
கெடாமல்
சூழ்ந்து காற்றைக்
காப்போம்.



# அதிசய உலகம்

## நோபல் பரிசு!

**நோபல்** பரிசு என்பது உலகிலேயே மிகவும் உயரிய பரிசாகக் கருதப்படுகிறது. அதைப் பெறுவது என்பது மிகப் பெரிய ஒரு கௌரவம். நோபல் பரிசு ஏழு பிரிவுகளுக்கு வழங்கப்படுகிறது. இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், சைக்காலஜி, மருத்துவம், இலக்கியம் மற்றும் அமைதிக்கு வழங்கப்படுகிறது. இந்தப் பரிசை உருவாக்கியவர் சுவீடிஷ் நாட்டைச் சேர்ந்த வேதியியல் அறிஞர் ஆல்பிரட் நோபல் என்பவர்.

இவர் முதன் முதலில் டைனமைட்டை 1866ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். இதை மிகவும் ஒரு உன்னதமான நோக்கத்திற்காக உருவாக்கினார். ஆனால், இந்த வெடிகுண்டை அழிவுக்கென்றே பயன்படுத்த ஆரம்பித்ததும், மக்கள் எல்லோரும் இவரை மிகவும் கேள்வி மேல் கேள்வி கேட்டுப் புண்படுத்தினர். அது இவர் மனதுக்கு ஆறாத துக்கத்தை ஏற்படுத்தியது. இந்தத் துக்கத்தை ஈடுகட்டும் வகையில் விஞ்ஞானத்தில் சாதனை புரிபவர்களுக்கு தன்னுடைய சொத்தில் இருந்து நோபல் பரிசு கிடைக்கும்படியாக ஒரு திட்டத்தை உருவாக்கினார் ஆல்பிரட் நோபல். இப்படி உருவானது தான் நோபல் பரிசு!



**டில்லியிலுள்ள** முனிசிபல் கார்ப்பரேஷனில் எலிகளுக்கு என்றே ஒரு தனிப் பிரிவு உள்ளது. அதில் 97 பேர் வேலை செய்கின்றனர். அதில் 74 பேர் எலி பிடிப்பவர்கள். மற்றவர்கள் அவர்களை மேற்பார்வை செய்யும் அதிகாரிகள் ஆவர். இந்த டிபார்ட்மென்ட்டில் எலி பிடிப்பதற்கான கருவிகள் எதுவுமே இல்லை என்பதுதான் விசேஷமே!

# சில விடுகதைகள்

1. அரைக்கால் தண்ணீருக்குள் ஆடு நீச்சல் போடுது. அது என்ன?
2. அப்பா பணத்தை எண்ண முடியாது; அம்மா புடவையை மடிக்க முடியாது. அது என்ன?
3. உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன். அவன் யார்?
4. ஓடும் குதிரைக்கு வால் குறைகிறது. அது என்ன?
5. ஒரு பக்கப் பல்லால் ஒன்றை ஒன்பதாக்கும். அது என்ன?
6. வாலில்லாப் பறவை ஊர் ஊராய்ப் பறக்கிறது. அது என்ன?
7. வளைக்க முடியும் ஒடிக்கமுடியாது. அது என்ன?
8. நீலமேனி கொண்டவள் நிலம் சுற்றி அலைகிறாள். அவள் யார்?
9. பூமியில் வளராத மரம்; கிளை உண்டு இலை இல்லை. அது என்ன?
10. பிடி உள்ள குடையைப் பயன்படுத்த முடியவில்லை. அது என்ன?


**விடைகள்**
1. தவளை
2. நட்சத்திரங்கள் - வானம்
3. எறும்பு
4. ஊசி - நூல்
5. ரம்பம்
6. விமானம்
7. தலைமுடி
8. கடல்
9. மான்
10. காளான்.




# நீளமான பூனை

**ஸ்னோபி** என்ற பெயர் கொண்ட இந்தப் பூனை அதன் மூக்குப் பகுதியிலிருந்து வாலின் இறுதிவரை 40.8 அங்குலம் நீளமானது. 98 இறாத்தல் எடை கொண்ட இந்தப் பூனையின் உயரம் 13 அங்குலம். அதன் வால் மட்டும் 12 அங்குலம் நீளமானது.

ஸ்கொட்லாந்திலுள்ள அபேடின்சயர் என்ற பகுதியில் வாழ்ந்து வரும் லோர்னா சதர்லாண்ட் என்ற பெண்மணி இப் பூனையை வளர்த்து வருகிறார். ஸ்னோபியையும் அதன் சகோதரியான புபூ என்ற பூனையையும் குட்டிகளாக இருந்த காலத்திலிருந்தே வளர்த்து வருகிறார். ஸ்னோபி மூன்று மாதக் குட்டியா இருந்தபோது கருத்தடை செய்யப்பட்டது அதன் பின்னரே இந்தஅபார வளர்ச்சி ஏற்ப்பட்டதாக லோர்னா சதர்லான்ட் கூறுகிறார்.



# ஹெப்பி பர்த் டே



**சாய்** யாய் என்ற பெயர் கொண்ட முதலையே உலகிலேயே பிடிக்கப்பட்ட முதலைகளில் பெரிய முதலையென கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆறு மீற்றர்கள் நீளமும் சுமார் 1,114 கிலோ கிராம் எடையும் கொண்ட இந்த முதலையின் 28ஆவது பிறந்த நாள் 2000ஆம் ஆண்டு ஜுன் மாதம் பத்தாம் திகதி கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் கோழிகளும் மீனும் விருந்தாக வழங்கப்பட்டதாம். சமுட் பிராகன் முதலை காட்சிச்சாலை அதிகாரிகளுடன் முதலையார் பிறந்த நாள் கொண்டாடும் காட்சியையே படத்தில் காண்கிறீர்கள்.

# வலுவான இழுவை

**அவுஸ்திரேலியாவின்** நியூசவுத் வேல்ஸ் பகுதியைச் சேர்ந்த அல்பரி என்ற இடத்தில் டெரக் போயர் என்பவர் 45 ஆயிரம் கிலோ கிராம் எடையுள்ள ட்ரக் வண்டியொன்றினை முப்பது மீற்றர்களுக்கு இழுத்துச் சென்று சாதனை படைத்தார். 2004ஆம் ஆண்டு மார்ச் ஏழாம் திகதி இச் சாதனை புரியப்பட்டது. மேலும் எழுபது மீற்றர்கள் நீளமும் 72 தொன் எடையுமுள்ள ஊர்தியை அவுஸ்திரேலியாவின் குயீன்ஸ்ரனிலுள்ள வினஸ்ரன் என்ற இடத்தில் இழுத்துச் சாதனையையும் புரிந்துள்ளார்.




# இசைப் பயணம்...

ஜேர்மனியைப் பிறப்பிடமாகக் கொண்ட கிறிஸ்ரியன் அடம் என்பவர், வயலின் இசைத்துக்கொண்டே பின்புறமாக சைக்கிள் ஓட்டி சாதனை படைத்துள்ளார். இவர் 6045 கி.மீ தூரத்தை 5மணித்தியாலம் 9 நிமிடங்களில் தனது இசைப்பயணத்தைத் தொடர்ந்து சாதனை படைத்துள்ளார். இவர் ஒரு வயலின் கலைஞர் என்பதுடன், வயலின் தயாரிப்பாளருமாவார். இவருக்கு தற்போது 43 வயதாகிறது. இதுவொரு அசாத்தியச் சாதனை மட்டுமல்ல, இரசனையுள்ள சாதனையும் கூட...



# வாள் விழுங்கி

**பிராட்** பையர்ஸ் என்பவர் 28 அங்குல நீளமுள்ள எட்டு வாள்களை விழுங்கி உலக சாதனை படைத்தாரென்று கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1998ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28ஆம் திகதி இச் சாதனை நிகழ்ச்சி, தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது. பின்னர் பத்து வாள்களை விழுங்கி, பையர்ஸ் தனது சொந்தச் சாதனையை முறியடித்தார்.






ரீச்சட்
படம் - அரவிந்த்

## கமல் - ஸ்ரேயா ஜோடி சேர இயக்குநர் சங்கர் எதிர்ப்பு

**கமலஹாசனின்** அடுத்த படம் 'தசாவதாரம்'. 10 வேடங்களில் இதில் நடிக்கிறார். கமலுக்கு ஜோடியாக நடிக்க கதாநாயகி தேடும் பணி கடந்த நில நாட்களக நடந்தது. வித்யா பாலனை அணுகினார்கள். ஆனால் அவர் 90 நாட்கள் இந்திப் படங்களுக்கு ஒப்பந்தம் ஆகியுள்ளார். தற்போது மணிரத்னத்தின் 'குரு' இந்திப் படத்தில் நடித்து வருகிறார்.

இதையடுத்து ஸ்ரேயாவை அணுகியுள்ளனர். ஸ்ரேயா தற்போது ரஜினி ஜோடியாக 'சிவாஜி' படத்தில் நடித்து வருகிறார். 'சிவாஜி' ரிலீசுக்கு முன் அப்படத்தில் நடிப்பவர்கள் வேறு படங்களில் நடிக்கக் கூடாது என்பதில் டைரக்டர் ஷங்கர் உறுதியாக இருக்கிறார்.

'சிவாஜி' படம் அடுத்த வருடம் தான் ரிலீசாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை கமலுடன் நடிக்க முடியாத நிலைமை ஸ்ரேயாவுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் தவிப்பில் உள்ளார். ஸ்ரேயாவுக்காக 'சிவாஜி' படம் ரிலீஸ் வரை காத்திருக்க கமல் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.



---

சென்னையில் உள்ள பிரபல கண் மருத்துவமனை ஒன்றில் சமீபத்தில் கவுண்டமணி கண் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு வீடு திரும்பியுள்ளார்.

---

சி னி

**அ**சின், நயன்தாரா, த்ரிஷா மூவருமே சினிமாவில் நடிப்பதைக் காட்டிலும் தற்போதெல்லாம் விளம்பரப் படங்களில் நடிப்பதையே பெரிதும் விரும்புகின்றனராம். ஆமாம் பின்னே இரண்டு நாட்களுக்கு ஒரு விளம்பரப் பட ஷூட்டிங் என்றால் கூட இருபது, முப்பது லகரம் சம்பளம் என்றால் சும்மாவா? சினிமாவில் ஐம்பது, அறுபது நாட்களுக்கு அதுதானே சம்பளம்.

---

## ரீமாசென் கவர்ச்சி நடனம்

**சூப்பர்** குட் பிலிம்ஸ் சார்பில் ஆர்.பி.சௌத்ரி தயாரிக்கும் புதிய படம் 'அரண்'. இந்தப் படத்தில் ஜீவா கதாநாயகனாக நடிக்கிறார். கோபிகா கதாநாயகியாக நடிக்கிறார்.

மோகன்லால், லட்சுமி, கோபால்சாமி, பிஜுமேனன், வி.எம்.சி.ஹனிபா, ரமேஷ்கண்ணா, கஞ்சா கருப்பு, டெல்லி கணேஷ், சந்தானபாரதி ஆகியோரும் நடிக்கிறார்கள்.

இந்தப் படத்தில் ரீமாசென் கவர்ச்சிப் பாடலொன்றுக்கு நடனம் ஆடியிருக் கிறார்.

பொள்ளாச்சியில் அரண் படப்பிடிப்பு நடந்து வருகிறது. இங்கு இராணுவ வீரரின் காதல் காட்சி பட மாக்கப்பட்டது.

---



மதுமிதா

**ஜீ**வா - பூஜா நடிக்க சுப்பிரமணிய சிவா இயக்கும் 'பொறி' படத்தில் டைரக்டர் சீமான் வில்லனாக நடித்துக்கொண்டிருக்கிறார். சமீபத்தில் அண்ணாநகர் பகுதியில் சீமானும் அவரது ஆட்களும் கடைகளில் அடித்து நொறுக்குவதுபோல காட்சி எடுத்துக்கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்துவிட்டு ஏதோ நிஜத்திலேயே சீமான் தகராறு பண்ணுகிறாரோ என மக்கள் எல்லாம் கூடிவிட்டார்கள். அந்தளவுக்கு தத்ரூபமா நடிச்சிருக்காரோ சீமான்...?

**ஒ**ருவழியாக ஓடிப்போன நிலா ஓடிவந்துவிட்டார். 'ஜாம்பவான்' படப்பிடிப்பில் குளிக்க மினரல் வாட்டர் கேட்டு களேபரம் பண்ணிய நிலா, டெல்லிக்கே ஓடிவிட்டார். சமீபத்தில் பிரசாந்தின் அப்பா தியாகராஜன் போய், நிலா குடும்பத்தாரிடம் பேசி சமாதானம் செய்து நிலாவை இங்கே கூட்டிவந்து படப்பிடிப்பை தொடர்ந்திருக் கிறார்கள்.

குடிக்கிறதுக்கே தண்ணிக்கு தட்டுப்பாடா இருக்கும்போது குளிக்கிறதுக்கு மினரல் வாட்டர் கேட்டிருக்கீங்களே? இதெல்லாம் கொஞ்சம் ஓவரா தெரியலியா? என நிலாவிடம் கேட்டோம்.

"அவங்கவங்க பிரச்சினை அவங்கவங்களுக்கு. தொண்ணூறு சதவீத நோய்கள் தண்ணீர் மூலமாத்தான் பரவுது. அதனால சுத்தமான தண்ணிதான் உபயோகப்படுத்தணும். போதாக்குறைக்கு எனக்கு ஆஸ்த்துமா பிரச்சினையும் உண்டு. அதனால்தான் நல்ல தண்ணீர் கேட்டேன். அது மினரல் வாட்டர், அது இதுன்னு பில்ட்-அப் ஆயிப்போச்சு. போனது போகட்டும், நல்லபடியா நடிச்சுக் குடுத்துட்டு நல்ல நடிகைன்னும் பேர் வாங்குவேன்" என்றார் நிலா.

இந்தப் படத்திற்காக மகாலிங்கம் மலைக் கோயிலில் ஒரு காட்சி எடுத்திருக்கிறார்கள். இதில் நிஜமாகவே பிரசாந்த் நாக்கில் வேல் குத்திக்கொண்டு காவடியும் எடுத்திருக்கிறாராம்.

---

'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி' படத்தில் வடிவேலு நடிப்பதென்னவோ இரட்டை வேடங்களில்தான். ஆனால் அவருக்கு மோனிகா, நந்திதா, லக்ஷா, ரீவா என்று ஆக மொத்தம் நான்கு ஜோடிகளாம்.

---

**பு**துமுகம் ஆர்.கே.எஸ்.ஜி. என்பவர் இயக்கி கதாநாயகனாக நடிக்கும் படம் '16 நாட்கள்'. 16 நாட்களுக்குள் நடக்கும் திகிலான சம்பவங்களை வைத்து ஒரு படத்தை எடுத்து வருகிறார்கள். இதில் கதாநாயகி ஆனந்தியும் குலுக்கல் நாயகி சுஷ்மிதாவும் இதுவரை இல்லாத அளவுக்கு கவர்ச்சிப் புரட்சி பண்ணியிருக்கிறார்கள். படத்தில் இன்னொரு விசேஷம் 'சித்திரம் பேசுதடி' வாளமீன் கானா உலகநாதன் இந்தப் படத்திலும் ஒரு கானா பாடல் பாடி நடிக்கிறார்.

குடிப் பழக்கம் வேண்டாம், சின்ன வீடு வேண்டாம் என்பதை வலியுறுத்தி அந்தப் பாடல் வருகிறது.

---



ப்ரிதி - மாளவிகா
கை வந்த கலை

'சித்திரம் பேசுதடி' படம் பார்த்தவர்கள் தண்டபாணியின் வாழைக்காய் மண்டி செட்டைப் பார்த்து புதிதாய் இருக்கிறதே, வித்தியாசமாகவும் தெரிகிறதே என அசந்து போனார்கள். அந்தப் பாராட்டுக்கு முழுக்க முழுக்க சொந்தக்காரர் ஆர்ட் டைரக்டர் அமரன்.

கோவையைச் சேர்ந்த அமரன், மும்பையில் படித்துவிட்டு ஆர்ட் டைரக்டராக வந்தவர். ஆர்ட் டைரக்டராக வந்தாலும், அதற்கு முன்பே அவர் ஒரு டைரக்டர். மும்பையில் சுற்றுச் சூழல் பற்றி 'ஓயாசிஸ்' என்கின்ற குறும்படத்தை எடுத்து பிலிம் பெஸ்டிவலில் பரிசு வாங்கினார். நெல்லை மாவட்டம் திருக்குறுங்குடியில் தேவதாசிப் பெண்களே முழுக்க முழுக்க நடித்து நடத்திவந்த கைசிக நாடகம் பற்றி கைசிக நாடகம் என்ற பெயரிலேயே ஒரு குறும் படத்தை எடுத்து அசத்தியவர்.

தன்னுடைய ஆர்ட் டைரக்ஷன் திறமைகளை ஒரு சிடியில் தயாரித்து வாய்ப்பு வேட்டையில் இறங்கினார். அப்படித்தான் அமைந்தது ஆர்ட் டைரக்டர் வாய்ப்பு. முதல் படம் 'ஜித்தன்'. அதன்பிறகுதான் 'சித்திரம் பேசுதடி', 'மொர்க்குரிப் பூக்கள்' அடுத்து 'காதல் வரும் பருவம்' என கலைவண்ணம் காட்டி வருகிறார் அமரன்.

---

'சீன்ன வீடா வரட்டுமா, பெரிய வீடா வரட்டுமா' புகழ் தேஜாஸ்ரீ சென்னையில் வீடு தேடிய போதெல்லாம் சின்ன வீடும் கிடைக்கவில்லை; பெரிய வீடும் கிடைக்கவில்லை. ஹோட்டல்தான் கிடைத்தது. இதனால் அம்மணிக்கு செலவு கட்டுப்படியாகவில்லை. இந்த நிலையில்தான்...விஷயத்தைக் கேள்விப்பட்டு சக குலுக்கல் நடிகையான 'ஓ போடு' ராணி, தன் வீட்டில் மேல்பகுதியை தேஜாஸ்ரீக்கு வாடகைக்கு விட்டார். வாடகைக்கு விட்டதோடு வாடகை வாங்கிக்கொண்டு சும்மா இருக்க வேண்டும். தேவையில்லாமல் தேஜா வீட்டுக்குள் அடிக்கடி நுழைந்து, தேஜாவின் சுதந்திரத்தைப் பறித்ததால், ராணிக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு வீட்டைக் காலிசெய்து கொண்டு தசரதபுரத்தில் ஒரு புதிய வீட்டில் குடியேறியிருக்கிறார் தேஜாஸ்ரீ.

---



பிரசாந்த் - நிலா
ஜாம்பவான்

'கொய்யாங்கோ கும்மாங்கோ' பாடல் புகழ் நடிகை ஜோதிர்மயி. அம்மணி சமீபத்தில் ஒரு பட ஷூட்டிங்கிற்காக வெளியில் போய்விட்டு திரும்பி வந்தால் அறையில் அவர் வைத்திருந்த பொருட்களை எல்லாம் மாற்றுச் சாவி போட்டு யாரோ சிலர் களவாடிப் போய்விட்டார்களாம். அம்மணி அதுபற்றி அந்த ஏரியா பொலிஸ் ஸ்டேஷனில் புகார் செய்திருக்கிறார். 'இதயத் திருடன்' படத்தில் 'கொய்யாங்கோ கும்மாங்கோ' பாடல் மூலம் நம் இதயங்களை கொள்ளையடித்த ஜோதிர்மயியின் பொருள்களை திருடியது யாரோ?





ஸ்ரீகாந் - பாவனா
கிழக்கு கடற்கரை சாலை

## நவ்யாவுக்கு தூது


ஒளிப்பதிவாளராய் இருந்து டைரக்டரான தங்கர்பச்சான் 'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி' படம் மூலம் கதாநாயகன் ஆனார். இப்படத்தில் அவருக்கு ஜோடியாக நவ்யாநாயர் நடித்தார்.

அப்போது இருவருக்கும் லடாய் வந்ததாம். படத்தை முடித்துக் கொடுத்த கையோடு தங்கர்பச்சானிடம் டு சொல்லி விட்டு பறந்தார் நவ்யா.

இப்போது பள்ளிக்கூடம் என்ற பெயரில் படம் எடுக்கிறார் தங்கர். இதில் நவ்யாவை நடிக்க வைக்க விரும்புகிறார். இதற்காக அவரை அணுகியபோது, 'உங்கள் படத்தில் இனி நடிக்கவே மாட்டேன்' என்று பிடிவாதமாக மறுத்தாராம். இதனால் வருத்தத்தில் உள்ளார் தங்கர்.

## நடிகரான ஒளிப்பதிவாளர்

நாளை படத்தில் இரண்டாவது கதாநாயகனாக 'நட்டு' பாத்திரத்தில் நடித்து கலக்கியவர் நட்ராஜ். இவர் பல இந்திப் படங்களில் ஒளிப்பதிவாளராக இருந்து நடிகராகியுள்ளார். வி.ரங்கா, யு.கே. செந்தில்குமார், பி.ஆர்.விஜயலட்சுமி ஆகியோரிடம் உதவி ஒளிப்பதிவாளராக இருந்துள்ளார். சொந்த ஊர் பரமக்குடி. நல்ல கேரக்டர் வந்தால் தொடர்ந்து நடிப்பேன் என்றார் அவர்.



ஜீவா - பூஜா
பொறி

# விசிட்

## வாஸ்து மீன்

தியா தனது வீட்டு மீன் தொட்டியில் வாஸ்து மீன் ஒன்றை வளர்க்கிறார். அதற்கு 'ஸ்னுபி' என்று பெயரிட்டுள்ளார். இந்த மீன் மலேசியாவில் இருந்து இருபதாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கப்பட்டதாம்.

ஒரு நாளைக்கு பத்து 'கோல்டன் பிஷ்' எனப்படும் குட்டி மீன் வகைகள் இதற்கு உணவாகத் தரப்படுகிறது. வாஸ்து மீன் சினிமா மார்க்கெட் பிடித்துத் தருமா?

## காதலருக்கு புது 'ரூம்'

நயன நடிகை காதலில் மூழ்கிக் கிடக்கிறாராம். வல்லவருடன் ஒருநாள் கூட பேசாமல் இருக்க முடியாது என்று பறைசாற்றிய இவர் காதலருக்காக எவரும் துணியாத காரியம் செய்துள்ளார்.


காதலர் மலையாள தேசத்தில் உள்ள தனது சொந்த வீட்டில் ஒரு அறையை தங்குவதற்கென்றே பிரத்யேகமாக ரெடி செய்துள்ளார். அவருக்குப் பிடித்தமான எல்லாப் பொருட்களையும் அறைக்குள் வைத்து அலங்கரித்துள்ளாராம்.

'அருந்ததி' எனும் பெயரில் தெலுங்குப் படமொன்றை இயக்குகிறார் 'வி.ஐ.பி.' உட்பட இன்னும் சில படங்களை இயக்கிய எஸ்.டி.சபா.வடிவுக்கரசி விவகாரத்திற்குப் பின் இனி தமிழ் சினிமாவே வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டார்போலும் சபா.

'நிம்மதி', 'கோலங்கள்' உட்பட பல டிவி சீரியல்களில் நடித்துவரும் ஸ்ரீவித்யா, சூர்யாவும் ஜோதிகாவும் நடிக்கும் 'ஜில்லுனு ஒரு காதல்' படத்தில் ஒரு கேரக்டரில் நடித்துவருகிறார். தனது சினிமாவுலக அனுபவங்களை சின்னத்திரை வட்டாரங்களில் பகிர்ந்துகொள்ளும் ஸ்ரீவித்யா, சூர்யாவின் இமேஜையே காலிசெய்து கொண்டிருக்கிறார். ஜோதிகா ரெஸ்ட் எடுப்பதற்காக கேரவான் வேனுக்குள் போய்விடும் போதெல்லாம் சூர்யா என்கிட்ட ஜொள்வடிய பேசுறாரு எனக் கதைவிட்டு சூர்யாவின் இமேஜை கந்தலாக்கிக் கொண்டிருக்கிறார்.



ஸ்ருதி
கை வந்த கலை



'பாக்ஸ் ஆபீஸ்' எனும் பெயரில் லண்டன் வாழ் தமிழர் திகழ் என்பவரும் நம்மூர் தமிழா நாகராஜும் இணைந்து ஒரு புதிய படத்தைத் தயாரிக்கின்றனர். முற்றிலும் புதுமுகங்கள் நடிக்கும் இந்தப் படத்திற்கு 'சைக்கோ' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மன்மதன் படத்தை இயக்கிய ஏ.ஜே.முருகன் இப்படத்தை இயக்குகிறார்.

தனது இயக்கத்தில் உருவான முதல் படமான 'மனதை திருடிவிட்டாய்' படத்தில் காயத்ரி ஜெயராம் மற்றும் பாடலாசிரியர் வீ.இளங்கோ இருவரையும் அறிமுகப்படுத்திய இயக்குநர் நேரன் தெய்வநாயகம் இப்பொழுது இயக்கிவரும் 'ஒரு பொண்ணு ஒரு பையன்' படத்திலும் ஹீரோ சந்தீப், ஹீரோயின் ரூபா, காமிராமேன் ஏ.ஜே.தர்ஷன் மற்றும் ஆண்டாள் பிரியதர்சினி, முத்தச்சி, சுப்புலட்சுமி ஆகியோரை அறிமுகப்படுத்துகிறார்.

திரைப்படக் கல்லூரி மாணவர் மாதவா என்பவரது கதை, திரைக்கதை, வசனம் மற்றும் இயக்கத்தில் திரைப்படக் கல்லூரி மாணவர் இளையராஜாவின் ஒளிப்பதிவில் உருவாகும் படம் 'புலிக்குட்டி'. ஏர்.ஆர்.ரகுமான், எஸ்.ஏ.ராஜ்குமார் ஆகியோரிடம் கீபோர்டு பிளேயராக இருந்த ரோஷன் கிஷோர் முதன் முதலாக இசையமைக்கும் இப்படத்தில் மகேஷ்வர் எனும் ஹீரோ அறிமுகமாகிறார். எம்.ஜே.பிலிம் சர்க்யூட் சார்பில் எம்.ஜே.இளங்கோ 'புலிக்குட்டி'யை தயாரிக்கிறார்.

**வைஜெயந்திமாலா** - பாலியின் வாரிசு சுசீந்திரா பாலி நடிக்க, பிரபல தயாரிப்பாளர் விஸ்வாஸ் சுந்தர் முதன் முதலாக இயக்கித் தயாரிக்கும் படம் 'ஸ்வீட்'. இந்தப் படத்தை அடுத்து ஆர்யா நடிக்கும் புதிய படமொன்றையும் தயாரிக்கிறாராம் விஸ்வாஸ் சுந்தர். இந்தப் படத்தையும் அநேகமாக சுந்தரே இயக்கலாம் எனத் தெரிகிறது.

சமீபத்தில் நடந்த 'ஜெர்ரி' படத்தின் ஆடியோ வெளியீட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார் கமல். கமல் எழுந்து நின்றால் எழுந்தும், உட்கார்ந்திருக்கும்போது தானும் அமர்ந்திருந்தாலும் எப்பொழுதும் போல் கால்மேல் கால் போடாமலும் பயமும் பவ்யமும் காட்டி, அடக்க ஒடுக்கமாக அருகில் இருந்த அத்தனை நட்சத்திரங்களையும் வியப்பில் வாய்பிளக்க வைத்தாராம் ஜெர்ரி படத்தின் மூன்று நாயகியரில் ஒருவரான மும்தாஜ்.

கவர்ச்சி நடிகை மும்தாஜ், கமலுக்குத் தந்த மரியாதையை கமல் கவனித்தாரா? இல்லையா? தெரியவில்லை. கவனித்திருந்தால் நிச்சயம் தசாவதாரத்தில் மும்தாஜுக்கு பத்து கமலில் ஒரு கமலுக்கு ஜோடியாகும் அதிர்ஷ்டம் அடிக்கலாம்.

கமலின் முன்பு இந்தக் கவர்ச்சி மலை மும்தாஜ் பதுங்கியதற்குக் காரணம் ஒரு படத்திலாவது கமலோடு ஜோடி போட்டுவிட வேண்டும் என்கிற ஆசைதான். இப்போதைக்கு படம் எடுக்க முடிகிறதோ இல்லையோ, போட்டோ படமாவது எடுத்துக்கொள்ளலாம் என கமலோடு ஒரு போட்டோவும் எடுத்துக்கொண்டார் மும்தாஜ்.

இதேபோல் கமல் மீது பறவைக் காய்ச்சலைவிட அதிகமான காய்ச்சல் கண்டிருக்கிறார் நமீதா. அவருக்கும் எப்படியாவது கமலோடு ஒரு பாட்டுக்காவது குத்து டான்ஸ் போட்டு கமலைக் கட்டிப் பிடித்துவிட வேண்டும் என்கிற கனவு இருக்கிறது.

ஆனால் கமல் தரப்பாரோ த்ரிஷாவிடம் பேசி வருகிறார்கள். த்ரிஷாவுக்குத் தயக்கம். கமல் காட்சியில் தன் உதடுகளைக் கவ்வி விடுவாரோ என்கிற பயமில்லை. படத்தில் ஹீரோ, வில்லன், மொட்டைத்தலையன், ஒல்லியான உடல்வாகு, .'. பாரினர் உட்பட 10 கேரக்டர்களில் நடிக்கும் கமலுக்கு பல ஜோடிகள் என ஒரு தகவல் இருப்பதால், பலபேரில் ஒருத்தரா எப்படி நடிக்கிறது என்கிற தயக்கம்தான் த்ரிஷாவுக்கு. ஆனால் படத்தில் சில கேரக்டர்கள் இருந்தாலும் நீங்கள் தான் கதாநாயகி என த்ரிஷாவிடம் சொல்லியிருக்கிறார்கள். அதன்பிறகு த்ரிஷாவுக்கும் ஓரளவுக்கு நம்பிக்கை வந்திருக்கிறது. நமக்குத்தான் முக்கியத்துவம் என்று இருப்பினும் சிரஞ்சீவியோடு 'ஸ்டாலின்' படத்தில் டைட் ஷெட்யூலில் நடித்து வருகிறார். அது கிராஸ் ஆகாதபடிக்கு கமல் படத்துக்கு கால்ஷீட் கேட்டால் அம்மணி கமலோடு நடிக்கக் கூடும்.



பார்த்திபன் - நமீதா
பச்சக்குதிர

## வாய்ப்பு வேட்டை

துள்ளுவதோ இளமை படம் மூலம் தமிழுக்கு அறிமுகமானவர் ஷெரீன். தொடர்ந்து பல படங்களில் நடித்தார். அப்போது ரோகன் என்பவர் அவரை சுற்றினார்.

இருவரும் காதலிப்பதாக செய்தி பரவியது. காதலை எதிர்த்த தாயாரை ஷெரீன் ஓரம் கட்டினார். பிறகு காதலர்கள் இருவரும் சுதந்திரமானார்கள். திடீரென்று அந்த காதல் முறிந்தது. ரோகன் படங்களில் நடிக்க போய் விட்டார். ஷெரீன் வாய்ப்பு இழந்தார்.

இப்போது நடந்த சம்பவத்துக்காக தாயாரிடம் மன்னிப்புக் கேட்டு விட்டு அவரை அழைத்துக் கொண்டு கோடம்பாக்கத்தில் படக் கம்பெனிகளுக்கு ஏறி ஏறி இறங்குகிறார்.



பரிதி - ஸ்ருதி
கை வந்த கலை




## எத்தனையாவது இடம்

என்
எளிய கவிதைகளை
உன்
கோடீஸ்வர அழகு
கொத்திச் செல்கின்றது.

இப்போதெல்லாம்
தட்டுப்படுகின்ற
இடமெல்லாம்
தாஜ்மஹாலாய்ப்படுகிறது.

என்
வாலிப இரும்பை
வளைய வைத்தவளே!
உனது
தரப்படுத்தலில்
எனக்கு
எத்தனையாவது இடம்...

எனது
நேசிப்பை
உனது
அகராதியில் எவ்வாறு
அர்த்தம் வழங்கியிருக்கிறாய்.

கேள்...
என்
மனதின் கரையோரத்தில்
நீ
மண்ணரிப்பை
ஏற்படுத்தியிருக்கிறாய்.

பரீட்சை மண்டபங்களில்
உன்னை மட்டும்
எழுதுவதற்காகவே
ஓடோடி வருகிறேன்.

உன் இதயம் என்ற
செவ்வாய்க்கிரகத்தில்
அடிக்கடி
கவிதைகளால்
ஆராய்ச்சி செய்ய
ஆசைப்படுகிறேன்...

உன் நினைவுகள்
உறங்கவிடாது
உண்ணவிடாது
பொருளாதாரத்தடை
விதிக்கின்றன.

பெண் புல்லாங்குழலே
வாழ்க!
உன்
துடிப்புப் பார்வையோடு
நீயும்
நீடூழி வாழ்க!

வருகிறேன்
வசந்த காலப் புல்லாய்
மீண்டும்
தினமுரசில்
முளைத்து வருவேன்.

*-அ.ந.அப்துல் ரஹ்மான்,*
*பட்டியடிப்பிட்டி.*

## சிதறிப்போய் மனிதம்

அழகிய இரு கண்களும்
உடைந்து ஊத்தங்கும்
முட்டையை போன்று

முறுக்கேறிப்போன
இரு கரங்களும்
எரிந்த மொக்குக்
கட்டை போன்று

எண்ணெய் வைத்து
காதின் மேல் கொஞ்சம்
அதன் மேலே
கொஞ்சம்...கொஞ்சமாக
வெட்டிச் சீவிய - கறுப்பு
தலை முடியானது
உரித்த ஆட்டுத் தோலை
சிவப்புக் கோழிச்
சாய்த்துள்ளே
போட்டாற் போலானது

சூத்தை குத்தாமல்
சேங்கு படியாமல்
தினந்...தினம்
வேம்புக் குச்சிகளாலும்
'கலிமா' கலாலும்
தீட்டிப் பாதுகாத்த பற்கள்

மீனின் பூச்செப்பட்டையை
கிழித்தெறிந்தாற் போல்
குப்பையில் கிடந்தது

சிறுகுடல்களும்
பெருங்குடல்களும்
பின்னிப் பிணைந்து
மரக் கன்றுகளில்
கொடிபோல்
காட்சியளித்தது.

அப்போது
மழை காலத்தில்
மழைத்துளி கொப்புகளில்
இருந்து விழுவது போல்
குருதித் துளிகளும்
சிந்திட மறக்கவில்லை

புடவைக் கடையில் தொங்கும்
இறப்பர் பாவையின்
மண்டையோடு போல்
மனித மண்டையோடுகள்
வெடித்துச் சிதறிக்கிடந்தது

மண்வெட்டி
முறிந்த காம்பாய்
பாதமிரண்டுமின்றிய
கால்கள் காம்புபோல்
கிடந்தது...கிடந்தது

உயிர்களுக்கு
உத்தரவாதமில்லாததால்
கதவற்ற வீட்டில்
தூங்குவதற்கும்
வீதியில் தூங்குவதற்கும்
வித்தியாசமுண்டா!...

வாகனங்களை
முற்றாய் கழற்றி
வீசி விட்டாற் போலல்லவா!
மனித உறுப்புகளையும்...

*-அ.கா.மு.ரிஸ்வின்,*
*மூதூர்- 01.*

## உலக நியதி

எண்ணில் எதுவும்
நிரந்தரமில்லை
தோல்விகள் ஒரு போதும்
சுமைகளில்லை!

ஒரு நாள் சோகம்
மறுநாள் தீரும்
அதுதான் நியதி
காலத்தின் விதி!

இன்று இளமை பூக்கிறது
நாளை முதுமை காய்க்கிறது
வாழ்வின் பருவங்கள் இது
மரபும் நிலைக்கிறது!

வறுமைக்குள்ளும்
உண்டு செழுமை - அது
பாலைவனத்தை மாற்றும்
பூஞ்சோலை!

குருதியை இரைக்காமல்
காயங்கள் இல்லை
காயங்கள் வந்தும்
தங்கி நிற்பதில்லை!

வாழும்போதே மனிதம்
காப்பது மகத்துவம்
மரணித்தபின்னே போலிக்
கண்ணீர்
விடல் - மகா கபடம்!

மனிதா!
உன் அறியாமை இருள்
துடைக்க
அவனியில் ஆயிரம்
ஒளி விளக்குண்டு!
தேடிக் கற்று அறிவதே
அதன் சிரமத்தில்
சிகரம் உண்டு!

உண்மை உயர்வுக்கு
உள்ளத்து ஏணி
தினம் பயணிக்க வேண்டும்
அது
நேர் பாதையென்னும்
தோணி...!!!

*-ஏ.ஆர்.எம்.நதார்,*
*திருமலை.*

## என்னவளே..

என்னவளே உன்னைப்
பார்த்துக்
கொண்டிருக்கும் பொழுது
என் எண்ணங்கள்
எத்தனையோ
ஜென்மம் சென்று
வருகின்றன.

நெஞ்சுக் கூட்டில் தேக்கி
வைத்த
உன் நினைவுகளை
கனவுகள் தினம்
அர்ச்சனை செய்து
அலங்கரிக்கின்றன.

சூழ்நிலையால் புரிந்து
கொள்ள மறுக்கிறாயோ
வேண்டாம் என்
மனநிலையாவது அறிந்து கொள்

உன் நினைவுகளால்
ஒவ்வொரு
நொடிகளையும்
ஒவ்வொரு
வருடங்களாய்
ஒத்திகை பார்க்கிறேன்.

என்மேல் உனக்கு
இரக்கமே இல்லையா
கண்டும் காணாதது
போல் - ஏன்
என்னை ஏமாற்றிப்
போகிறாய்.

உன் உருவப் படத்தை
பார்த்து
உயிர் விடும் எனக்கு
உன் நினைவுகளோடு
மட்டும்
வாழ்ந்தால் போதும்
என்னவளே...

*-வி.முகிலன்,*
*நெடுந்தீவு.*

## நிதர்சனம்!

செல்லாக் காசான
என் தேசத்தில்
கொலைக்களமாகி
பலி பீடமாகி
உறைந்து போன
குருதி நாற்றத்தில்
குறுகிக் கிடக்கிறது
வாழ்க்கை!

கிலியூட்டும்
இரவுகளும்
பழி தீர்க்கும்
பகல்களும்
ஈரக்குலை
நடுங்க வைக்கும்!

சாக்காடும்
ஒப்பாரியும்
பிண வாடையும்
பார்த்துப் பார்த்து
சலிப்படைந்த
கண்களும்
வேட்டுச் சத்தம்
கேட்டுக்கேட்டு
செவிடான
காதுகளும்
மரணத்தை
நினைவுறுத்தும்!
நரிகளின்
ஊளையும்
ஆந்தைகளின்
அலறலுமே எங்கள்
'தேசிய கீதமானது'
இன்று!

உயிரைக் கையில்
பிடித்துக் கொண்டே
ஜீவனோ பாயம்
நடத்திடும்
கொலை யுகத்தில்
வேலிக்கே
இரையாகும்
பயிர்கள்...!!

யுத்தம் உருக்குலைத்த
மூழியான
தாய் மண்ணில்
'மூங்கையாக'
'முழுக் குருடனாக'
வாழ்வதொன்றே
உசிதமென்றால்...

எழுது கோலுக்கும்
கருத்துச்
சுதந்திரத்துக்கும்
விடுப்புக் கொடுக்க
இப்பொழுதே தயார்!!

*-யாழுமீர் மர்சூன்.*

## உலாப்போகும் உணர்வுகள்

விடிகாலைப்
பொழுதுகளும்
வேதனைகளைக்
கக்கி விட்டே
விலகிப் போகிறது!

ஆப்பிழுத்த
குரங்காய்
அவதிப்படுகிறது
மனது!

இடிபாடுகளுக்குள்
அகப்பட்ட நாகமாய்
ஏங்கித் தவிக்கிறது
இதயம்!

வாசற்படியை
வந்து தட்டிய
நேற்றைய
வசந்தத்தை
நினைத்தே
நீண்ட பெருமூச்சு
விடுகிறது
நெஞ்சம்!

அமைதிக்காகவும்
நிம்மதிக்காகவும்
அலை பாய்கிறது
விழிகள்!

இரு தசாப்த
இடி முழக்கத்தால்
கடல் கடந்து
கிடக்கிறது
உறவுகள்!

எட்டாக் கனியான
சமாதானத்துக்காகவே
இன்னமும்
கொட்டாவி
விட்டபடி
உலாப் போகிறது
உணர்வுகள்.

*-கன்னிமுத்து,*
*வெல்லபதியான்.*

## சயனைட் புன்னகை

நீ என்றோ...
சாய்ந்து சிரித்தது
இன்னும் என்னுள்
சயனைட்டாய்க்
கரைந்து
சாடிக்கிறது!

நிம்மதியான
நித்திரைக்கு
ஒவ்வொரு ராத்திரியிலும்
கொஞ்சமேனும்
அழவேண்டியிருக்கிறது!

எல்லாம்
தீர்ந்து போக
ஒரு
அரலிவிதையும்
அரைமுடிச் சீனியும்
போதும்தான்.

என்றாலும்
ஆசையாய் இருக்கிறது
உன்னோடு
இல்லையாயினும்
உன்
நினைவுகளோடாவது
வாழ்ந்துவிட்டுப் போக...!

*-சிவர்னாஸ் தௌபீக்,*
*வரலைனியாபுரம்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

*கவிதை உலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு. சிலர் தன்னுடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் வளர்ந்து வரும் கவிஞர்களான தேவமைந்தன், முஜீப் ரஹ்மான், த. அகிலன் ஆகியோர் எழுதிய சில கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவரின் கவிதையில் இருக்கும் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.*

## நெஞ்சே பகை என்றாலும்

தலைகுனிந்தாலும் என் கால்களைப்
பரப்பினேன்
பாதங்கள் ஊன்றினேன்...நெஞ்சத்திலே
வைத்தேன்,
பெற்ற என் தெய்வங்கள் இணையடி தம்மை.
தந்தை சொன்னசொல் -
"பிரச்சினையின் மையத்துக்கே செல்.
அஞ்சாதே.
தன்னந்தனியனாய் நில். கேள், உரத்த
குரலில்.
என்ன காரணம் இதற்கு? பதில் வரும்.
காரணத்தை அகற்று; காரியம் சரிப்படும்."
பதினாறே வயதுக்குள் பகவத் கீதைக்கு
இணையற்ற உவமைகள் ஏராளமாய்க்கோத்து
பாவதீபார்த்தம் வகுத்த ஞானதேவன்
மராத்தியில் சொன்னதைத் தமிழுள்
வாங்குவோம்
"யானையை வைத்து யானையைப்
பிடித்தல்போல்,
நிலாமுழுவதையும் ஓடை நீரில் பற்றுதல்போல்,
கூசுமொழிச் சூரியனை ஈரத் துண்டுவழிப்
பார்த்தல்போல்
ஓர்மையில் நிற்பாய்; உண்மையைக்
காண்பாய்."
கடல் அலைபோல் பகைவந்த போதும்
ஓடிவந்து உதவும்
உடல் - உயிர்த் தந்தையர் சொன்னசொல் -
தாயால்
உணவிட்டு வளர்ந்த தனக்கு.

*-தேவமைந்தன்.*

## வேகவேகமாய் ஒரு வேகம்

ஒரு வேகம் சிறந்தது என்றுச் சொல்லப்பட
ஆயிரம் காரணங்கள் இருக்கிறது
அந்த வேகத்துக்கு முன்னால்
எதுவும் சென்றுவிட முடியாது
என்ற நம்பிக்கையும்.
வேகவேகமாய் ஓடிக்கொண்டிருக்கும்
அந்த வேகத்தைப் பற்றி ஓரிரு
நாள்களுக்குள்
ஏதாவது முடிவுக்கு வரலாம்
ஆனால் வேகம் முடிவுக்கு வராது என்று
தெரியாமலாயிருக்கும்
என்றோ துவங்கிய அந்த வேகம்
எங்கே செல்லுகிறது என்று
அவதானித்தே காலங்கள் மேலிருந்த
கீழாக.
விழுந்து கொண்டிருக்கிறது
ஒரு நிலையில் தான் வேகம் செல்கிறது
என்று சொல்வதற்கான நிலை
வேகத்திலிருந்தே பெறப்படுகிறது என்று
சொல்லமுடிந்தாலும்
வேகம் பற்றிய நிச்சயமின்மையே
மீண்டும் மீண்டும்
அதை பேசச் சொல்கிறது.

## நட்சத்திரங்கள் மறையுமா?

நேற்றைய நாளின் கடைசி
கணங்களில் உதித்திருக்கும் சில
நட்சத்திரங்களைப் பற்றி
சொல்லியாக வேண்டும்
நட்சத்திரங்களை இதற்கு முன்பு

அறிந்ததைப் போல இல்லை
என்று நம்புவதிலிருந்து தான்
இந்த நட்சத்திரங்களைப் பற்றி
சொல்லமுடியும்

முரசின் கவிதை பயிற்சிக்களம்
பகுதியில் புதிய கவிஞர்களின்
வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு
களம் அமைத்துக் கொடுக்கின்றது.
தமது கவிதை வெளியீடுகளை அல்லது
வெளியிடப்படவிருப்பவற்றை வெளிக்
கொண்டுவர விரும்புவோர் முரசுடன்
தொடர்பு கொள்ளலாம்.

ஒரு புழுக்கத்தில் உதித்த இவை
அசாதாரணமாக
சூரியனை விட பெரிதாக இருக்கிறது.
நான்கு திக்கிலுமாக நின்று
நான்கு வர்ணங்களில் ஒளியை
உமிழ்ந்து கொண்டிருப்பதாக
கடைசியில் கிடைத்த தகவல்கள்
சொல்லுகின்றன
எனினும் ஒன்றை மட்டுமே
ஊர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது
அவை மறையுமா என்று.

## நிச்சயமின்மை

வெறுமையில் இருப்பதாக
சுய பிரஸ்தாபம் கொள்ளுமொரு நிலை
இனியில்லை
மையம் விளிம்பை காவுக் கொண்டு
விட்டது
எந்த நேரத்திலும்
சூனியப் பிளவில் பிரவேசிக்க நேரலாம்
காற்றின் வேகத்தில் செல்லும்
மேகங்கள் கூட கரு கொண்ட பின்னே
பிரசவிக்கின்றன.
இது முன்னின்றலின் இயங்கா விதி
எந்த ஒரு தருணமும்
ஒரு பித்தனாகவோ
சித்தனாகவோ செய்யலாம்.
நிச்சயமின்மையில் சிக்கி
தவிப்பதாக எழுந்த அபிப்பிராயம் கூட
வெறுமையில் சென்று முடிகிறது
இனி சுய பிரஸ்தாபம் தேவையில்லை.


*-எச்.முஜீப் ரஹ்மான்*

## சிந்திப்பது குறித்து....

நான் சிந்திப்பதை நிறுத்திவிடுகிறேன்
எதைப்பற்றியும்...
அது என்னைக் கேள்விகளால்
குடைந்து கொண்டேயிருக்கிறது
அது எப்போதும் மகிழ்ச்சியின்
எதிரியாயும் துயரத்தின்
தொடர்ச்சியாயுமே நீள்கிறது
எல்லோருடைய புன்னகைகளின்
பின்னால் உள்ள வேட்டைப்பற்கள்
குறித்தும் ஒளிரும் ஒவ்வொரு
வார்த்தைகளினதும்
குரூரநிறத்தையும் சிந்தனைதான்
எனக்குச் சொல்லித்தருகிறது...
புன்னகைகளை வெறுமனே
புன்னகைகளாயும் வார்த்தைகளை
வெறுமனே வார்த்தைகளாயும்
மனிதர்களின் கண்களின் பின்னால்
உள்ள இருள் நிறைந்த காடுகளை
பசும் வயல்களெனவும் நான்
நம்பவேண்டுமெனில் நிச்சயமாக
நான் சிந்திப்பதை நிறுத்தியே யாக
வேண்டும்.


*த. அகிலன்*

## மிக வேகமாக இறக்கையை அடிக்கும் பறவை



தொண்டைப் பகுதி ரூபி நிறம் கொண்ட கீச்சுக் கீச்சென ஒலியெழுப்பும் சிட்டுக் குருவி (ஆர்ச்சிலோசியஸ் கொலுபிறிஸ்) சம்போகத்தில் ஈடுபடும் போது செக்கனுக்கு இருநூறு தடவைகள் இறக்கைகளை அடிக்கும். ஏனைய சிட்டுக்குருவிகள் செக்கனுக்கு 90 தடவைகளே இறக்கைகளை அடிக்கும்.


## மிகப் பெரிய பறவைக் கூடு



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள செயின்ற் பீட்டர்ஸ்பேர்க்குக்கு அண்மையில் ஒரு சோடி மொட்டைக் கழுகுகள் இக் கூட்டைக் கட்டின. 1963 ஆம் ஆண்டு இந்தக்கூடு பரிசோதித்துப் பார்க்கப்பட்டது. ஒன்பதரை அடி அகலமும் 120 அடி ஆழமும் இரண்டு தொன் எடையும் கொண்டிருந்தது இந்தக் கூடு.

## மிக உயரப் பறக்கும் பறவை

ரூப்பல்ஸ் கழுகு என்ற பறவைகள் 37 ஆயிரம் அடி உயரத்துக்குப் பறக்கக் கூடியவை. 1973 ஆம் ஆண்டு ஐவரி கோஸ்ற்றின் அபிட்ஜன் என்ற பிரதேசத்தில் விமானமொன்றுடன் இந்த ரகப் பறவையொன்று மோதியதால் விமானத்தின் என்ஜின் சேதமுற்று விமானத்தினை தரையிறக்க வேண்டியேற்பட்டது.



# குழந்தைகளைப் பாதிக்கும் ஆறு முக்கிய நோய்கள்

**பொதுவாகவே** குழந்தைகள் நோய்க் கிருமிகளுக்கு சுலபமாகப் பாதிப்படைபவர்கள். ஆதலால் அபாயகரமான நோய்களில் இருந்து அவர்களைப் பாதுகாக்க முறையான தடுப்பு ஊசிகளைப் போடுவது அவசியம். குழந்தைகளைப் பாதிக்கும் பல்வேறு நோய்களில் இளம்பிள்ளை வாதம், அம்மை, தொண்டை அடைப்பான், காச நோய், குத்து இருமல், டெட்டனஸ் ஆகியவை முக்கியமானவை.



***அம்மை நோய்*** - வைட்டமின் சத்துக் குறைவாக உள்ள குழந்தைகளுக்கும், நீண்ட நாள் வயிற்றுப் போக்கால் அவதியுறும் குழந்தைகளுக்கும் இந்த நோய் உண்டாகும்போது ஆபத்து ஏற்படுகிறது. இதனால் நிமோனியா, கண்பார்வையில் குறைபாடு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன என்று மருத்துவ நிபுணர்கள் கருதுகின்றனர்.

***அம்மை நோயின் அறிகுறிகள்*** - மூன்று நாட்களுக்கு ஜலதோஷம், இருமல், காய்ச்சல். இதோடு கண்கள் சிவத்தல், கண்கள் கூசுதல், கண்களில் அதிகம் நீர் வருதல் ஆகியவை இருக்கும், சில குழந்தைகளுக்கு நெற்றி மற்றும் காதுகளின் பின்புறம் தடிப்புகள் ஏற்படும். பிறகு 3 அல்லது 4 நாட்கள் கழித்து கண்களில் கோழை உண்டாகலாம். முகம் மற்றும் உடலில் தடிப்புகள் ஏற்படும். பிறகு ஒருவாரம் கழித்து தடிப்புகள் மறையும். தழும்புகள் இருந்த இடத்தில் தோல் உரியத் தொடங்கும்.

***தொண்டை அடைத்தல்*** - இதுவும் மிக அபாயகரமானதாகும். இதனால் மூச்சு முட்டி உயிருக்குக் கூட ஆபத்து ஏற்படலாம். இந்நோய்க் கிருமிகளால் ஏற்படும் நச்சு காரணமாக இதயமும் நரம்பு மண்டலமும் பாதிப்படையலாம்.

இதன் அறிகுறிகளாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். முதலில் குழந்தைகள் மிகுந்த சோர்வுடனும் வாட்டமுடனும் இருக்கும். சாப்பாடு, விளையாட்டு ஆகியவை இருக்காது. கழுத்து வீக்கம் இருக்கும். மேலும் குழந்தைகள் பலவீனமடையும். கிருமிகள் சுவாசப் பகுதிக்குத் தாவும்போது சுவாசம் தடைப்படும் அபாயம் உண்டு. இதனால் உடனே மருத்துவரை அணுகவேண்டியது அவசியம்.


***வறட்டு அல்லது குத்து இருமல்*** - தொடர் இருமலால் குழந்தைகளுக்கு மூச்சுத் திணறல் ஏற்படும் அபாயம் உள்ளது. தொடர்ந்து இருமல் இருப்பதால் சில சமயங்களில் வாந்தி எடுக்கலாம். ஊட்டச் சத்து குறையும். முதலில் சளி பிடிக்கும், பிறகு இருமல் வலுக்கும் இதற்கு தற்போது மருந்துகள் ஏராளம் வந்து விட்டதால் இதன் ஆபத்தை மருத்துவ உலகம் ஏறத்தாழ களைந்து விட்டது என்றே கூறலாம்.

***இளம்பிள்ளை வாதம்*** - மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளை இது பாதிக்கும். இதனால் குழந்தைகள் முடமாகும் வாய்ப்புகள் ஏற்படலாம்.

முதல் 3 நாட்களுக்குக் காய்ச்சலும்,



பிறகு காய்ச்சல் குறைந்து தலை வலிக்கவும் தொடங்கும். கழுத்தைத் திருப்புவதில் சிரமமும், தசைகளில் வலியும் இருக்கும். நோய் கவனிக்கப்படாமல் தீவிரமடைந்தால் 7 நாட்களில் கால் அல்லது தோள்



செயலிழக்கலாம். இதற்கெல்லாம் தற்போது தடுப்பூசி மருந்துகள் வந்துவிட்டன. ஆகவே குறித்த காலத்தில் தடுப்பு ஊசிகளைப் போடுவதன் மூலம் இந்த நோயை அறவே தவிர்க்கலாம்.

***டெட்டனஸ்*** - பிறந்த குழந்தைகளை இந்த நோய் தாக்கினால் உயிரிழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. தொப்புள் கொடியை சுத்தம் செய்யப்படாத கத்தியால் அறுப்பதன் மூலம் இந்த நோய் ஏற்படுகிறது. திறந்த புண்கள் மூலமாக இப்புண்கள் பெரியவர்களையும் பாதிப்பதால், கருவுற்ற பெண்கள் இதற்காகத் தடுப்பூசி போட்டுக் கொள்வது அவசியமாகிறது.

பிறந்து 5 முதல் 7 நாட்கள் கழித்து குழந்தை வாயைத் திறக்காது. பால் குடிப்பதை நிறுத்தி விடும். வலிப்பு ஏற்படும்; இதனால் இறப்பு ஏற்படலாம்.

***காசநோய்*** - இந்த நோய் முன்பிருந்த அளவிற்கு உயிரிழப்பை ஏற்படுத்தும் நோயாக தற்போது இல்லாவிட்டாலும், சுகாதாரக் குறைவால் இன்னமும் சில பகுதி மக்களிடையே இது அச்சுறுத்தும் ஒரு நோயாக இருந்து வருவது உண்மைதான். இந்த நோய் குழந்தைகளைத் தாக்கும் போது குழந்தைகள் மிகவும் சோர்வாக இருப்பார்கள், விளையாட்டில் நாட்டம் இருக்காது, உடல் எடை குறையும், காய்ச்சல் தலைவலி, நாற்றமுடன் கூடிய சளி வரும் இருமல் போன்றவைகள் இதன் அறிகுறிகள். இருப்பினும் முறையான சோதனைகளையும் தடுப்பு முறைகளையும் கையாண்டால் குழந்தைகளைக் காப்பாற்ற முடியும்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

### முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

28

பெயர் : ..........................

முகவரி : ..........................

..........................

..........................

தே.அ. அட்டை இல : ..........................

கையொப்பம் : ..........................

BB

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திக்தி:
04.07.2006

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -28**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

பரிசுப் போட்டி இல - 26
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

சுமையா ரெஸ்மி,
ஸரீனா விலா, நீர்த்தாங்கி வீதி, திக்குவல்லை.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# லேடிஸ் ஸ்பெஷல்



## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* -ஷோபா-

### முள்ளங்கிக் கீரை பக்கோடா

***தேவையான பொருட்கள் :-***

| | |
|---|---|
| முள்ளங்கிக் கீரை | - 4 முள்ளங்கியினுடையது. |
| வெங்காயம் | - 3 |
| பச்சை மிளகாய் | - 4 |
| சோயா மா | - அரை கப் |
| மைதா | - ஒரு மேசைக் கரண்டி |
| சோடா | - கால் தேக்கரண்டி |
| எண்ணெய் | - பொரிக்கத் தேவையான அளவு. |

***செய்முறை :-***

அலசிய முள்ளங்கிக் கீரையை உப்பு நீரில் முக்கி எடுத்து பொடிப் பொடியாக நறுக்கிக் கொள்ளுங்கள். வெங்காயம், பச்சை மிள காயைப் பொடியாக அரிந்து கொள்ளுங்கள்.


அரிசி மா, சோயா மா, மைதா, சோடா, உப்பு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து நறுக்கியக் கீரை, அரிந்து வைத்திருக்கும் வெங்காயம், பச்சை மிளகாயைப் போட்டு நன்றாகப் பிசையுங்கள்.

வாணலியில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் பிசைந்த பக்கோடா மாவை எண்ணெயில் பிசிறிவிடுங்கள். பக்கோடா மொறுமொறு என்று வந்ததும் எண்ணெயிலிருந்து எடுத்து சூடாகப் பரிமாறலாம்.

## சுத்தமான தேனில் மருத்துவம்

**சுத்தமான** தேன் ஒரு சிறந்த உணவாகும். எளிதில் செரிக்கக் கூடியது. அதிக சத்து நிறைந்தது. ஐந்து கிலோ பாலுக்கு ஒரு கிலோ தேன் சமமாகும்.

பித்த நீர்ச் சுரப்பு இல்லாதவர்கள் தொடர்ந்து தேன்



அருந்தி வந்தால், பித்த நீர் சுரந்து தொண்டை, இருதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் சுலபமாக நீங்கி விடுகின்றன.

குழந்தைகளுக்கு உண்டாகும் பல்நோய், இருதய நோய் ஆகியவற்றுக்குத் தேன் ஒரு சிறந்த சஞ்சீவியாகும்.

தேன் மூலம் சுவாசக் கோளாறு, வயிற்றுக் கடுப்பு, கிருமி நோய், தாகம், வாந்தி பேதி, தீப்புண், விக்கல், மலச்சிக்கல் ஆகிய நோய்கள் குணமாகும். பசியை அது வளர்க்கும். ஜீரணத்துக்கும் உதவும்.

தேன் கொழுப்பைக் கரைக்கக் கூடியது. ஆகவே உடல் மிகவும் பருமனாக உள்ளவர்கள் தொடர்ந்து தேன் சாப்பிட்டு வந்தால் பருமனும் எடையும் குறையும்.

இரத்தப் பித்தத்துக்கு அதாவது வாய், மூக்கு முதலியவற்றிலிருந்து இரத்தம் வடியும் வியாதிக்கு, ஆட்டின் பாலில் தேனைக் கலந்து குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

நமது உடலின் மேல் ஏற்படும் புண் காயங்களுக்கு மாத்திரமின்றி, உள்ளே ஏற்படும் இரைப்பைப் புண் போன்றவற்றையும் தேன் சாப்பிட்டு குணமாக்கலாம்.

வயதான சிலருக்கு அவ்வப்பொழுது தசைகளில் வலி ஏற்படுவதுண்டு. கால்களில் குற்றமடைதல் அல்லது குரல் தொனியே இல்லாது தொண்டையை அடைத்து விடுதல் போன்ற கப நோய்கள் கண்டபோது, ஒரு நாளைக்கு நாலைந்து முறை தேனை துளசிச் சாறு, வெற்றிலை கலந்து கொடுத்து வந்தால் நல்ல குணம் ஏற்படும்.




**படுக்கையில்** மிக வசதியாகப் படுத்துக் கொண்டேன். எவ்விதமான தலைவலியையும் தேடிக்கொள்ள நான் விரும்பவில்லை. திரும்ப இருட்டுப் பொந்துக்குப் போக நேரிட்டுவிடும்! அதைநினைக்கக்கூட எனக்குப் பிடிக்கவில்லை. அதுவும், என்றையும்விட இன்றைக்குப் பிடிக்கவில்லை.

அன்று மாலை புதிய



சட்டாம்பிள்ளை எனக்கு மூன்று சிகரெட்டுக்கள் அனுப்பிவைத்தான். ஒரு துண்டுக் காகிதத்தில், "பட்டு, நீ என்னைப் பற்றிய நல்ல எண்ணங்களுடன் புறப்பட்டுச் செல்லுகிறாய் என்று எனக்குத் தெரியும். நான் சட்டாம்பிள்ளைதான். ஆனால் கைதிகளை எவ்வளவு குறைவாக அடிக்கமுடியுமோ அவ்வளவு குறைவாகத்தான் அடிக்கிறேன். நான் இந்த வேலையை ஒப்புக் கொண்டதுக்குக் காரணம், எனக்கு ஒன்பது குழந்தைகள் இருக்கின்றன: "மன்னாப்பு" வருகிறவரையில் நான் காத்துக் கொண்டிருப்பதற்கில்லை. அளவுக்கு மீறி தவறுகள் இழைக்காமலே பணம் சம்பாதிக்க முயலப்போகிறேன். குட்பை. உனக்கு நலம் உண்டாகுக. கைதிகள் குழு நாளை மறுநாள் புறப்படுகிறது."

மறுநாள், தண்டனைச் சிறையின் தாழ்வாரத்தில் எங்களை முப்பது முப்பது பேர் கொண்ட கும்பல்களாக நிறுத்தி வைத்தார்கள். வெப்ப நாட்டின் நோய்களிலிருந்து எங்களைக் காக்கும்பொருட்டு மருத்துவ ஊழியர்கள் எங்களுக்கு ஊசி போட்டார்கள். ஒவ்வொருவருக்கும் மூன்று ஊசி - மூன்றரைப் பைன்ட் பால். தேகா எனக்கு மிக அருகில் இருந்தான். ஏதோ சிந்தனைவயப்பட்டவனாகத் தோன்றினான் அவன். சத்தம் போடக்கூடாதென்ற விதிமுறைகளை நாங்கள் லட்சியம் செய்யவில்லை. ஏனென்றால் ஊசிகள் போட்டானபிறகு பழையபடி எங்களைத் தண்டனைச் சிறையில் அடைக்க மாட்டார்கள் என்று எங்களுக்குத் தெரியும். சிறைக்காவலர்களின் கண்ணெதிரிலேயே நாங்கள் தாழ்ந்த குரலில் வம்பளந்தோம். டவுனிலிருந்து வந்திருந்த மருத்துவ ஊழியர்களின் எதிரில் எங்களை மிரட்டத்துணிச்சலில்லை அந்தக் காவலாட்களுக்கு.

"நம் எல்லோரையும் ஒரே தடவையில் கொண்டு போகுமளவுக்கு இவர்களிடம் வலைபோட்ட வண்டி இருக்கிறதா?" என்று தேகா என்னைக் கேட்டான்.

"இருக்குமென்று தோன்றவில்லை."

"செயின்மார்ட்டின் ரொம்பத்தூரம் இருக்கிறது. ஒரு நாளைக்கு அறுபது பேரை இட்டுச்சென்றால் கூடப் பத்து நாள் பிடிக்கும். ஏறத்தாழ அறுநூறு பேர் இருக்கிறோமே இங்கே மட்டும்?"

" பெரிய விஷயம் என்னவென்றால், ஊசி போட்டாகி விட்டது. அதனாலே பட்டியலில் நம் பெயர் இருக்கிறது என்று அர்த்தம். சீக்கீரம் நாம் கயானாவில் இருப்போம். உற்சாகமாய் இரு, தேகா. அடுத்த கட்டம் ஆரம்பமாகிறது. நான் உன்னை நம்பிக் கொண்டிருக்கிறேன். நீ என்னை நம்பிக் கொண்டிரு."

கண்கள் சந்தோசத்தில் பளபளக்க, என்னைப் பார்த்தான் தேகா. என் கைகளைத் தொட்டுப் பார்த்தான் தேகா. என் கைகளைத் தொட்டு, மீண்டும் சொன்னான்: "வாழ்வானாலும் சரி: சாவானாலும் சரி."

கைதிகளின் குழுவைப் பற்றிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? வலை

எழுதியது: ஹென்ரி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

வண்டியில் ஒவ்வொரு கைதியும் ஒவ்வொரு பொந்தில் அடைக்கப்பட்டார்கள். மூச்சுத்திணறியது.கதவைத்திறந்து வைத்தால் கொஞ்சம் காற்று வரும். அதைக்கூடச் செய்யமுடியாதென்று வார்டர்கள் கூறிவிட்டார்கள்.

அடுத்த ஊரை நாங்கள் அடைந்தபோது, எங்கள் வண்டியில் இருந்தவர்கள் இரண்டு பேர் இறந்து கிடந்தார்கள் மூச்சுத் திணறி.

நாங்கள் செல்லவேண்டிய இடம் ஒரு தீவு. படகில் அங்கே செல்வதற்காகக் கடற் கரையில் பலர் நின்று கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில்தான், வண்டியில் இரண்டு அப்பாவிக் கைதிகள் இறந்திருப்பதைக் கண்டார்கள். கண்டதும் மனம் வருந்திக் கண்ணீர் சிந்தினார்கள் என்று நினைத்துவிடாதீர்கள். எங்கள் மேலதிகாரிகளிடம் ஒப்படைத்தாக வேண்டுமாதலால், சவங்களையும் எங்களுடன் சேர்த்துப் படகில் ஏற்றினார்கள்.

பயணம் நீண்டதல்ல, என்றாலும் கடல்காற்றை மகிழ்ச்சியுடன் அனுபவித்தோம் நாங்கள்.

அங்கே போனதும் பத்துப் பத்துப்பேராக ஒவ்வோர் கொட்டடியில் அடைந்து கொண்டு அடுத்த கட்டத்துக்காகக் காத்துக்கொண்டிருந்தோம். பேசவும், புகை பிடிக்கவும் எங்களை அனுமதித்தார்கள். ஒன்றாகவே சாப்பாடும் போட்டார்கள்.

அங்கேயிருந்த நாட்களில் ஒரேயோர் அபாயம். நான் வைத்துக்கொண்டிருந்த அலுமினியக் குழாய்தான். முகாந்திரமில்லாமல் திடீரென்று கூப்பிடுவார்கள். உடைகளைக் களைவார்கள். காலோடு தலை வரை வெகு கவனமாய்ச் சோதனை போடுவார்கள். முதலில் உடம்பு முழுவதையும் - உள்ளங்கால் உட்பட - பரிசோதிப்பார்கள், "உடைகளை மாட்டிக்கொள்ளுங்கள்!" - வந்த இடத்துக்குத் திரும்பவேண்டும்.

கொட்டடிகள்: சாப்பாட்டுக்கூடம்: முற்றம் - மணிக்கணக்காக இங்கேதான் ஒருவர் பின் ஒருவராக மார்ச்: செய்து கொண்டேயிருந்தோம். லெ.ஃ.ப்ட் ரைட்!லெ.ஃ.ப்ட் ரைட்!லெ.ஃ.ப்ட் ரைட்!: இதேதானட ஒவ்வொரு அணியிலும் ஐந்தாறு கைதிகள். நீளமான, வெகுநீளமான முதலைபோல் இருந்தது. வெவ்வேறு ஊர்களைச்சேர்ந்தவர்கள் இருந்தனர். என் ஊரைச் சேர்ந்தவன் கூட ஒருவன் இருந்தான் - தன் மனைவியைச் சுட்டுக் கொன்ற வேட்டைக்காரன். அங்கிருந்த ஆயிரத்துத்தொள்ளாயிரம் பேரில் நானும், அவனும்தான் எங்கள் ஊரிலிருந்து வந்தவர்கள். (இதிலிருந்தே எங்கள் ஊர்க்காரர்கள் நல்ல மனிதர்கள் என்று கண்டு கொள்ளலாம்!)

எங்களைக் "கவனிப்பதற்காக" அங்கே வைத்திருப்பதாகச் சொன்னார்கள். உண்மைதான். எவ்வளவு வகையில் கவனிக்கமுடியுமோ அவ்வளவு வகையாகக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் பிற்பகல் நான் வெயிலில் உட்கார்ந்திருந்த போது ஓர் ஆள் வந்தான். குள்ளமான, மூக்குக் கண்ணாடி அணிந்த நபர். நாங்கள் எல்லோருமே ஒரே மாதிரியான உடை அணிபவர்களாகையால் அவன் யார் என்று தீர்மானிப்பது கஷ்டமாகவிருந்தது.

"பட்டாம்பூச்சி என்று சொல்கிறார்களே, அது நீதானோ?" என்றான்.

"ஆமாம் என்ன வேணும்?"

"லட்ரீனுக்கு வா," என்று சொல்லிவிட்டு அவன் போய்விட்டான்.

"அவன் பெரிய ஆள்," என்றான் தேகா. "மலைப்பக்கத்தில் கொள்ளையடித்தவன். உன்னிடம் அவனுக்கு என்ன வேலை இருக்கும்?"

"தெரிந்து கொண்டு வருகிறேன்," என்று சொல்லி விட்டு, முற்றத்து நடுவிலிருந்த லட்ரீனை அடைந்தேன். சீறுநீர் கழிப்பதுபோல் பாசாங்கு செய்தேன். அந்த ஆளும் என் பக்கத்தில் நின்று கொண்டான். " ஏதாவது உதவி தேவைப்பட்டால் உன்னிடம் கேட்கும்படி என் மச்சான் சொன்னான்," என்று என் பக்கம் தலையைத்திருப்பாமல் பேசினான். தன் மச்சானின் பெயரையும் சொன்னான்.

"அவன் என் நண்பன்தான். என்ன வேண்டும் உனக்கு?" என்று கேட்டேன்.

" எனக்கு சீதபேதி. அலுமினியக் குழாயை வைத்துக் கொள்ளமுடியவில்லை. யாரை நம்புவதென்றும் தெரியவில்லை. யாராவது திருடிவிடுவார்களோ அல்லது காவலாட்கள் கண்டுபிடித்து விடுவார்களோ என்று பயமாயிருக்கிறது. தயவு பண்ணி பட்டாம்பூச்சி, தயவு பண்ணி எனக்காக அதைக் கொஞ்ச நாள் வைத்திருக்கிறாயா?" எனறான் அவன்.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*

'**வந்துட்டாங்கய்யா** மனித உரிமை பேச...!" எனக் கேலி பேசுகிறவர்களுக்குத் தெரியுமா, மனித உரிமை என்கிற சொல்லின் வரலாற்றுக்குப் பின்னால் 15 கோடி உயிர்கள் விலை பேசப்பட்ட உண்மை?

நாடு பிடிக்கும் ராஜாக்களின் இரண்டாம் உலகப் போர் சூதாட்டத்தில் மனித உரிமைகளும், உயிர்களும்தான் பந்தயப் பொருட்கள். அதைக் கண்டித்து, மனிதர்களின் வாழ்வுரிமையை

# மனித உரிமைகளில் விழிப்புணர்வு அவசியம்!



நிலைநாட்ட ஐ.நா.சபை, 1948ஆம் ஆண்டு டிசம்பர் பத்தாம் திகதி மனித உரிமைப் பிரகடனத்தை வெளியிட்டது. மனிதனின் நாகரீக வாழ்வுக்கும், சுதந்திர உணர்வுக்கும் உறுதி தருகிற பிரகடனம் அது.

விலங்குகளைக்கூட மனித நேயத்தோடு நடத்த வேண்டும் என்கிற நவயுகத்தில், மனிதர்களை மனிதர்களாக நடத்துங்கள் என்று கேட்டுக்கொண்டால் கேலியாகப் பார்ப்பவர்களை என்னவென்று சொல்வது! புழுவைவிடக் கேவலமாக நடத்தப்பட்டவர்களுக்குதான், நசுக்கப்பட்டவர்களுக்குதான் மனித உரிமைக் குரல்களின் அர்த்தம் புரியும்!

சந்தேகத்தின் பேரில் உங்கள் வீட்டக்குள் நுழைந்த பொலிஸ், தெருவே வேடிக்கை பார்க்க உங்கள் கன்னத்தில் அறைந்து, பூட்ஸ் கால்களால் எட்டி உதைத்து ஜீப்பில் ஏற்றிய தருணங்களை நீங்கள் கடந்து வந்திருக்கிறீர்களா?

வீரப்பன் என்கிற குற்றவாளியைப் பிடிப்பதற்காகப் போன அதிரடிப்படையின் அத்துமீறல்களால் பிறப்பு உறுப்பில் மின்சாரம் பாய்ச்சப்படும் மரண வலியை அனுபவிக்க வேண்டாம்... அந்த வலி தாளாது கதறும் குரல் வளையாவது கேட்டிருக் கிறீர்களா?



இந்தச் சாதியில் பிறந்த உனக்கு இவ்ளோ திமிராடா? என்ற சக மனிதன் வாயில் சிறுநீர், மலம் ஊட்டிய நாகரீக மனிதர்களைச் சந்தித்தது உண்டா?

பொலிஸாரின் லத்திகளுக்கு மட்டும் விந்து பாய்ச்சுகிற சக்தி இருக்குமானால், இந்நேரம் நான் 13 குழந்தைகளுக்குத் தாயாகி இருப்பேன் என்று அஜிதா என்கிற பெண் நீதிமன்றத்தில் தந்த வாக்கு மூலத்தில் வெறும் வார்த்தைகளே பதிவாகி இருக்கின்றன. வலிகளைப் பதிவு செய்யும் ஆற்றல் வார்த்தைகளுக்கு இல்லை.

எல்லா மனிதர்களுக்கும் சுய மரியாதையுடனான அவர்களின் வாழ்வுரிமைகளை வலியுறுத்துவதும், அந்த உரிமைகள் கேள்விக்குள்ளாக்கப்படும்போது குரல் எழுப்புவதும், மக்களிடம் மனித உரிமைகள் பற்றிய விழிப்பு உணர்வைக் கொண்டு செல்வதும்தான் மனித உரிமை அமைப்புகள் செய்கிற வேலை.

கற்பழிப்புக் குற்றம்சாட்டப்பட்ட கார்பரல் சோமரத்னே என்கிற சிங்கள இராணுவ சிப்பாய், இராணுவ நீதிமன்றத்தில் தந்த வாக்குமூலம் மனித உரிமை ஆர்வலர்களை உலுக்கிப்போட்டது. கற்பழிப்பது குற்றம் என்றால், அதற்காக என்னை நீதிமன்றம் தண்டிக்கும் என்றால், ஒட்டுமொத்த சிங்கள இராணுவத்தையும் தண்டிக்க வேண்டும். காரணம், நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்களைக் கற்பழித்துக் கொன்று, ஒரே குழியில் போட்டுப் புதைத்திருக்கிறோம். அதற்கு நானே சாட்சி! என்று தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் முயற்சியில் அவர் தந்த வாக்குமூலம், ஒட்டுமொத்த சிங்கள இராணுவத்திற்கும் அவமானமாக அமைந்தது.

இது ஏதோ இலங்கையில் நடக்கிற அத்துமீறல் என்று அலட்சியமாக இருக்க முடியாது. தங்கள் மானத்தை அனுதினமும் கேள்விக்குள்ளாக்கும் இந்திய இராணுவத்தை எதிர்த்து அஸ்ஸாம் பெண்கள் நிர்வாணப் போராட்டம் நடத்தியதைப் பார்த்து நம் நாடே தலை குனிந்ததே! மானத்தைக் காப்பாற்ற உரிமை கேட்டு நிர்வாணமாகிற சோகத்தைப் புரிந்துகொண்டால், மனித உரிமையின் அவசியமும் அவசரமும் புரியும்.

பொலிஸும், இராணுவமும் சமூக விரோத சக்திகள் மூலமும் நிகழ்த்தப்படும் மனித உரிமை மீறல்களைத்தான் தினம் தினம் நாம் செய்திகளில் பார்க்கிறோம். அன்றாடம் நம் வாழ்வில் மீறப்படும் உரிமைகள் பற்றிய கவனமோ, அக்கறையோ பாதிக்கப்பட்டவர்களுக்கே இல்லை. அதனால் வெளிச்சத்துக்கு வராமல் போகும் சம்பவங்கள் உங்கள் வீட்டுக்கு அருகிலேயே நடந்து கொண்டு இருக்கின்றன.

மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் மருத்துமனையில், ஏழை என்பதாலேயே புறக்கணிக்கப்படுதலும், ரேஷன் கடைகளில் எப்படி ரேஷன் அரிசி அதுக்குள்ள தீர்ந்து போகும்? என்று கேட்டால், போய் கோர்ட்ல கேஸ் போடு என்று அலட்சியமாக வரும் அதிகாரத்தின் குரலும், லஞ்சம் தராவிட்டால் உனக்கு எந்த வேலையும் செய்ய முடியாது என்று அவமானப்படுத்தும் அரசு இயந்திரமும், கறுப்பாக இருக்கிறாய்; அது எவ்வளவு அசிங்கம் தெரியுமா? எங்கள் அழகு கிரீமைப் பயன்படுத்தி வெள்ளையாக மாறிவிடு என்று சொல்லி ஒட்டுமொத்த மக்களின் நிறத்தையே கேவலப்படுத்துகிற விளம்பரமும் கூட மனித உரிமை மீறல்கள்தான். சாதி வேற்றுமை பார்க்கிற யாருமே மனித உரிமைகளை மீறுகிறவர்கள்தான். மதப் பிரிவினை செய்கிற யாருமே மனித உரிமைக்கு விரோதமானவர்கள்தான். பெண் என்பதால் மனைவியை, மகளை அடிமைகளாக நடத்துகிறவர்கள் எல்லோரும் மனித உரிமையை மீறுகிற குற்றத்தையே செய்கிறார்கள்.

சட்டங்களின் மூலம் மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்க வேண்டிய அரசுகள் அதைச் செய்யத் தவறுகின்றன. பயங்கரவாதத்தை




ஒழிப்பதற்காகத் தடா சட்டம் கொண்டுவருவதாகச் சொன்னது அரசு. நான்கு மாநிலங்களில் மட்டமே பயன்படுத்தப்படும் என்ற வாக்குறுதியோடு நிறைவேற்றப்பட்ட தடா சட்டம் 23 மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாடு முழுவதும் 67,509 பேர் தடாவின் கீழ் கைது செய்யப்பட்டதாகச் சொல்கிறது புள்ளிவிவரம். ஆனால், அவர்களில் குற்றம் நிரூபிக்கப்பட்டவர்கள் ஐந்நூறுக்கும் குறைவானவர்களே! 60 நாட்கள் பொலிஸ் காவலில் இருந்து சித்திரவதை அனுபவித்த மற்ற அப்பாவிகளுக்கு எந்தத் தீர்வும் இல்லை. கடுமையான சட்டங்கள் மூலம் திறமையான குற்றவாளிகள் உருவானதுதான் மிச்சம்.

தஞ்சாவூரில் ஒரு பெண், சாராய கும்பலால் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். பெண்கள் அமைப்பு இந்தப் பிரச்சினையைக் கையில் எடுத்தது. அச்சுறுத்தல் இருப்பதாக சாராய வியாபாரிகளுக்குப் பொலிஸ் பாதுகாப்பு கிடைத்தது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"







**அழுக்கு** நிறைந்த கிழிந்த ஆடைகள், சோத்து முட்டை இவைகளையெல்லாம் வைத்திருக்கும் ஒருவனை, ஒரு ஊர் சுற்றுபவனைத் தன் மகள் விருந்தாளியாக அழைத்து வந்துவிட்டாள் என தந்தை அதிர்ச்சியடைகிறார். மகளைக் காப்பாற்றியவன் இவன்தான் என்ற நன்றியோடு அவனை வயலில் வேலை செய்யச் சொல்கிறார். வேலை செய்து பழக்கமில்லாதவன், அந்த ஊர் சுற்றுபவன். அதை மையமாக வைத்து சாப்ளின் சின்ன, சின்ன நகைச்சுவைக் காட்சிகளை அபாரமாக அமைத்தார். மாவு மூட்டையை தூக்கிச் செல்கிறான் என்றால் அது நிச்சயமாக மற்ற வேலைக்காரர்கள் தலை மேல் விழும். கோழி முட்டை நல்லதா என்று சோதித்துப் பார்க்கக் கதவில் தட்ட அது உடையும். அதன் நாற்றத்தைப் பொறுக்க முடியாமல், வழியில் ஒருவன் ஆனந்தமாகப் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருக்க, அதில் அந்த உடைந்த முட்டையைப் போட்டு



விடுகிறார். அவர் கையில் ஒரு மலரும் இருக்கிறது. அதை முகர்ந்து கொண்டே படித்துக் கொண்டிருக்கிறார். திடீரென்று நாற்றம் அவரைத் தாக்குகிறது. மணமுள்ள மலர் திடீரென்று நாற்றம் அடிப்பானேன் என்று அவர் திகைக்கிறார். அது அறிஞரின் அறிவுக்கு எட்டாத புதிர்!...

சாப்ளினைப் பால் கறக்கச் சொல்கிறார்கள். மாட்டைப் பார்த்தாலே பயம். எப்படிக் கறப்பது என்றும் தெரியாது. வாலைப் பிடித்துத் தண்ணீர் பம்பைப் போல் மேலும் கீழும் ஆட்டுகிறார். பால் வராதபொழுது அந்த மாடு மோசமானதென்று முடிவெடுத்து விடுகிறார்! இப்படிப் பல காட்சிகள்...

அந்தப் பெண்ணைக் காதலிக்கிறார். அது அவளுக்குத் தெரியாது. அவள் வீட்டைக் கொள்ளை அடிக்க வந்த ஒரு திருட்டுக் கும்பலைச் சிக்க வைக்கிறார். அவள் தன்னை இந்த உதவிக்குப் பிறகு நிச்சயமாகக் காதலிப்பாள் என்று எண்ணிய நேரத்தில் அவள் ஒரு அழகான வாலிபனை அறிமுகம் செய்கிறாள். அவன்தான் அவளை மணக்கப் போகும் காதலன். சாப்ளினுக்கு அதிர்ச்சி. நன்றியைக் காதல் என்று தவறாக எண்ணிவிட்டேன் என்ற வகையில் ஒரு கடிதத்தை எழுதி விட்டுச் சென்று விடுகிறார். அதைப் பார்த்த அவளுக்கும், குடும்பத்தினருக்கும் வருத்தம். சாப்ளின் தன் சோத்து மூட்டையுடன் மனித சஞ்சாரமற்ற பாதையில் நடக்கத் தொடங்குகிறார், அடுத்த வேளை சாப்பாட்டை நோக்கி.

சாப்ளின் படங்களில் பெரும்பாலாக இந்தத் தனிமையாக, எங்கு செல்கிறோம் என்று தெரியாத நிலையில் நடந்து செல்லும் காட்சி அடிக்கடி வரும். இது மிகவும் பிரபலமாகிப் பல நாடுகளில், பலரால், பல படங்களில் புகுத்தப்பட்டது. ஏழைக்கு ஊருமில்லை, நாடுமில்லை. உறவினர்களும் இல்லை, நண்பர்களும் இல்லை. அவனுக்குச் சொந்தமானது உயரத்தில் இருக்கும் வானம், அதைத் தொட்டு முத்தமிட்டுக் கொண்டிருப்பது போல் காணப்படும் வெகு தூரத்திலுள்ள பூமி - இவை இரண்டும்தான் அவனுக்குச் சொந்தம். இந்த ஆழமான தத்துவத்தைத் தன் படங்களில் ஒரே ஷாட்டில் காட்டினார், வார்த்தைகள் எதுவுமே இல்லாமல். அதுதான் அவருடைய வெற்றிக்கு முக்கிய காரணம். மனித வாழ்க்கையில் சிரிப்பும் அழுகையும் தொடர்ந்து வரும். சிரிப்பிற்கும் அழுகைக்கும் நடுவே இருப்பது மிகவும் மெல்லிய ஒரு கோடு. இதை ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்பே தன்னுடைய திரைப்படங்கள் மூலம் உலகத்திற்கு எடுத்துக் காட்டியவர், இந்த மாமேதை, அறிவுஜீவி என்றெல்லாம் புகழப்படும் சார்லி சாப்ளின்.

'தி டிராம்ப்' பெரும் வெற்றியைப் பெற்றது மட்டுமல்லாமல், அவரை ஒரு சிந்தனைச் சிற்பியாகவும் உருவாக்கியது. உலக அளவில் திரைப்படங்களில் பல நகைச்சுவை நடிகர்கள் மக்களைச் சிரிக்க வைத்திருக்கிறார்கள்; அதில் மாபெரும் வெற்றியையும் அடைந்திருக்கிறார்கள். ஆனால் சிரிப்பு மட்டுமல்லாமல் சிந்திக்கவும் வைத்தவர் சார்லி சாப்ளின் மட்டுமே.

(கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனை இந்தியாவின் சார்லி சாப்ளின் என்று அழைப்பது உண்டு. அதற்குத் தேவையான தகுதிகளும் அவருக்கு உண்டு. இந்தியத் திரைப்பட உலகிலேயே தன் சிரிப்பால் சிந்திக்க வைத்த திரைப்பட நடிகர் இவர் ஒருவர்தான். இது யாராலும் மறுக்க முடியாத - மறைக்க முடியாத உண்மை. ஆனால் ஒருமுறை அவர் நண்பர்களுடன் பேசும்பொழுது, "தன்னை சார்லி சாப்ளினுக்கு ஒப்பிடுவது அந்த மாமேதையை அவமானப்படுத்துவது போல ஆகும்" என்றார். கலைவாணரின் படங்களில் சாப்ளினின் நிழல், அவருடைய சாயல், அவருடைய நகைச்சுவையின் தாக்கம் பெருமளவிலேயே இருந்தன. "நான் சாப்ளினின் மாணவன் மட்டும்தான். நான் அவருக்கு ஏகலைவன் போல" என்றார் கலைவாணர்.)

எஸ்.என்.ஏ.நிறுவனத்திற்கு சாப்ளின் தொடர்ந்து பல படங்களை நடித்து இயக்கிக் கொடுத்தார். அவையாவன:

'வொர்க்', 'தி பேங்க்', 'ஏ நைட் அட் தி ஷோ', 'கார்மென்', 'பொலிஸ்' முதல் உலகப் போர் (1914 - 1918) நடந்து கொண்டிருந்த நேரத்தில் சாப்ளினின் புகழ் புதிய சிகரங்களைத் தொட்டுக் கொண்டிருந்தது. பெரும்பாலான மேல் நாடுகளில் போர் நடந்தால் எல்லா ஆண்களுமே யுத்தத்தில் பணிபுரிய வேண்டும். சாப்ளின் அந்த வகையில் யுத்தத்தில் பணிபுரியாமல் பணமும், புகழும் வாரி சேர்த்துக்கொண்டிருக்கிறாரே என்று பலர் அவரைத் தூற்றினார்கள். அவருக்குப் பல்லாயிரக்கணக்கான கடிதங்களையும் எழுதினார்கள். அந்த எதிர்ப்புக்களையெல்லாம் சமாளிக்க அவர் யுத்தத்தில் சேர முயன்றார். ஆனால் அவரை ஒரு யுத்த வீரனுக்கு அமெரிக்க சட்டப்படி தேவையான உயரமும் உடல் எடையும் இல்லை என்று நிராகரித்து விட்டார்கள்.

**(தொடரும்)**



# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

**16**



## கொடூர ராணி ஓல்கா

**கி.பி. 9ஆம்** நூற்றாண்டு காலப் பகுதியில் ரஷ்ய தேசமானது சகல வளங்களும் மிக்க ஓர் பலமிக்க தேசமாக விளங்கியது. மன்னராட்சி நிலவிய அக்கால கட்டத்தில் பல அரசர்கள் தொடர்ச்சியாகவும் சிறப்பாகவும் ரஷ்யாவினை ஆட்சி செய்து வந்தனர்.

இந்த வகையில் 912ஆம் ஆண்டில் ரஷ்யாவினை ஆட்சி செய்து வந்த ஒலெக் மன்னர் மரணமடைந்ததை அடுத்து இகோர் மன்னர் ஆட்சிபீடமேறினார். முன்னர் ரஷ்யாவினை ஆட்சி செய்த அரசர்களுக்கு எந்த வகையிலும் குறைவில்லாத ஓர் சிறப்பான ஆட்சியினை அவர் நடாத்தி வந்தார்.

இகோர் மன்னர் கம்பீரமான ஆட்சியினை நடாத்தியது மட்டுமல்லாது தோற்றத்திலும் கம்பீரமாகவே காணப்பட்டார். சிறந்த ஆளுமையினையும் வாட்ட சாட்டமான உருவத்தினையும் கொண்ட அவரது ஆட்சியில் எந்த ஒரு குறையுமே ரஷ்ய மக்களுக்கு இருக்கவில்லை. இதன் காரணமாக மக்கள் அவர் மீது மிகவும் விசுவாசமும் மரியாதையும் வைத்திருந்தனர்.

இகோர் மன்னர் சிறப்பான ஆட்சி நடாத்தியது மட்டுமன்றி ரஷ்ய தேசத்தின் பாதுகாப்பிலும் கூடிய கவனம் செலுத்தினார். ஒரு தேசத்தின் பாதுகாப்பானது தற்பாதுகாப்பில் மட்டும் தங்கியிருக்கக்கூடாது. தாக்குதல் நடவடிக்கையிலும் முதன்மையாக இருக்க வேண்டும். அதாவது முதலில் தாக்குபவனுக்கு வெற்றி நிச்சயம் எனும் கொள்கையில் நம்பிக்கை வைத்த அரசர், கொன்ஸ்தாந்தி நோபிள் தேசத்தின் மீது இரு முறைகள் படையெடுத்து வெற்றியும் கண்டார்.

யுத்தத்தில் வெற்றி கண்டாலும் இகோர் மன்னர் மனிதாபிமானத்தின் மீதும் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். யுத்தத்தின் போது பிடிக்கப்படும் யுத்தக் கைதிகளை கௌரவமாக நடாத்தினார். பொதுமக்களுக்கு குறிப்பாக பெண்கள், குழந்தைகளுக்கு எவ்வித ஆபத்தும் சேதமும் ஏற்படக்கூடாது என்பதில் மிகக் கவனமாக செயற்பட்டார்.



அவ்வாறு இருந்த போதும் கூட ரஷ்ய தேசம் கொன்ஸ்தாந்தி நோபிள் தேசத்தின் மீது படையெடுத்த போது அதில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் ஸ்லாவிய இனத்தவர்களே ஆவர்.

கொன்ஸ்தாந்தி நோபிள் தேசத்தில் ரஷ்ய எல்லைப்புறமாக அதிகமாக வசித்து வந்தவர்கள் ஸ்லாவிய இனத்தவர்களே ஆவார்கள். ஒவ்வொரு படையெடுப்பின் போதும் முதலில் அவர்களுக்கே பாதிப்பு ஏற்படுவது வழமையானது. இதன் காரணமாக உயிரிழப்புக்களையும், தம்முடைய சொத்துக்களையும் அதிக அளவில் ஸ்லாவியர்கள் இழந்திருந்தனர். இதன் காரணமாக ஸ்லாவியர்கள் பல பிரதேசங்களுக்கும் பரவலாக இடம் பெயர்ந்திருந்தனர். அவர்களில் ஒரு பகுதியினர் ரஷ்ய தேசத்தில் கூட குடியேறி இருந்தனர்.

912ஆம் வருடத்தில் தனது 24ஆவது வயதிலே ஆட்சி பீடமேறிய இகோர் மன்னர், தனது திருமணம் குறித்து சிறிதும் சிந்திக்காத ஒருவராகவே காணப்பட்டார். ஏனெனில் அவரது சிந்தையும் செயலும் முற்றுமுழுதாக தனது தேசம் மீதான அக்கறையிலேயே இருந்தது. நிலைமை இவ்வாறு இருக்கையில் 942ஆம் வருடம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது இகோர் மன்னர் தனது 54ஆவது அகவையில் இருந்தார். தனது திருமணத்தைக் குறித்து சிந்திக்காத இகோர் மன்னரைக் குறித்து அவரில் அதிகம் பாசம் வைத்திருந்த நெருங்கியவர்களும், அரசவை உறுப்பினர்களும் அவரை திருமணம் செய்து கொள்ளுமாறு மிகவும் நெருக்குதலை கொடுத்தனர்.

தன்மீது அதிக அக்கறை செலுத்தும் தனது தேச மக்களினதும், தனக்கு நெருங்கியவர்களினதும் வேண்டுகோளுக்கிணங்க 942ஆம் வருடம் இகோர் மன்னர் அரசவை பிரதானி ஒருவரின் மகளாகிய ஓல்காவை மணம் முடித்தார். மிகவும் கௌரவமானதும் வசதியானதுமான குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஓல்கா, இகோரை திருமணம் முடித்ததன் மூலம் ரஷ்ய மகாராணியாக மாறினாள்.அது மட்டுமன்றி தனது கணவரின் முன்னேற்றத்தில் உறுதுணையாக இருந்ததுடன் அவரது நாளாந்த தேவைகளிலும் கவனமெடுத்து ஒரு பண்பான மனைவிக்குரிய அடையாளமாக விளங்கினாள்.

இகோர் - ஓல்கா திருமணத்தின் சாட்சியாக அவ்வருடமே அவர்கள் ஓர் ஆண்குழந்தைக்கு பெற்றோர் ஆனார்கள். அக்குழந்தை பிறந்ததை ரஷ்ய தேசமே மகிழ்வுடன் கொண்டாடியது. 'ஸ்வியற்றோஸ்லாவ்' என அக்குழந்தைக்குப் பேர் சூட்டி இகோரும் ஓல்காவும் அகமகிழ்ந்தனர்.

ஆனால் காலம் வேறு விதமாக மாறிச் சென்றது. முன்னர் இகோர் மேற்கொண்ட படையெடுப்பின் மூலம் சிதறி ஓடிய ஸ்லாவியர்கள் பலர், ரஷ்யாவிலும் குடியேறி அந்நாட்டு பிரஜைகளாகவும் மாறி இருந்தனர். அவர்களில் சிலரின் வாரிசுகள் ரஷ்ய அரண்மனையில் கூட பணியாற்றினார்கள். காலம் உருண்டோடிய போதும் கூட ரஷ்ய படையெடுப்பினையும் அதனால் தமது உறவுகள் கொல்லப்பட்டதையும், தாம் தமது வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டதையும் அவர்கள் மறந்து விடவில்லை. தக்க சமயம் வரும்போது அவை யாவற்றிற்கும் காரணமான இகோர் மன்னரை பழிவாங்க சந்தர்ப்பத்தினை அவர்களில் சிலர் எதிர்நோக்கியிருந்தனர்.

945ஆம் ஆண்டில் அந்த துக்ககரமான சம்பவம் நிகழ்ந்தது. இகோர் மன்னர் அருந்திய பழரசத்தில் கொடிய விஷம் கலக்கப்பட்டிருந்தது. அதனை அருந்திய அரசர் உடனடியாகவே சுருண்டு வீழ்ந்து துடிதுடித்து மரணமடைந்தார். அரண்மனையில் பணியாற்றிய ஸ்லாவிய வம்சாவளி பணிப்பெண் ஒருத்தியே இச்சதி நடவடிக்கைக்குக் காரணம் எனக் கண்டறியப்பட்டது. இதன் காரணமாக அவளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

மன்னர் இகோரின் மரணத்தின் பின்னர் அவரது மூன்றே வயதான மகன் 'ஸ்வியற்றோஸ்லாவ்' அரசராக முடிசூடப்பட்டான். எனினும் மகனின் பிரதிநிதியாக ஓல்காவே ஆட்சிபீடமேறினாள்.

அதன் பின்னர்தான் அந்த அக்கிரமங்கள் அரங்கேற ஆரம்பித்தன. அதுவரை காலமும் கௌரவமான மகாராணியாகவும், பண்புள்ள மனைவியாகவும், பாசமுள்ள தாயாகவும் விளங்கிய ஓல்கா ராணி இப்போது கொடூர ராணியாக, நாயாக, பேயாக மாறினாள். ஸ்லாவிய இனத்தைச் சேர்ந்தவர்கள் தேடித்தேடி வேட்டையாடப்பட்டனர். இந்நூற்றாண்டில் யூத இனத்தின் மீது ஹிட்லர் புரிந்த அட்டூழியங்களுக்கு சிறிதும் குறைவில்லாமல் அப்போது அநியாயங்கள் அரங்கேறின.

தனது கணவருக்கு கொடிய விஷத்தினை வழங்கியது ஓர் ஸ்லாவிய இளம் பணிப்பெண் என்றபடியால் அவ்வினத்தைச் சேர்ந்த இளம் பெண்கள் ஓல்காவின் நேரடி மேற்பார்வையில் வேட்டையாடப்பட்டனர். நகரங்கள் மற்றும் ஊர் ஊராக தேடுதல் நடாத்தப்பட்டு ஸ்லாவியப் பெண்கள் பிடிக்கப்பட்டனர். அவ்வாறு பிடிக்கப்பட்ட இளம் பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு, வீதிவீதியாக நடாத்திச் செல்லப்பட்டு ரஷ்ய ஆண்களினால் கும்பல் கும்பலாக கொடூரமாகப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். பல பெண்களுடைய மார்பகங்கள் அறுக்கப்பட்டு நாய்களுக்கு உணவாக்கப்பட்டன. ரஷ்ய படைகளினால் பிடிக்கப்படும் ஸ்லாவிய ஆண்கள் ஓல்காவின் முன்னிலையில் கொண்டு வரப்பட்டு அவர்களது ஆணுறுப்புக்கள் அறுக்கப்பட்டு பின் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். ஸ்லாவிய மக்கள் வசித்த பல பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு வீடுகளுடன் சேர்த்து அம்மக்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர்.

இவ்வாறு ருத்ர தாண்டவம் ஆடிய ஓல்கா ராணி இறுதியாக 957ஆம் ஆண்டில் ஓர் பெண் துறவியாக மாறி தனது மகனிடம் ரஷ்ய ஆட்சியினை ஒப்படைத்து விட்டு அரண்மனையினை விட்டு வெளியேறிச் சென்றதாக வரலாறு கூறுகின்றது. அதேவேளை பல கொலைகளை கொடூரமாகப் புரிந்த ஓல்கா ராணி மனம் பேதலித்த நிலையில் 968ஆம் வருடம் மரணமடைந்ததாக சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

**(இரகசியங்கள் தொடரும்...)**

# முட் பாதையில் மிதித்த மிதவாதம்

**இரு எழ்த்தாளர்கள் சேர்ந்து எழதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## 'கறுப்புப் பூனைகளின் பாதுகாப்புடன் வந்த ராஜீவ் காந்தி மீது தாக்குதல்'

**ஜனாதிபதி** ஜெயவர்த்தனாவையும் புலித் தலைவர் பிரபாகரனையும் இணக்கத்துக்குக் கொண்டு வருவது கஷ்டமான விவகாரம் என்பது பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தெரியும். இலங்கை இனப் பிரச்சினைக்கு இந்திய தலையீட்டுடன் மட்டும்தான் தீர்வு காண முடியுமென்று ராஜீவ் காந்தி உறுதியாக நம்பினார். எம்.ஜி.ஆர், பிரபாகரனுடன் பேசிய பின்னர், மீண்டும் எம்.ஜி.ஆரைச் சந்தித்து ராஜீவ் காந்தி பேசினார். பிரபாகரனையும் புலிகள் இயக்கத்தையும் எவ்வாறு கையாளுவது என்பது குறித்து இப் பேச்சுவார்த்தையில் கலந்துரையாடப்பட்டது. இதேவேளை, இந்தியப் பாராளுமன்றத்தில் அப்போது அங்கம் வகித்த எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரையும் ராஜீவ் காந்தி அழைத்துப் பேசி, உத்தேச ஒப்பந்தத்திற்கு ஒப்புதலைப் பெற்றார்.

## 166 தேனீர் கோப்பைக்குள் இரத்தம்!

ஜூலை மாதம் 28ஆம் திகதி ராஜீவ் காந்தி பிரபாகரனைச் சந்தித்து ஒன்றரை மணித்தியாலம் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்திய அதிகாரிகளும் பிரபாகரனின் ஆலோசகர்களும் இச் சந்திப்பின்போது கலந்து கொண்டனர். ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எதிர்ப்புகளைத் தெரிவித்த பிரபாகரன், சிங்களத் தலைமையைத் தான் நம்பத் தயாரில்லையென்றும் குறிப்பாக ஜெயவர்த்தனாவை நம்பமுடியாதென்றும் தெரிவித்தார். சம்பிரதாயபூர்வமாக உத்தேச ஒப்பந்தத்தைப் பிரபாகரன் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருக்குமாறு ராஜீவ் காந்தி கேட்டுக் கொண்டார். ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் பிரபாகரனை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதாகவும் ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கு அவர் உதவ வேண்டுமென்றும், புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென்றும் ராஜீவ் காந்தி தெரிவித்தார். புலிகளின் எதிர்காலப் பாதுகாப்புக்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென்றும் ராஜீவ் உறுதியளித்தார்.

வடக்குக் கிழக்கை இணைத்து உருவாக்கப்படும் இடைக்கால நிர்வாகத்தில் புலிகள் இயக்கத்துக்கு முக்கிய இடம் வழங்கப்படுமென்றும் உறுதியளிக்கப்பட்டது. தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பாதுகாக்கும் அதே நேரத்தில் இலங்கையின்



காலிமுகத்திடலில் நடைபெற்ற ராணுவ அணிவகுப்பு மரியாதையின் போது இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை கடற்படை வீரரால் தாக்கப்படும் காட்சி.

இறைமை, ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணுவதிலும் இந்தியா அக்கறை கொண்டிருந்தது. எனவே பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இருதரப்புகள் மீதும் அழுத்தத்தைப் பிரயோகிக்காமல் இரு தரப்பையும் இணக்கத்துக்குக் கொண்டு வருவது ராஜீவ் காந்தியின் நோக்கமாகவிருந்தது.

இதற்கிடையில், ஜனாதிபதி ஜெயவர்த்தனா கோரியபடி மேலும் மூன்று நாட்களுக்கு ராஜீவின் கொழும்பு விஜயத்தைப் பின் போடுவதற்கு இந்திய தரப்பு இணக்கம் தெரிவித்தது. இருந்தாலும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மீண்டும் தனது நிலைப்பாட்டில் தள்ளாடிக் கொண்டிருந்தார். வெளிநாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு பிரதமர் பிரேமதாசா கொழும்பு திரும்பிய பின்னர் உத்தேச ஒப்பந்தத்துக்கு அமைச்சர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவிப்பதாக ஜெயவர்த்தனா தெரிவித்தார். 27ஆம் திகதி உத்தேச ஒப்பந்தம் பற்றி ஆராய்வதற்காக விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. ஒப்பந்தத்தை,தான் எதிர்ப்பதாகக் கூறிப் பிரதமர் பிரேமதாசா மூன்று பக்க அறிக்கை ஒன்றினை வாசித்தார். பிரேமதாசாவுக்கு ஆதரவாக அமைச்சர்கள் காமினி ஜெயசூரியாவும் லலித் அத்துலத் முதலியும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து ராஜீவ் காந்தியின் விஜயத்தை மேலும் சில வாரங்கள் தள்ளிப் போட முடியுமா வென்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்திய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்தார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் நாட்டில் கொந்தளிப்பான நிலையேற்படுமென்று ஜனாதிபதி தெரிவித்தார். ஒப்பந்தம் கைச்சாத்திடுவது பின்போடப்பட்டால் அது பெரும் அழிவுகளை ஏற்படுத்துமென்று அமைச்சர் காமினி திஸாநாயக்கா ஜனாதிபதியிடம் கூறினார். இந்திய அதிகாரிகளும், பிரதமர் ராஜீவ் காந்தியின் கொழும்பு விஜயத்தைப் பின்போடுவதற்கு மறுத்து விட்டனர். இந்தக் கடைசி நேரத்தில் கூட, வடக்குக்

*(அரசியல் தொடர்)*

கிழக்கு இணைப்பையும் தமிழை உத்தியோகபூர்வ மொழியாக்கும் யோசனை கொண்ட சரத்துக்களையும் நீக்கி, ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முடியுமாவென்று ஜே.ஆர்.கோரினார்.

உத்தேச ஒப்பந்தத்தில் முக்கிய அம்சங்களாக இந்த இரு சரத்துகளும் இருப்பதால் அவற்றை நீக்க முடியாதென்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். இதனையடுத்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு ஜெயவர்த்தனா முடிவெடுத்தார். 27ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி தனது முடிவை அறிவித்தார். இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதை எதிர்ப்பவர்கள் கட்சியை விட்டு வெளியேறலாமென்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா காரசாரமாகவே தெரிவித்தார். மூன்று பக்க அறிக்கையை வாசித்த பிரதமர் பிரேமதாசா, உத்தேச ஒப்பந்தம் குறித்து தேசிய ரீதியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டார். அமைச்சர்கள் ரணில் விக்கிரமசிங்கவும் காமினி ஜெயசூரியவும் இக்கருத்தை ஆதரித்துப் பேசினர்.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை பற்றி 1990ஆம் ஆண்டு கொழும்பு சட்டக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஜெயவர்த்தனா உரையாற்றுகையில் கீழ்க் கண்டவாறு சொன்னார். "நான் கைச்சாத்திட மறுத்திருந்தால், உங்களில் சிலர் இன்று இங்கு வந்திருக்க மாட்டீர்கள். கட்டு நாயக்கா மீது இந்தியா குண்டுகளை வீசி, கொழும்பில் தனது துருப்புகளை இறக்கியிருக்கும். அந்தப் பேரழிவிலிருந்து நாட்டை நான் பாதுகாத்தேன்" என்று ஜெயவர்த்தனா சொன்னார்". அப்போது ஜெயவர்த்தனா ஜனாதிபதி பதவியில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்துவந்த பிரதமர் பிரேமதாசா ஜனாதிபதிப் பதவியைக் கையேற்றிருந்தார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படப் போவது பற்றிய தகவல் வெளியானதும் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒழுங்கு செய்திருந்தது. இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்குள் ஜே.வி.பி. உறுப்பினர்களும் நுழைந்து கொண்டார்கள். இருநூறுக்கு மேற்பட்ட பஸ்களை ஜே.வி.பி.யினர் தீயிட்டுக் கொளுத்தியதோடு, அரசாங்கக் கட்டடங்களையும் தாக்கினர். ஜெயவர்த்தனாவும் அவரது கட்சியினரும் உருவாக்கிய இந்திய எதிர்ப்பு அலையை சுதந்திரக் கட்சியும்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

ஜே.வி.பி.யும் நன்கு பயன்படுத்திக் கொண்டன. உத்தேச ஒப்பந்தம் கைச் சாத்திடப்படுவதைத் தடுப்பதற்காகவே இந்தப் பாரிய ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கொழும்பை நோக்கிச் செல்லும் மூன்று நுழைவாயில்களிலும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். தெஹிவளைப் பாலம், களனிப் பாலம், நுகேகொடை நுழைவாயில் ஆகிய இடங்களில் பேர ணிகள் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் தடுத்து நிறுத் தப்பட்டன.

ராஜீவ் காந்தியின் கொழும்பு வருகையை முன்னிட்டு இந்தியாவின் 'கறுப்புப் பூனைகள்' படையணி காலி முகத்திடலில் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தது. இந்திய கடற்படைக் கப்பல்கள் இலங்கைக் கரைக்குச் சமீபமாக நகர்ந்து, காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தன. ராஜீவ் காந்தி ஜூலை மாதம் 29ஆம் திகதி காலை, ஹெலிகொப்டர் மூலம் காலி முகத்திடலில் வந்திறங்கினார். ராஜீவ் காந்தியின் பயன்பாட்டுக்கென புதுடில்லியிலிருந்து விமானம் மூலம் குண்டுகள் துளைக்காத காரொன்றும் கொண்டுவரப்பட்டிருந்தது. அந்தக் காரிலேறி, பலத்த பாதுகாப்புடன் கொழும்பு கோட்டையில் அமைந்திருக்கும் ஜனாதிபதி மாளிகைக்கு இந்தியப் பிரதமர் சென்றார். ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் வேண்டுகோளின் பேரில் இந்திய விமானப்படை விமானங்கள் இலங்கைப்படை வீரர்களை வடக்கிலிருந்து கொழும்புக்கு கொண்டு வந்திருந்தன. இதற்கான உத்தரவை ராஜீவ் காந்தியே விடுத்திருந்தார். இத்தகைய கொந்தளிப்புகளுக்கும் பாதுகாப்புக்கும் மத்தியில் கொழும்பு வந்திறங்கிய பிரதமர் ராஜீவ் காந்தி, காலிமுகத்திடலில் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட போது கடற்படை வீரரொருவரின் தாக்குதலுக்கு இலக்கானார். அணிவகுப்பில் கலந்து கொண்ட கடறபடை வீரரான விஜயமுனி

**கொழும்பு வந்திறங்கிய பிரதமர் ராஜீவ் காந்தி, காலிமுகத்திடலில் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட போது கடற்படை வீரரொருவரின் தாக்குதலுக்கு இலக்கானார். அணிவகுப்பில் கலந்து கொண்ட கடற்படை வீரரான விஜயமுனி விஜித ரோகண டீ சில்வா என்பவர் தனது துப்பாக்கியின் அடிப்பாகத்தால் ராஜீவ் காந்தியின் தலையை நோக்கித் தாக்கினார். ராஜீவ் சடாரெனக் குனிந்து கொண்டதால், தலை தப்பியது. தோள்பட்டையில் அடி விழுந்தது.**

விஜித ரோகண டீ சில்வா என்பவர் தனது துப்பாக்கியின் அடிப்பாகத்தால் ராஜீவ் காந்தியின் தலையை நோக்கித் தாக்கினார். ராஜீவ சடாரெனக் குனிந்து கொண்டதால், தலை தப்பியது. தோள்பட்டையில் அடி விழுந்தது. அணிவகுப்பு மரியாதையையும் அதனையொட்டிய நிகழ்வையும் புகைப்படம் பிடிக்க உள்நாட்டு வெளிநாட்டுப் புகைப்படப் பிடிப்பாளர்கள் பலர் அங்கு சமுகமளித்திருந்த போதும், இலங்கைப் புகைப்படப் பிடிப்பாளா ஒருவா மாத்திரமே இந்நிகழ்வைத் தனது கெமராவுக்குள் 'கிளிக்' செய்து கொண்டார். அவரது பெயா சேனாவிதானகம. அந்நேரம் அவா லேக் ஹவுஸ் ஸ்தாபனத்தின் புகைப்படப் பிரிவில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

(தொடர்ந்து வடியும்....)

# நள்ளிரவு மல்லிகை



ஸ்ரீதேவி கொண்டு வந்த நாக மாணிக்கத்தை ஜயந்தன் மாந்திரிக பலத்தால் ஒரு பாம்பை அனுப்பி எடுத்து வரச் செய்கிறான். அதன் படி நடக்கிறது. தேவதத்தனும், குமாரும் அந்த மாணிக்கம் உரிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்திருக்குமா என்ற கலக்கத்தில் இருக்கிறார்கள்.

அங்கம் 54

**மூன்றாவது** ஜாமம் முடிவடையும் வேளை. பகவதியும் பரிவாரங்களும் நீராட்டை முடித்துக்கொண்டு திரும்பும் நேரமாகி விட்டது.

நாகமாணிக்கம் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்து விட்டதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினார் குமார். விஞ்ஞானத்தை மீறிய இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதால் முடிந்தவரையில் இதையெல்லாம் தெளிவாக தெரிந்துகொள்வதில் அவர் ஆர்வம் காட்டியதில் வியப்பில்லையே.

'ஒரு தடவை நேராவே போய்ப் பார்த்துட்டு வந்துடலாமா?'' குமார் கேட்டார். "அதுக்கென்ன போய்ட்டு வந்துட்டாப் போகுது" திருமேனி எழுந்திருக்க முயன்றார்.

அப்போது அந்தரத்தில் ஏதோ ஒன்று பாய்ந்து வருவது போன்ற சத்தம் கேட்டது. தெருவாசற்படி வரை வந்த சத்தம் அதன் பிறகு கேட்கவில்லை. சற்று நேரத்துக்குள் நாகம் ஒன்று ஊர்ந்து வந்து நிலவிளக்கின் முன்னால் படம் எடுத்தபடி நின்றது.அதன் தலை சற்று அசைந்து அசைந்து தேவதத்தனையும் குமாரையும் மாறி மாறிப் பார்த்தது. அப்போதுதான் தாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பது தேவதத்தனுக்குப் புரிந்தது. அப்படியானால் முன்பு வந்தது ஜயந்தன் அனுப்பிய போலியா?''

தேவதத்தன் உண்மையில் மிகவும் வருந்தினார். மேலும் சற்று நேரம் அப்படியே நின்றிருந்த நாகம் பூஜையறை வாசலில் போய் வளைந்து படுத்துக்கொண்டது.

"எதற்கும் நாம் ஒரு தடவை கோயிலுக்குப் போய் உண்மையைத் தெரிந்துகொள்வோம். சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வோம்.

**எழுதுவது சிவன்**

வாருங்கள் நம்பூதிரி!''

விரைவாக நடந்த இருவரும் கோயிலின் படிக்கட்டுகளைத் தாண்டி மேற்புறம் வந்தனர்.

அப்போது-

கருவறையின் கதவு திறந்து கிடந்தது. உட்புறத்திலிருந்து சிலம்புகளின் சத்தம்கேட்டுக்கொண்டிருந்தது.

"உள்ளே சிலம்புகளின் சத்தம் கேட்கிறது" குமார் மிகவும் தாழ்ந்த குரலில் கூறினார்.

"பகவதி நீராடி முடித்துத் திரும்பிவிட்டிருக்கிறார்'' - தேவதத்தனும் அதே போன்ற குரலில் பதில் அளித்தார்.

"பார்த்துவிடலாமா?'' -என்றபடி குமார் கருவறைக் கதவை நோக்கி நகர்ந்தார்.தேவத்தனும் அவரைத் தொடர்ந்தார்.

மூடியிருந்த கதவின் இடைவெளி வழியாக உட்புறத்தைக் கவனித்தனர்.

"ஐயோ!'' -தேவதத்தன் பதறியவராகத் திரும்பினார்.



"ஏன் பதறுகிறீர்கள்?'' -குமார் கேட்டார்.

"நாக மாணிக்கம் கருவறைக்குள் இல்லை. இந்த நிலைமையில் நாம் என்ன செய்ய முடியும்?''

"அப்படியானால் நாம் ஏமாந்துதான் போய் விட்டோம் இல்லையா?'' -குமார் பயமும், ஏமாற்றமும் கலந்த குரலில் கேட்டார்.

நாக மாணிக்கம் மட்டும் தங்கள் கைவசமிருந்தால், அதன் மூலம் எப்படிப்பட்ட காரியத்தையும் சாதித்துக் கொள்ளலாம் என்பது தேவதத்தன் நம்பூதிரிக்கும் நன்றாகவே தெரியும்.

முந்தைய நிலையை விட எதிராளிகளின் பலம் ஓங்கி விட்டிருக்கிறது. தங்களது செயல்களை மிகவும் சுலபமாகத் தடுப்பதுடன், சுயமாகத் தற்காத்துக் கொள்ளவும் நாக மாணிக்கம் அவர்களுக்கு உதவும்.

எனவே எப்படியாவது அந்த நாக மாணிக்கத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று அந்த இடத்திலேயே தீர்மானித்தார்.

பொருள் இன்னாரிடம் இருக்கக் கூடும் என்பது தெரிந்தாலும் சரியாக அது எந்த இடத்தில் இருக்கிறது என்று தெரிந்தால் தான், அடுத்த நடவடிக்கையைப் பற்றித் திட்டமிட முடியும். பிரஸ்னம் பார்த்தால் விஷயம் சுலபமாகிவிடும்.

"வாருங்கள் போகலாம்'' -தேவதத்தன் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

பிரஸ்னம் பார்ப்பதற்கு அன்றைய நாள் உகந்ததாக இல்லாததால் மறுநாள் பார்த்துக்கொள்ளலாம் என்று அதைத் தள்ளி வைத்தார்.

மறுநாள் பிரஸ்னம் பார்த்த தேவதத்தன் சந்தேகம் நிறைந்த குரலில் கூறினார்: "மாணிக்கத்தை வீட்டுக்குள் வைத்திருப்பதாகத் தெரியவில்லை. நெல்மணிகளுக்குள் இருப்பதாகத்தான் தெரிகிறது!'

"அப்படியானால் தேங்காய் கோடௌனிலும் கூட ஒரு தானிய அறை இருக்கிறது. குறைந்தது ஐந்நூறு மரக்கால் நெல்லாவது கொள்ளக் கூடியது அது. அதற்குள் தான் இருக்க வேண்டும்'' -குமார் பதிலளித்தார்.

"அப்படியானால் அதற்குள்தான் இருக்க வேண்டும்''.

"அங்கிருந்து அதை எப்படி எடுப்பது?" குமார் கேட்டார்.

'இதற்கு மாந்திரீக பலம் மட்டும் போதாது. தைரியம் தான் தேவை. தோப்புக்குக் காவல்காரர்கள் யாராவது இருந்தால் அவர்களை அப்புறப்படுத்த வேண்டுமானால் மந்திரத்தைப் பயன்படுத்தலாம்''. -திருமேனி சொன்னார்.

"பிரபாகரனுக்கு அந்த தானிய அறையைப் பற்றி நான்றாகத் தெரியும். அதனால் அதைத் திறந்து மாணிக்கத்தை வெளியே எடுக்கும் வேலையை அவனிடேமே விட்டு விடலாம்.'' -குமார் ஒரு தீர்மானத்துக்கு வந்தவராகக் கூறினார்.

(வாசனை வீசும்....)

# தியானமும் விஞ்ஞானமும்

அமெரிக்காவில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் இரத்த அழுத்தத்தாலும், வாழ்க்கை நெருக்கடிகளினாலும் அல்லலுறுகிறார்கள். மனநோய் உடல் நோயாகி மருந்து சாப்பிடவேண்டி இருக்கிறது. அல்லது மன சிகிச்சை நிபுணர் அலவலகத்திற்கு நடக்க வேண்டி இருக்கிறது.

'அறியப்படாத மனிதன்' என்ற புகழ்பெற்ற புத்தகத்தை எழுதிய பிரபல மருத்துவ - விஞ்ஞானி அலெக்சி காரல், மனித மனத்தில் எழும் நம்பிக்கையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். கோயில் போன்ற சில புனிதமான இடங்களில் சில சமயம் திடீரென்று நோய் குணமாவதைப் பற்றி அவர் எழுதுகிறார். நோய் குணமாக உடலில் இயற்கையான - ஒரு முறை செயல்படுகிறது. ஆனால் அதில் நம்பிக்கை சேரும்போது குணமாகும் முறை வேகமடைகிறது என்கிறார் அவர்.

"ஒரு சதவிகித மக்கள் ஒரு நாட்டில் தியானம் செய்வார்களானால், அந்த நாட்டில் பத்து சதவிகித குற்றமும், களவும், கொலையும் குறையும்" என்று நமது ஊர் ஞானி ஒருவர் ஒருமுறை குறிப்பிட்டார். தனி மனித தியான சக்தி, சில காரியங்களைத் தனிப்பட்ட அளவில் சாதிக்கும்போது, ஒரு சமுதாயத்தின் கூட்டுத் தியான சக்தி - எண்ண சக்தி - ஏன் பெரிய காரியங்களைப் பெரிய அளவில் சாதிக்க முடியாது? சிந்தித்துப் பார்க்க வேண்டிய விஷயம்.

அமெரிக்காவின் புகழ்பெற்ற இல்லினாய் மாநில சட்டசபை 'தியானத்தினால் ஏற்படும் நலன்களைப் பாராட்டி' சட்டசபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.


அமெரிக்க இராணுவக் கல்லூரி தியான மார்க்கத்தைப் போர்வீரர் பயிற்சியில் பாடமாகப் போதிக்கத் துவங்கியது. மற்றெல்லாப் பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் ஏதாவது ஒரு பாடமாவது யோகத்தைப் பற்றியோ, தியானத்தைப் பற்றியோ மாணவர்களுக்கு இப்போது சொல்லிக் கொடுக்காமல் இல்லை.

சனாதனிகள் எனப்படும் தொழில் துறை சம்பந்தப்பட்டவர்கள் தியான மார்க்கத்தைப் பயின்றதன் விளைவாக அவர்களது படபடப்பும் இரத்த அழுத்தமும் குறைந்ததாகவும், ஒரு நிதானமும் நெருக்கடிகளை முன்னைவிட மேலான நம்பிக்கையுடன் சமாளிக்கும் நிலையும் கூடியதாகவும் குறிப்பிட்டார்கள். மனம் காரணமாக எழும் உடல் நோய்கள் வெகுவாகக் குறைந்தன.

"எப்படி தியானம் செய்வது? அது என்ன அது? மந்திரம்?" என்ற கேள்வி எழுந்தபோது, 'ஓம்' என்ற வார்த்தை 'ஓங்கார' ரூபமாய் எங்கும் ஒலித்தது. ஹார்டுவர்டு பல்கலைக்கழகத்து பென்சன் பார்த்தார். 'என்ன இது ஓம்?' 'ஏன் இந்த வடமொழி வார்த்தை? ஏன் இந்த இந்துமதக் கலப்பு?' என்று எண்ணி தியான மார்க்கத்திலிருந்து அதன் எல்லாவித இந்து மதத் தொடர்புகளை - சொற்களை - அகற்றிவிட விரும்பினார்.

ஓம் என்பதற்குப் பதில் 'வண்டி வண்டி' என்றோ, 'சாப்பாடு சாப்பாடு' என்றோ அல்லது தனக்குப் பிடித்த சினிமா நட்சத்திரத்தின் பெயரைச் சொன்னால் தியானம் பலன் தருமா என்று பலர் விதண்டா விவாதமான - தர்க்க ரீதியான - கேள்விகளை எழுப்பினார்கள். பென்சன், தியானத்திற்குப் பயன்படுத்தப்படும் சொற்களை ஆராய்ந்தார். அதில் வல்லினம் ஏதும் இல்லை. மெல்லின ஒலி இருந்தது. உயிரெழுத்தின் ஒலி இருந்தது. அப்படி இப்படி, இந்து மதத்திற்கு அப்பாற்போய் அவர் கண்டுபிடித்த சொல் - ஒலி - ஒன்று என்பதாகும். தியானம் செய்யும்போது 'ஒன்' என்று கூறினால் முன் கூறிய அதே பலன் ஏற்படுகிறது என்று காட்டினார்.

உடனடியாக உலகெங்கிலுமுள்ள தத்துவஞானிகள் 'ஒன்று' என்ற வார்த்தை (ஒருவனே தேவன் என்பது போல) எல்லா மதங்களிலும் அதிகப் பொருளுடன் உபயோகிக்கப்படும்



வார்த்தை என்பதை எடுத்துக் காட்டினார்கள். கடைசியாக, சொல்லுக்கு வடமொழி, இந்து மதம் என்றே பாகுபாடு கிடையாது! அது ஓர் அடிப்படை ஒலி; இணைக்கும் ஒலி; மனித ஆத்மாவின் குரல் - இதில் மனத்தைப் புகுத்துவதோ, பிரிப்பதோ முட்டாள்தனம் என்பதை உணர்ந்தார்.

மந்திரம் என்பது என்ன? ஒரு சொல். ஓர் ஒலி நம்மையும் பிரபஞ்சத்தையும் இணைக்க உதவும் ஓர் ஓங்கார இசைப் பாலம். அது ஓம் என்றிருக்கலாம். சிவாய நம என்றிருக்கலாம். ராம என்று இருக்கலாம். மணி பத்ம என்றிருக்கலாம். 'புத்த' என்றிருக்கலாம். வேறு எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அது உங்கள் இயல்புக்கு ஏற்ற ஒலியாக இருக்க வேண்டும். நமக்கு ஏற்றதை நாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் அல்லது நமது வழிகாட்டிகளிடமிருந்து பெறலாம்.

இந்த ஒலி என்ன செய்கிறது?

உரக்க, ஓர் இரண்டு நிமிடம் ஓம் என்று சொல்லிப் பாருங்கள், புரியும். நமது நினைவு அறிவை அது மறக்கச் செய்கிறது. சமப்படுத்துகிறது. அந்த ஒலியில் நமது தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் அறிவு ஆழ்ந்து போகிறது. நாய்க்கு எலும்பைத் தூக்கி எறியும்போது நாய் அதைக் கடித்துக் கொள்வதைப்போல, நாயின் குரைத்தல் சப்தம் இப்போது இல்லை. அந்தத் தொல்லை இல்லை. இனி நாம் பயணத்தைத் தொடரலாம்.

"பௌதிகத்தில் நிரந்தர மின் ஓட்டம் என்ற ஒரு நிலை இருக்கிறது. அதேபோல மனம் தியான அமைதியில் இருக்கும்போது அங்கே ஒரு நிரந்தர ஓட்டம் ஏற்படுகிறது" என்று ஒரு விஞ்ஞானி அதை வருணிக்கிறார். "மருந்தின் துணை இல்லாமல் மனத்தை அமைதிப்படுத்துவது - உடலை அமைதிப்படுத்துவது ஓர் அபார சாதனை" என்று மேனாட்டு மருத்துவ அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். "மருந்தின் மூலம் மனித மனத்தைக் கட்டுப்படுத்தும் போது நம்மைக் கட்டுப்படுத்தும் சக்தியை ஒரு வெளிப்பொருளிடம் ஒப்படைக்கிறோம். ஆனால் மருந்தில்லாமல் மனித மனத்தை - மனித மனத்தின் மூலமே (தியானத்தின் மூலம்) கட்டுப்படுத்தும்போது நாமே எஜமானர்களாக இருக்கிறோம்" என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

தியானம் செய்த பலர்: தியானத்தின்போது ஏதோ எல்லையற்ற, இடத்திற்குச் செல்வது போலவும், சாவு இல்லாத உலகில் வாழ்வதாகவும் அசாதாரண ஆக்க சக்தி பிறப்பதாகவும் கூறினார்கள்.

மனிதனது பால் உறுப்புக்களில், கரு உற்பத்தியாகுமிடத்து, காமமல்லாத ஓர் உணர்வையும் ஒரு விழிப்பையும் அனுபவித்ததாக தியானம் செய்த பலர் கூறினார்கள். நமது மறை நூல்களோ இதையே குண்டலினி சக்தி என்றும், அது அடியிலிருந்து புறப்பட்டு முள்ளந்தண்டு வழியே மூளையின் பகுதியான பைனியல் சுரப்பியில் கலக்கிறது என்றும் அப்போது 'உள்ளொளி' பிறப்பதாகவும் ஆத்மா 'விழிப்பு' பெறுவதாகவும் குறிப்பிடுகின்றன.

ஸ்வீடிஷ் பல்கலைக்கழகம் குண்டலினி சக்தி பற்றி ஆராய்ந்து வருகிறது.

வால்டர்ஹெஸ் என்ற சுவிற்சர்லாந்து நாட்டு நோபல் பரிசு பெற்ற மருத்துவ விஞ்ஞானி, மூளை பற்றிய ஆராய்ச்சி செய்தார். சோதனைக்கு அவர் பூனையை எடுத்துக் கொண்டார். நமது எல்லாக் காரியங்களையும், ஒழுங்கில் நிலை நிறுத்தும் அந்த முக்கியமான இடம் மூளையில் எங்கே இருக்கிறது என்பதே அவர் கேள்வி. எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும் இடம், மூளையில் ஹைப்போதலாமஸ் என்ற பகுதியின் முன்பக்கம் என்று அவர் காட்டினார்.

நமது தியானம் அந்த இடத்திற்குத்தான் செய்தி அனுப்பி மனத்தை அமைதிப்படுத்துகிறது என்று அபிப்பிராயப்படுகிறார்கள், விஞ்ஞானிகள்.

அமைதியான சூழ்நிலை, ஓர் இயல்பாக அமர்ந்த நிலை, அத்துடன் நினைவு, மனத்தை அமைதிப்படுத்த ஒரு சொல் - அப்போது மனம் ஒருமைப்படுகிறது. அப்போது நாம் மூச்சு விட்டுக்கொண்டு இருப்பதை உணரத் துவங்குவோம்.

ஓம் எனலாம், சிவாய நம எனலாம், யேசு என்றோ அல்லா என்றோ கூறலாம். தியானத்திற்கு மதம் இல்லை. அது ஒருமுறை. அவ்வளவுதான்.

நம்மை நாமே அறிந்துகொள்ள ஒரு முறை, நம்மில் இருக்கும் மாபெரும் சக்தியை அறிந்துகொள்ள ஒரு முறை.

(தொடர்ந்து வரும்.....)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள்
சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள்
அடங்கிய இப் போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு
பரிசுகளையும், பாராட்டுக்களையும்
பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 173க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

அ. வித்தியானந்தன், 16/1 கோணர், வீதி, மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. எம். பி. அகிலன், 39, கல்லூரி வீதி, திருமலை.
2. பி. பிரணவி, 276, மூர்வீதி, மன்னார்.
3. என். எம். பாரூக், 36, தெஹிதெனிய மடிகே, ஹதரலியத்தை.
4. எம். சாந்திகுமார், அரச கால் நடை மருத்துவ நிலையம், மஸ்கெலியா.
5. ர. சந்திரா, 199/57, தும்புறுகிரிய வீதி, ஹட்டன்.
6. பூபதி தாமோதரம்பிள்ளை, தபால் கந்தோர் வீதி, மன்னார்.
7. பை. அ. ஜலீல், 61/1A/.1 மகாபுத்கமுவ, முல்லேரியாவ.
8. எம். எஸ். சித்தி உம்மா, பெரியகடை, திருகோணமலை.
9. ஆர். எம். மஸ்ஊத், BT/ பத்ரிய்யா வித்தியாலயம், காத்தான்குடி.
10. எம். எப். எம். மிஸ்காத், மாஞ்சோலைச்சேனை, கிண்ணியா-3.

## குறுக்கெழத்துப் போட்டி 175

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | 8 | | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | | 21 | 22 | | |
| | 26 | 27 | | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | | 36 |

**இடமிருந்து வலம்**

1. அண்மையில் ஏவுகணை பரீட்சிப்பதில் கண்டனத்திற்குள்ளான நாடு
7. ஆசான் (திரும்பியுள்ளது)
10. மாதா (திரும்பியுள்ளது).
13. கட்டடப் பொருள் (குழம்பியுள்ளது).
17. சரம் என்றும் கூறலாம்.
21. அதிகப்படியானது என்றும் பொருள்படும். (திரும்பியுள்ளது).
26. ஊதியம் என்றும் கூறலாம்.
29. மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டது. (திரும்பியுள்ளது).
31. மேகங்களுக் கிடையே ஏற்படும் ஏற்றங்களின் விளைவு. (குழம்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1. மழைக்கு அதிபதி.
2. உடல் உறுப்பு. (குழம்பியுள்ளது).
4. பருவ காலமொன்று (தலைகீழ்).
5. வேள்வி (குழம்பியுள்ளது).
12. கரை என்றும் கூறலாம்.
15. வாசனை மிக்கது. (குழம்பியுள்ளது).
26. வளைவு என்றும் பொருள்படும்.
30. விஜய் நடித்து வெளியான படம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 173 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கு 1 | ள 2 | டா 3 | | மா 5 | பீ 6 |
| ன் 7 | கா 8 | த 9 | ல 10 | | ட 12 |
| னி 13 | ம் 14 | ல 15 | ம 16 | | ம் 18 |
| யா 19 | | ம் 21 | ட் 22 | வி 23 | |
| ய் 25 | வெ 26 | | ம் 28 | ஆ 29 | பி 30 |
| | தை 32 | தீ 33 | | அ 35 | ணி 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 05.07.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-175
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்



## சாபங்கள் பூக்களில்லை!

– வழங்குவது ராஹில்

சக மனிதனை வீழ்த்தி நீ அதில் எழும்புகின்றாயா?

உன்னை வீழ்த்துவதற்கு இன்னொருவன் பலம் கொண்டு வருவான்.

பிற உயிரின் கண்ணீர் குடித்து தாகம் தீர்க்கின்றாயா?

உன் குருதி குடிப்பதற்காக இன்னொரு மனிதன் உன்னை அடைவான்.

ஒருவன் வீழ்ச்சியில் கோடி மகிழ்ச்சி மலர்கள் விழிக்கின்றனவா?

நீயே விழுகின்றபோது எந்தக் கரங்களும் உன்னை நோக்கி நீளாது.

ஒருவன் நடந்து செல்லும் பாதையில் குழிதோண்டுகிறாய்.

அடுத்தவன் வெளிச்சத்தைத் திருடுகிறாய்.

உன்னை மட்டுமே நீ அங்கீகரிக்கின்றாய்.

துன்பம் பிறர்க்கென்றால் உன் புன்னகை சுதந்திரமடைகிறது.

நீ துன்பக் குழியில் விழும்போது உனக்காக எந்தக் கண்களும் நீர் சுரப்பதில்லை.

நீ ஒரு பாவம் என்ற பயிர் வளர்க்கிறாய். அறுவடையின் போது உன் வாழ்க்கையே அறுத்து வீசப்படுகிறது.

நீ வளர்க்கின்ற பாவங்கள் உன்னையே சந்திக்கின்றன சுவரில் வீசப்படும் இரப்பர் பந்தைப் போல. பிறர் கண்ணீர், அவர்களின் சோகங்கள் சேர்த்து நீ உன் காலத்தைக் கட்டி எழுப்பினால், நீ இறுதியில் அடையப்போவது இருளைத்தான்.

உன்னிடம் ஒரு துளி நெருப்பு இருந்தால் பிறர் வாழ்க்கைக்கே தீ வைக்கிறாய்.

அந்த ஒரு சொட்டுத் தீயால் ஆயிரமாயிரம் தீபங்கள் செய்!

நீ தீமைகளோடு அலையும் போது உன் சந்ததியின் வேர் வரை அந்தப் பாவம் பற்றிப் பிடிக்கிறது.

பிறர் புன்னகை நட்டு,
அவர்கள் வாழ்த்து வார்த்தைகள் ஊற்றி உன் உயர்ச்சியை வளர்த்தெடு!

அப்போதுதான் உன் பரம்பரையின் பெயர் இங்கே பாதுகாக்கப்படும்.

பிறர் சாபங்கள் பூக்களில்லை.
அவை கண்ணீர்க் குண்டுகள்.
வெடி குண்டுகளை விட கண்ணீர்க் குண்டுகளுக்கு வலிமை அதிகம்.

உன் வாழ்க்கை வெடித்துச் சிதறுவதற்கு முன்னாடி, நீ வாழ்த்துக்களால் வாழ்க்கை செய்!

நீ பிறர் கண்ணீர் துடைக்கும் போது, உன் பரம்பரையின் ஆனந்தம் பூப்பதற்குத் தயாராகிறது.

சக மனிதன் கடவுளின் அற்புதம் என்ற வாசகம் உன்னில் உயிரானால் நீ யாரையும் வீழ்த்தி விறகு வைக்கமாட்டாய்.

# இவ்வாரச் சிறு கதைகள்

## உயிருக்கேது உத்தரவாதம்

**யாழ்ப்பாணம்** பெரியாஸ்பத்திரியின் 10ஆவது வாட்டுக்குள் வந்த நரம்பியல் நிபுணர் டாக்டர் சிவகுமாரை 'குட்மோனிங் டொக்டர்' என்று சொல்லி வரவேற்றாள் நேஸ் லீலா. "குட்மோனிங் லீலா, டாக்டர் பெஞ்சமின் வந்தால் என்னை ஒருக்கா சந்திக்கட்டாம் என்று சொல்லுங்கோ" என்று சொன்னபடி நோயாளிகளைப் பார்வையிடச் சென்றார் டாக்டர் சிவகுமார்.

நரம்பியல் பிரிவில் கடந்த 3 மாதத்திற்கும் மேலாக சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பவன் கணேஷ். வயது பதினேழு இருக்கும். முதுகில் குண்டுபட்டதினால் தோளுக்குக் கீழே எல்லா உறுப்புகளும் செயலிழந்து போய்விட்டது. இரண்டு கைகளையும் தலையையும் மாத்திரமே அசைக்க அவனுக்கு முடியும். அவனைப் பராமரிப்பதற்கென்று வசந்தன் என்பவனை நியமித்திருந்தார் டாக்டர் பெஞ்சமின். கணேஷுக்குச் சொந்த ஊர் மலையகத்தைச் சேர்ந்த ஹற்றன். ஒன்பதாவது வயதில் வீட்டு வேலைக்காக யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டான். ஒரு பணக்கார வீட்டில் அடிமையைப் போல் இருந்தவனை டாக்டர் பெஞ்சமின் விடுதலையாக்கியிருந்தார். கணேஷ் மாத்திரமல்ல, அநேக மலையகத்துச் சிறுவர்கள் விடுதலையாக்கப்பட்டிருந்தார்கள். கணேஷ் போன்றோரின் மனங்களில் டாக்டர் பெஞ்சமின் தெய்வமாக இடம் பிடித்திருந்தார். கணேஷ் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலையானதும் துப்பாக்கிக்குண்டு அவனை படுக்கையில் அடிமையாக்கிவிட்டது.

கணேஷ் தன் சொந்த ஊருக்குப் போய் குடும்பத்தாரைப் பார்க்க வேண்டும் என்று கேட்டிருந்தான். டாக்டர் பெஞ்சமின் தான், ஏற்பாடு செய்வதாகச் சொல்லியிருந்தார். அதற்குள் இப்படியொரு விபரீதம் ஏற்பட்டுவிட்டது.

"குட்மோனிங் டாக்டர்" அறைக்குள் வந்த டாக்டர் சிவகுமாரை வரவேற்றான் கணேஷ். வசந்தன் தலைமாட்டில் நின்று கொண்டிருந்தான். குட்மோனிங் கணேஷ் என்று சொல்லியபடி, கணேஷின் சாட்டை எடுத்து எழுதிவிட்டு கணேஷ் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். நாளடைவில குணமாயிடும். உனக்கு என்ன குறை. உன்னைத்தான் டாக்டர் பெஞ்சமின் நல்லாக் கவனிக்கிறாரெல்லோ என்று சொல்லியபடி அடுத்த கட்டிலில் படுத்திருக்கும் பரமேஸ்வரனை நோக்கிச் சென்றார் டாக்டர் சிவகுமார்.

பரமேஸ்வரன் இங்கிலாந்தில் வேலை செய்பவர். விடுமுறையில் சொந்த ஊருக்கு வந்திருந்தபோது விபத்துக்குள்ளானதில் நரம்பு சுளுக்கு ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். ஓரளவு குணமாகியும் விட்டார். விரைவில் போய்விடுவார்.

டாக்டர் பெஞ்சமினும் அவரது தோழர்களும் ஒவ்வொரு நாளும் கணேஷை வந்து விசாரித்து விட்டுப் போவார்கள். நேஸ் லீலாவும், நேஸ் மாலியும் கணேஷை அன்புடன் கவனித்து வந்தார்கள். அட்டெண்டர் வேதாரணியமும் கணேஷை அன்புடன் கவனித்து வந்தார்.

டாக்டர் பெஞ்சமினைப் பற்றி பரமேஸ்வரன் கணேஷிடம் ஓரளவு கேட்டு தெரிந்து வைத்திருந்தார்.

ஒருநாள் மத்தியானம் திடீரென்று "அடேய் உவர் டொக்டரோடா?" என்றார் பரமேஸ்வரன். எவர் என்றான் கணேஷ். உவர்தான் தாடிக்காரன். ஒவ்வொருநாளும் வந்து உன்ர தலையைத் தலையைத் தடவிப் போட்டுப் போறாரெல்லா அவரைத்தான் கேக்கிறன் என்றார் பரமேஸ்வரன்.

"அவற்ற பேர் தோழர் டாக்டர் பெஞ்சமின்" என்றான் கணேஷ்.

"அதுசரியடா கணேஷ் இவரை முந்தி உனக்குத் தெரியுமோ?" என்றார் பரமேஸ்வரன்.

"இல்லை" என்று இறுக்கமாகப் பதில் சொன்னான் கணேஷ்.


இவையெல்லாம் டாக்டருக்குப் படிச்சவையோளா? ஊரை ஏமாத்திக்கொண்டு திரியுறாங்கள். இஞ்சையென்னென்டால் எல்லாரும் மரியாதையெல்லோ குடுக்கினம்.

இப்பொழுது கணேஷ் கோபத்தில் விம்மினான். அவன் கைகள் படுக்கையில் இருந்தபடி நடுங்கியது. கண்களில் கண்ணீர் வந்தது. அப்பொழுது கணேஷைப் பார்க்க லீலா மிஸ் வந்தாள். கணேஷின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் லீலாவின் கண்கள் கலங்கியது. "கணேஷ் என்ன நடந்தது" என்று கேட்டாள் லீலா.

"பேந்து சொல்லுறன் மிஸ்" என்றவாறு அழுதான் கணேஷ். பரமேஸ்வரன் முகத்தை அந்தப் பக்கமாகத் திருப்பினார்.

மறுநாள் "குட்மோனிங் டொக்டர் என்னை வரச் சொன்னனீங்களாம்" என்றபடி வந்தார் டாக்டர் பெஞ்சமின். ஒண்டுமில்லை டாக்டர் பெஞ்சமின், நம்ம கணேஷை ஆஸ்பத்திரியிலிருந்து கூட்டிக்கொண்டு போகலாம்தானே. உங்களுக்கே தெரியும். இனி அவனுக்கு வைத்தியமே இல்லையெண்டு என்று சொன்னார் டாக்டர் சிவகுமார்.

அப்படிச் சொல்லாதையுங்கோ டாக்டர். கணேஷுக்கு இப்போதைக்கு ஆஸ்பத்திரி ஒரு வீடு மாதிரிப் போச்சுது. அவனை நான் வெளியில கொண்டு போனால் அவன் மனதளவில் பாதிக்கப்பட்டுப் போயிடுவான். ஆஸ்பத்திரியில இருக்கும் வரைக்கும் எண்டைக்கோ ஒருநாள் சுகமாவேன் எண்ட நம்பிக்கை அவனுக்குள் இருக்கும். அவன்ர ஒரேயொரு நம்பிக்கைதான் அவன்ரை சீவியம். நீங்கதான் டாக்டர் அவன் ஆஸ்பத்திரியில தங்க அனுமதிக்க வேணும் என்றார் டாக்டர் பெஞ்சமின்.




ஓ.கே. டாக்டர் பெஞ்சமின் உங்களை மாதிரி ஆழமாச் சிந்திக்க எனக்குத் தெரியவில்லை. கணேஷ் எவ்வளவு காலமெண்டாலும் இஞ்சையே இருக்கட்டும் என்றார் டாக்டர் சிவகுமார்.

"தாங்யூ டாக்டர்" என்று சொன்னபடி டாக்டர் பெஞ்சமின் விடைபெற்றுச் சென்றார்.

சில நாட்கள் கழித்து திடீரென வசந்தனைக் காணவில்லை. கணேஷை யாரும் வந்து பார்க்கவில்லை. அட்டெண்டர் வேதாரணியமும் லீலா மிஸ்ஸும் மாலினி மிஸ்ஸும் கணேஷைக் கவனித்து வந்தார்கள். கணேஷ், லீலா மிஸ்ஸிடம் கேட்டான்.

ஏன் ஒருத்தரையும் காணல்லை" என்றான்.

வருவினம் வருவினம் எல்லாரும் தூரத்துக்கு அலுவலாப் போட்டினமாம் எண்டு சமாளித்தாள் லீலா.

கணேசுக்கு மத்தியானச் சாப்பாடு கொண்டுவரப்போன வேதாரணியம் ஓட்டமாய் வந்தான். "லீலா மிஸ் டாக்டர் பெஞ்சமினையெல்லோ சுட்டுப்போட்டாங்களாம்" என்றான். லீலா ஓவென்று ஒப்பாரி வைத்தாள். கணேஷிட்டை சொல்லிப் போடாதையும் என்றாள்.

சில மணி நேரம் கழித்து 10ஆவது வாட்டுக்குள் இரண்டுபேர் துப்பாக்கியுடன் வந்தார்கள்.

"ஆயுதங்களுடன் வாட்டுக்குள் வர அனுமதியில்லை என்றாள் லீலா. ஒருவன் திரும்பி வந்து லீலாவிடம்"

"என்னடி சொன்னனி...சை" என்று கன்னத்தில் ஓங்கி அறைந்தான். அதே நேரத்தில் கணேஷின் அறைக்குள் டமார் என்று சத்தம் கேட்டது. அடியையும் வாங்கிக் கொண்டு லீலா கணேஷ்... என்று அலறியபடி கணேஷின் அறையை நோக்கி ஓடினாள்.

அப்பொழுது கணேஷின் அறைக்குள் இருந்து மற்றவாஆ வெளியே வந்தான். அவனது துப்பாக்கியில் இருந்து லேசாக புகை வந்து கொண்டிருந்தது. கணேஷின் வாய்க்குள்ளிருந்தும் பின் தலையில் இருந்தும் இரத்தம் ஓடிக் கொண்டு இருந்தது.

லீலா கணேஷின் மேல் தலையை வைத்து அழுதாள். பரமேஸ்வரன் பயத்திலே கட்டிலின் மீது ஏறி நிண்டு கொண்டு "ஐயோ இப்படியொரு கொலையா? எப்படியெண்டாலும் இவங்களிட்டையிருந்து நான் எங்கையாச்சிலும் தப்பிப் போய் என்ரை உயிரைக் காப்பாற்ற வேணும்."

என்று அலறினான்.

*யாவும் கற்பனை*

## எதிர்பாரா விபத்து

**இயற்கை** எழில் கொஞ்சும் அழகு நிறைந்த ஒரு சிறிய கிராமத்தில் வசித்துவரும் கணேஷ் - பத்மா ஆகிய தம்பதியரின் ஒரே மகள் மீனா. மீனாவின் அப்பாவின் ஜீவனோபாய தொழில் கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதுதான். அன்றாடம் உண்பதற்கே உழைக்கும் பணம் போதுமானதாக இல்லை. இக் கஷ்டநிலையிலேயே மீனா விரும்பியபடியால் அவளை படிக்க வைத்தார். மீனா படிப்பில் கெட்டிக்காரி, பார்ப்பவர்களை ஈர்க்கும் அழகுடையவள். இவளை விரும்பாதவர்களே இல்லை. ஆனால் அவளுக்கு ரவியைத்தான் பிடித்திருந்தது. மூன்று வருடமாக இருவரும் உயிருக்குயிராக காதலித்து வந்தார்கள். இது இருவரின் வீட்டாருக்கும் தெரியாது. மீனாவுக்கு உயர்தர பரீட்சையும் நெருங்கியது.

இச்சந்தர்ப்பத்திலேயே குமார் என்ற ஒருவனும் மீனாவை அடைய வேண்டும் என்று விரும்பினான். தனது விருப்பத்தைக் கூற கடையில் நின்று கொண்டிருந்த மீனாவின் அப்பாவை பார்த்து பேசவென தீர்மானித்தான். அவர் அருகில் வந்து "வணக்கம்! அங்கிள் என்டபேர் குமார் லண்டன்ல ஜொப் செய்றன். சொந்தமா வீடும், காரும் இருக்கு. உங்க மகளை மெரேஜ் பண்ணலாமென நினைக்கிறன். மீனாவையும் லண்டனுக்குக் கூட்டிட்டு போயிடுவன். ஒன்றும் நினைக்காதீங்க நானே உங்ககிட்ட நேரடியா வந்து பேசியது பிழையென்றா மன்னிச்சிடுங்க" என்று தயவாக பேசினான் குமார்.

அவனது பேச்சில் மயங்கி, தீரவிசாரிக்காமல் சம்மதமும் கொடுத்து விட்டார் மீனாவின் தந்தை. இவ்விடயத்தை வீட்டில் தெரியப்படுத்த விரைந்த கணேஷ், "பத்மா...பத்மா கெதியாவா இங்க" என்று மிக்க சந்தோசத்துடன் கூப்பிட்டார். "என்னங்க ஏதும் நல்ல சேதியா? என்று வினவினாள் பத்மா. முதல்ல மீனாவையும் கூப்பிடு என்று உத்தரவிட்டார். அம்மா அழைக்க என்னவோ ஏதோ என்று தன்னுள் பல கேள்விகளைக் கேட்டபடி வந்தாள் மீனா. இங்கபாரு மீனா நான் எவ்வளவு நாளைக்குத்தான் கடலுக்குப் போறது. எனக்கும் வயசாயிடுச்சி, உழைக்கிறதே சாப்பாட்டுக்கு போதுமானதாக இல்லையே. இப்படி இருக்கிறப்போ இந்த நல்ல வரத்த தள்ளிப் போடக்கூடாது என்று மீனாவைப் பார்த்து கூறினார் கணேஷ்.

"என்னப்பா சொல்றீங்க; விளங்கிறமாதிரி சொல்லுங்க" என்று வினவினாள் மீனா. குமார் கூறிய விடயத்தைத் தெளிவாக கூறினார். இதைக் கேட்டதும் உண்மையிலேயே மீனாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு ரவியை காதலிக்கும் விடயத்தைத் தயங்கியபடி கூறினாள். இதைக்கேட்டதும் கொதித்து எழும்பினார் தந்தை. "என்ன ரவியையா லவ் பண்ற, இப்பவும் கஷ்டப்பட்டு அவனையும் கட்டிட்டு கஷ்டப் படணுமா. அதெல்லாம் சரிபட்டு வராது. அந்த நினைப்பெல்லாம் இருக்கக் கூடாது பேசாம என்டபேச்சக்கேட்டு மரியாதையா குமாருக்கு கழுத்த நீட்டு; இல்ல நான் வேறு முடிவுதான் எடுக்க வேண்டி இருக்கும்" என்று ஆவேசமாக கூறிவிட்டுச் சென்றார் கணேஷ். இதைக் கேட்டதும் நிலை குலைந்து போனாள் மீனா. என்ன செய்வதென்று புரியாமல் குத்துக்கல்லாக நின்ற அவளை, அம்மா சமாதானப்படுத்தி தூங்கும்படி உத்தரவிட்டாள். அவளால் நிம்மதியா தூங்க முடியவில்லை.

முதலில் மறுத்தாலும் பின் பெற்றோரின் வற்புறுத்தலுக்காக குமாரைக் கல்யாணம் பண்ண சம்மதித்தாள். தனது படிப்பைப் பாதியிலேயே விட்டு விட்டு பல எதிர்பார்ப்புகளோடு மணவாழ்க்கையில் இணைந்தாள். இரண்டு மாதங்களில் மீனா கர்ப்பமானாள். எல்லை இல்லா சந்தோசமடைந்த மீனா, இச் செய்தியை தன் கணவருக்குத் தெரியப்படுத்தினாள். ஆனால் அவனோ எந்த வித அக்கறையுமில்லாமல் கருவைக் கலைத்து விடும்படி கூறினான். அவளோ இணங்கவில்லை. இதனால் அவளை தினமும் கொடுமைப்படுத்த தொடங்கினான்.குமார். அவளது கனவெல்லாம் இரண்டு மாதங்களில் உடைந்துபோனது.

குமார் தினமும் குடித்துவிட்டு வருவதும், அடிப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தான். நாளாக நாளாக மீனா அவனைப் பற்றிய முழு விபரத்தையும் அறிந்து கொண்டாள். தன்னையும் குடும்பத்தையும் நன்றாக ஏமாற்றிவிட்டான் என்பதை உணர்ந்து மிகவும் துன்பமடைந்தாள். அவனை எப்படியாவது திருத்தி விடலாம் என்று முயற்சி எடுத்தும் தோல்வியே அடைந்தாள். இதனைக் கேள்வியுற்ற மீனாவின் அப்பா மிகவும் துயரம் அடைந்தார். சில காலங்களின் பின்னரே மீனா திருமணமான விடயம் ரவிக்குத் தெரியவந்தது. இதனை இட்டு மிகக் கவலை அடைந்தான். அது மட்டுமல்லாமல் மீனா குமாரிடம் ஏமாந்து போனதால் மிகவும் வேதனை அடைந்தான்.




சில நாட்களில், வீட்டிலுள்ள பொருட்களையும், அவள் போட்டிருந்த நகைகளையும் விற்று சூதாடி, குடித்து நாசமாக்கிவிட்டான் குமார். தினமும் குடித்துவிட்டு வந்து மீனாவை அடிப்பான். இக் கொடுமைகளை அவள் எவ்வளவு நாளைக்குத்தான் பொறுப்பாள். தன் வயிற்றில் குழந்தையையுமல்லவா சுமக்கிறாள். இதனால் அக் குழந்தையையாவது நல்லபடியாக பெற்றெடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தாள். தன் கணவருக்குத் தெரியாமலேயே தன் பெற்றோரின் வீட்டுக்கு சென்றாள். அப்பாவோ படுத்தபடுக்கையில் கிடக்கின்றார். அம்மாதான் இட்லி சுட்டு வாழ்க்கையை ஓட்டிச்செல்கின்றாள். மீனாவும் இவர்களுடன் சேர்ந்து மிகவும் சிரமப்பட்டாள். மீனாவும் சும்மா இருக்கவிரும்பவில்லை. அம்மாவுடன் சேர்ந்து அவளும் உதவி புரிந்து வந்தாள். சில தினங்களில் ஒரு அழகிய ஆண்குழந்தைக்குத் தாயாகி என்றுமில்லா சந்தோசமடைந்தாள். இருந்தும் தன் குழந்தையை வளர்க்க மிகவும் சிரமப்பட்டாள்.

இச்சந்தர்ப்பத்திலேயே ஒரு அதிர்ச்சியான சம்பவம் இடம்பெற்றது. அது விபத்தொன்றில் குமார் இறந்த செய்தி. இது மீனாவுக்குப் பேரிடியாகவே இருந்தது. தனக்கு ஏற்பட்ட நிலையை எண்ணி எண்ணி அழுதுபுலம்பினாள். முன்பிருந்த அவளது அழகும் குறைந்து மெலிந்தும் போய் பார்ப்பவர்களுக்கு பரிதாபம் ஏற்படும் வண்ணம் காட்சியளித்தாள்.

வாழ்க்கையைத் தொலைத்துவிட்ட சோகத்தில் தனது எதிர்காலத்தைப் போக்கினாள் மீனா. தன்னுடைய மகளுக்குத் தன்னால்தான் இப்படியொருநிலை ஏற்பட்டது என்று மிகவேதனை அடைந்தார் இவளது அப்பா. இவர்களது வேதனையையும் கஷ்டத்தையும் கண்ணுற்ற ரவி, மீனாவை மறுமணம் செய்ய முன்வந்தான். ஆனால் தான் ரவிக்குக் துரோகம் செய்துவிட்டு இப்போது எப்படி அவருடன் வாழ்வது என்று நினைத்து மறுத்தாள் மீனா. ஆனால் தன் குடும்பத்தாரின் வற்புறுத்தலுக்காகவும், தன்னுடைய மகனுக்காகவும் ரவியை மறுமணம் செய்து கொண்டாள். தன் மகளுக்கு நல்வாழ்வு கிடைத்ததையிட்டு மிக்க சந்தோசமடைந்தார்கள் மீனாவின் பெற்றோர்கள். ரவி முன்பிருந்த கடையை விட மிகப் பெரிய கடை வைத்திருந்தான். பலருக்கு வேலை கொடுத்து முதலாளியாகவும் இருந்தான். சொந்தமாக வீடும் அவனுக்கு இருந்தது. அவ் வீட்டிலேயே மீனாவும், ரவியும் இருந்தனர். தங்களுடன் மாமனார் மாமியாரையும் வைத்திருந்தான் ரவி. அவர்கள் தான் செய்த பிழைக்கு ரவியிடம் மன்னிப்பும் கேட்டார்கள். ரவி எந்த வித குறையுமில்லாமல் மிக அன்பாகவும், பண்பாகவும் அவர்களுடன் பழகினான். தனது பெற்றோர்களைப் போன்று அவர்களைக் கவனித்து வந்தான.

அதுமட்டுமல்லாமல், மீனாவுக்கும் அவளுடைய குழந்தைக்கும் நல்ல கணவனாகவும், தகப்பனாகவும் இருந்தான். அவன் பழைய அந்த கசப்பான வாழ்க்கையை ஒருபோதும் மீனாவிடம் கேட்பதில்லை. இருவரும் புரிந்துணர்வுடனேயே வாழ்ந்து வந்தனர். செல்வச் செழிப்பில் தன்னுடைய பழைய வாழ்க்கையை முற்றாக மறந்து போனாள் மீனா. தனக்கு இப்படியொரு நல்ல கணவர் கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தவளாகவும் நல்ல மனைவியாகவும் இருந்தாள். இதன் காரணமாக ஒருவருடத்துக்குள் ஒரு அழகிய பெண்குழந்தையைப் பெற்றெடுத்து தந்தை என்ற அந்தஸ்தை நன்றிக் கடனாக ரவிக்கு வழங்கினாள் மீனா. இச்சந்தோசத்துடன் அவர்களது வாழ்க்கைப் பயணம் தொடர்ந்தது.

*யாவும் கற்பனை*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**ஆசை** என்பது இப்பரந்த உலகில் இன, மத, வயது வேறுபாடற்ற கொடியதோர் நோயாக, மனித மனங்களில் ஆழமாக வேரூன்றி விட்டதென்பதை யாரும் மறுக்கப் போவதில்லை. ஏனெனில், ஆசையானது அறத்தையே வளர்க்கும் நோக்கமாகிவிட்டால், உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் வாழ வழி காட்டியாக இருந்து விடும். ஆனால், அதற்கு மாறாக, மற்றைய அனைத்தினதும் அழிவுப் பாதையில் தன் வாழ்க்கைப் பயணம் தொடரவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் மனித இனம், ஆசையால் வரும் அனர்த்தங்களைப் பற்றிச் சிந்தித்தால் அறம் வளருமே!

*" அஞ்சுல தோரும் அறனே ஒருவனை*
*வஞ்சிப்ப தோரும் அவா "* குறள் - 866

அற உணர்வே ஒருவனை ஆசையுட்படாது செய்யும் அஞ்சி ஒதுங்கச் செய்யும், அவாவே அவனை தீமையுட் தள்ளுகின்ற வஞ்சனையைச்செய்யும்.

---

**யாழ்ப்பாணத்தில் ஒரு அநாமதேய அறிக்கைகூட மக்களைக்கட்டுப் படுத்துகிறதே, இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்?**

-வேலாயுதம், மானிப்பாய்.

“படுகொலை பதினொன்றும் செய்யும்” என்றுதான்.

**தலைநகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் சொன்னாலும் குண்டுதாரி குறிவைத்துத் தாக்கியுள்ளானே?**

-வி.பரமேஸ்வரன், வெள்ளவத்தை.

முதல் கேள்விக்குச் சொன்னதுபோல் “பணம் பத்தும் செய்யும்” என்பதால் தானோ!

**“சுப்பர் சொனிக் பூம்” சத்தத்தை நீங்கள் கேட்டீர்களா?**

-ஜீவன், மொரட்டுவை.

“சொனிக் பூம்மை” கேட்கவில்லை. போன வாரம் பாராளுமன்றத்தின் “பூம்”மைக் கேட்டேனே...

## சிந்தியா பதில்கள்

**ஜோசப் எம்.பி.யின் இடத்துக்கு சந்திரநேருவின் மகனை நியமிக்கவுள்ளதாக அறிந்தேன். உண்மைதானா?**

-கு.வேலாப்போடி, அக்கரைப்பற்று.

அந்த வெற்றிடத்துக்காக சிபாரிசு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டவர்களில் இவர் 23ஆவது நபர். இவரையாவது நியமித்தால் 23 மீண்டும் 22 ஆகும்.

**இங்கிலாந்தில் இலங்கை அணி தன் திறமையை நிரூபித்து விட்டதே, என்ன நினைக்கிறீர்கள்?**

-பி.தர்மசீலன், சிலாபம்.

எதிர்பார்க்காத வெற்றிகள் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும், மஹேல ஜெயவர்த்தன இராசியில்லாத கெப்டன் என்றவர்களுக்கு இது அதிர்ச்சி வெற்றிதான்.

**இலங்கையிலிருக்கும் அரசியல்வாதிகளில் யாருடைய பேச்சைக் கேட்கும்போது உங்களுக்கு அடக்கமுடியாத சிரிப்பு வரும்?**

-பொ.கருணாகரன், காசல்ரீ.

வடக்கு - கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்று பேசுபவர்களின் பேச்சையும், போர் நிறுத்த ஒப்பந்தத்தை நான் தான் செய்தேன் என்று கூறுபவரின் பேச்சையும் கேட்கும்போது.

**“பாரிஜாதம்” பார்த்துவிட்டீர்களா? எப்படி?**

-ம.சுபாஷினி, வவுனியா.

பாக்கியராஜின் கதை சொல்லும் ஆற்றல் மீது எனக்கு எப்போதும் நம்பிக்கை உண்டு. பாரிஜாதம் பார்க்கலாம்.

**சிந்தியா, எனக்கு சாத்திரம் தெரியும். உங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காகக் கேட்கிறேன். உங்களுக்கு என்ன பூ பிடிக்கும்?**

-சி.வரதராஜன், முள்ளிப்பொத்தானை.

“சிரிப்பு” ஹி...ஹி...ஹி...ஹி...

**ஒவ்வொருவரும் தாம்தான் தலைவர்கள் என்று கூறிக்கொண்டு தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்கிறார்களே, உண்மையான தலைவன் எப்படி இருக்க வேண்டும்?**

-ஜெ.சஞ்சீவன், மட்டக்குளி.

யாரை நினைத்துக் கொண்டு கேட்கிறீர்கள் என்று புரிகிறது. “பத்து வயது வரை சுதந்திரமாகவும், அதற்குப் பின் கட்டாயப்படுத்தலின்றி பத்து வருடம் விருப்பமாகக் கல்வி பயின்றும், அதன்பின் தத்துவஞானம் அறிய சுற்றுப்பயணம் செய்து மக்கள் வாழ்வை நேரடியாக அறிந்தும்...இப்படியாக ஐம்பது வயது வரை வாழ்வைப் படித்தவனே ஆட்சி செய்யத் தகுதி படைத்தவன். அவன் திருமணம் முடிக்கமாட்டான்; தாழ்போட்டு உறங்க மாட்டான். அவனுக்காக மற்றவர்கள் உழைப்பார்கள்; அவன் மற்றவர்களுக்காக உழைப்பான். அப்படிப்பட்ட சுயநலமற்றவனே தலைமைக்குத் தகுதியானவன்” என்று கிரேக்கத்தின் தத்துவஞானி பிளேட்டோ “குடியரசு” எனும் அரசியல் ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**சிந்தியா, பறவைக் காய்ச்சல் (Bird Flu) எலிக்காய்ச்சல் (Flack) வரிசையில் அதென்ன “சிக்கன் குனியா” என்ற புது வகை நோய் பரவுகிறதாமே?**

-தா.விஸ்வநாதன், கொழும்பு.

பறவைக் காய்ச்சலுக்கும் சிக்கன் குனியாவுக்கும் சம்பந்தமில்லை. இது தொற்று நோயுமல்ல, காய்ச்சல் வகைதான். இந்த நோய் வந்தால், மூட்டுக்களில் வலி ஏற்படும். நோய் இல்லாமல் போன பிறகும் இரண்டு மாதத்துக்கு இந்த வலிகள் இருக்கும். இந்தியா, இலங்கை போன்ற பக்கத்து நாடுகளில் இப்போது இனங் காணப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்கள். நுளம்புகளால் பரவுகின்றனவாம். 1953ஆம் ஆண்டு தான்சானியா நாட்டில் இந்த நோயைக் கண்டுபிடித்துள்ளார்கள். Swahili என்ற ஆபிரிக்கச் சொல்லை எப்படி சிக்கன் குனியா என்று மொழி பெயர்த்தார்களோ தெரியவில்லை. பகலில் நுளம்புகள் கடித்தால் டெங்கு மட்டுமல்ல, சிக்கன் குனியாவும் வருமாம். நுளம்புகள் பரவாமல் தடுக்க சூழலை சுத்தமாக வைத்துக் கொள்வதே தடுக்க ஒரே வழி.



பாரிஜாதம்

**மேஜர் ஜெனரல் பரமி குலதுங்கவின் படுகொலைக்குப் புலிகள் மீதுதானே குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்று கேட்டதுக்கு, இராணுவத்துக்குள் உள்முரண்பாடுகள் உண்டு; அதுதான் காரணம் என்று புலித்தேவன் பேட்டி கொடுத்தாரே! கேட்டீர்களா?**

-சி.தில்லைநாதன், தெஹிவளை.

மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைப் போட்டுத் தள்ளிவிட்டும் இதைத்தானே சொன்னார்கள். ஒரே பொய்யைத் தொடர்ந்து சொல்வது அவருக்கு சலித்துப் போகாவிட்டாலும், தொடர்ந்தும் கேட்க நமக்கு அலுத்துப் போய் விட்டதே...

**சிந்தியா, முரசுக்குப் போட்டியாக நான் ஒரு பத்திரிகை நடத்தப் போகிறேன், உங்கள் அபிப்பிராயம் என்ன?**

-கோ.பாண்டியன், நுவரெலியா.

“ஆயிரம் பூக்கள் மலரட்டும். கருவிகள் கொண்டு மோதாமல் கருத்துக்கள் கூடி மோதட்டும்” என்று வாழ்த்துவேன். ‘பாண்டியன்’ பத்திரிகை நடத்துவது - அதிலும் நடுநிலையாகப் பத்திரிகை நடத்துவது மகா கஷ்டம் என்பதை இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

**சிந்தியா ஜோக்?**

-மு.சுலோக்ஷனா, வெள்ளவத்தை.

நபர் - 1 :- குடிப் பழக்கத்தால எனக்கும் என் பொண்டாட்டிக்கும் தினமும் பிரச்சினையா இருக்குடா.

நபர் - 2 :- அப்புடினா கன்ராவி குடிப் பழக்கத்தை விட்டுவிட வேண்டியதுதானே?

நபர் - 1 :- எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் என் பொண்டாட்டி குடியை விடமாட்டேன்னு அடம்பிடிக்கிறாடா... (படித்தது)

---

# இலக்கிய நயம்

## காதல் கனியானதே!

**செ**ண்பகவல்லியின் காதலில் சிக்குண்டதனால், அவள் மேலுள்ள பாசம் அவனுடைய வீர உணர்வுகளுக்குத் தடை போட்டுவிடுமோ? என்றதோர் மனக்குழப்பத்தில் ஆழ்ந்திருந்த வேளையில், இரு காவலர்களுடன் அங்கு வந்த மாறன் புரவியை விட்டிறங்கினான்.

“ஏது? யோசனை வெகுதூரம் போய்விட்டதோ?” என்ற கேள்வி அருள்வர்மனின் செவியில் கணீரென்று ஒலித்த போதுதான், மாறன் அருகில் வந்து நின்றது, அருள்வர்மனுக்குப் புலப்பட்டது. அதுவரையில் அருள்வர்மன் அவர்களைக் கண்டுகொள்ளவில்லையென்றால் அவன் மனதில் என்றுமில்லாதவாறு குழப்பம் அலை மோதியதுதான் காரணம் என்பதை அவன் முகத்திலுள்ள வாட்டம் காட்டிக் கொடுத்துவிட்டது.

“நண்பா! எதைப்பற்றிய யோசனை? என்று கேட்பதை விட ஏன் யோசிக்கவேண்டும்? என்று கேட்பதுதான் பொருத்தமாக இருக்கும். உன்னுடைய நிலைமை எனக்குப் புரிகிறது. அதற்குத் தனிமையில் யோசிப்பதில் விடைகாண முடியாது. என்னிடங்கூடக் கூறமுடியாத விடயமா?” என்றான் மாறன்.

இதைக் கேட்டதும் அருள்வர்மன், மாறனுக்கு அருகில் நின்றிருந்த இருவரையும் ஒருமுறை பார்த்துவிட்டு மாறனைப் பார்த்தான். அருள்வர்மனின் நோக்கம் மாறனுக்குப் புரிந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாக மாறன் அவ்விருவரையும் திரும்பிப் பார்த்தவுடன் அவனருகில் நின்ற காவலர்கள் இருவரும் தாமாகவே விலகி, அப்பாற் சென்றனர்.

“நண்பா! உன்னுடைய மனக்குமுறல்கள் நியாயமானதுதான். ஆனால், நீ நினைக்குமளவிற்குச் சிக்கலானதல்ல” என்று மாறன் கூறியதும் அருள்வர்மன் மாறனை உற்று நோக்கினான். அவன் நெற்றியில் காணப்பட்ட சுருக்கம் “நீ என்ன சொல்கிறாய்?” என்பது போல் இருந்தது மாறனுக்கு.

மாறன் தொடர்ந்தான். “நண்பா! என்னைப் பற்றி நான் என்றுமே சிந்தித்ததில்லை. ஆனால் உன்னைப் பற்றிச் சிந்திக்காத நாளே இல்லை” என்று மாறன் கூறியதும், அருள்வர்மன் அவனை நன்றிப் பெருக்கோடு பார்த்தான். மாறன் தொடர்ந்தான்:

### தருவது கற்பகன்

“என்னோடு வந்திருக்கும் காவலர்கள் எதற்காக வந்தார்கள் என்ற வினா உன் நெஞ்சில் எழுவதுபோல் இருக்கிறது. அவர்கள் வேறு விசேட காரணங்களுக்காக வந்தவர்கள் அல்ல. உன் காதலியான செண்பகவல்லியிடமிருந்து ஓலை தாங்கி வந்தவர்கள்தான். இதோ அந்த ஓலை” என்று அருள்வர்மனிடம் ஓலையை நீட்டினான் மாறன்.

ஓலையைக் கண்டதும் அருள்வர்மனின் முகத்தில் ஓர் இனந்தெரியாத கலவரந் தோன்றிய பொழுது, அருகில் நின்ற மாறன் அருள்வர்மனின் முதுகில் மெல்லத் தட்டினான். அருள்வர்மன் மாறனின் முகத்தை ஏறிட்டான்.

“அவசரம் ஏதுமில்லை. ஆறுதலாகப் பார்க்கலாம்” என்றதும் அருள்வர்மனின் முகத்திலுள்ள கலவரம் சற்றுக் குறையத் தொடங்கியது.

ஓலையைத் தொடர்ந்து படித்து முடித்த அருள்வர்மனின் முகத்தில் தோன்றிய மாற்றத்தைக் கண்ட மாறனுக்கு தான் ஏதோ ஒரு செயற்கரிய செயலைச் செய்து முடித்துவிட்டது போன்ற, நிம்மதி ஏற்பட்டிருக்க வேண்டும். அதன் வெளிப்பாடாக நீண்டதோர் மூச்சு எழுந்து அடங்கியது.

அருள்வர்மன் ஓலையைப் படித்து முடிந்ததும், அவனையே கவனித்துக் கொண்டிருந்த மாறனின் முகத்தை நிமிர்ந்து



பார்த்தான். அந்தப் பார்வையில், ‘நான் போய் வரலாமா?’ என்ற கேள்வி ஏக்கங் கலந்ததோர் அர்த்தத்தைத் தாங்கி நின்றது.

அதைக்குறிப்பால் உணர்ந்த மாறன்...

“தடையேதுமில்லை. நீ போய்வருவதற்கான அனுமதியை ஏற்கனவே அரசரிடமிருந்து பெற்றுவிட்டேன்” என்று மாறன் கூறியதும்,

“நண்பா!” என்று அவன் இருகைகளையும் பற்றிய அருள்வர்மன் தன் மார்போடு அவனை அணைத்து தன் நன்றி கலந்த அன்பைப் பரிமாறிக் கொண்டான்.

அருள்வர்மனின் வெள்ளைப் புரவி மின்னல் வேகத்தில் வருவதைக் கண்ட செண்பகவல்லியின் முகம் கதிரவனைக் கண்ட செந்தாமரைபோல் மலர்ந்தது. அவளோடு நின்றிருந்த பூங்கொடி அருகிலிருக்கும் ஒரு பூஞ்செடிக்குள் மறைந்து கொண்டாள்.

புரவியை விட்டு இறங்கிய அருள்வர்மன், “செண்பகவல்லி! வெகு நேரமாகக் காத்திருக்கிறாயா?” என்ற கேள்வியோடு அவளை நெருங்கினான்.

“செண்பகவல்லி மட்டுமல்ல, நானும் உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்” என்றவாறு செடிமறைவிலிருந்த பூங்கொடி வெளியில் வந்தாள். இதைக் கேட்டதும் அருள்வர்மன் துணுக்குற்றுத்தான் போனான். அவன் அங்கு பூங்கொடியை எதிர்பார்க்கவில்லை என்பதால், பெண் குரலைக் கேட்டதும், ஒருவேளை செண்பகவல்லியின் தாயாராக இருக்குமோ என்ற எண்ணம் அவனை உலுக்கிவிட்டது. ஆயினும் பூங்கொடியைக் கண்டதும் ஓரளவில் மனதைத் திடப்படுத்திக்கொண்டு “ஓ...நீயா! நான் வேறு யாரோ என்று நினைத்துவிட்டேன்” என்றான்.

“ஏன்? நான் என்றவுடன் இளக்காரமோ?” என்றவள் தன் இடையில் இரு கைகளையும் ஊன்றிய வண்ணம் ஒரு படை அதிகாரியின் கம்பீரத்தோடு காட்சியளித்தாள்.

“மன்னிக்க வேண்டும். நீங்கள்தான் செண்பகவல்லியின் மெய்க்காப்பு என்பதை மறந்தே விட்டேன்” என்றான். அவன் பேச்சில் சிறிது ஏளனமும் தொனிப்பதை அறிந்த பூங்கொடி,

“செண்பகவல்லி! ஆண்கள் இருக்கின்ற இடத்தில் நமக்கென்ன வேலை? வாபோகலாம்;” என்றவாறு செண்பகவல்லியின் கையைப்பிடித்துக் கொண்டு போவதற்குத் தயாரானாள்.

அவர்களுக்கு முன்னால் கையை நீட்டித் தடுத்த அருள்வர்மன், “செண்பகவல்லி! யார் இந்தப் பெண்?” என்று முன்பின் அறியாதவன் போல் கேட்டதும், பதிலுக்குப் பூங்கொடியும். “செண்பகவல்லி! யார் இந்த மனிதர்? நான் இவரை இதுவரையில் கண்டதில்லையே” என்றாள். இதைக் கேட்டதும் அருள்வர்மன், “செண்பகவல்லி! இந்தப் பெண்ணுக்கு நான் யார் என்பதைச்சொல்லி விடு” என்றான் சற்று மிடுக்காக.

உங்கள் இருவரின் சண்டையில் என்னை ஏன் இழுக்கிறீர்கள்” என்று செண்பகவல்லி நழுவிக் கொண்டாள். செண்பகவல்லியின் வார்த்தையைக் கேட்டதும் அருள்வர்மன் செய்வதறியாது விழித்தான். ஆயினும் சமாளித்துக் கொண்டு, “யாரோ ஒருத்தரின் மனைவிக்கு வேறு ஒருத்தி பாதுகாப்பு என்பது ஆச்சரியமானதொன்றுதான்” என்றான் அருள்வர்மன். அவன் பேச்சிலுள்ள ஏளனம் மேலும் பூங்கொடியின் வாயைக் கிளறுவது போலிருந்தது.

“செண்பகவல்லிக்கு கணவன் இருப்பதாக யாரும் சொல்லவில்லையே!” என்றாள் பூங்கொடி.

“காதலனென்றால் கணவனாகப் போறவர்தான் என்பது தெரியாதவர்கள் போலிருக்கிறது. அனுபவக்குறைவுதான்;” என்றான் குத்தலாக.

“அனுபவந்தான் அப்பாவாகப் போகிறதே” என்ற பூங்கொடியை முறைத்துப் பார்த்தான் அருள்வர்மன்.

“தளபதியாரே! ஏன் முறைக்கிறீர்கள். செண்பகவல்லி தாயாகினால், தந்தையாகப் போவது நீங்கள்தானே!” என்றவள் லேசாக செண்பகவல்லியின் பக்கம் தன் பார்வையைத் திருப்பினாள். அதேவேளை அருள்வர்மனும் செண்பகவல்லியை நோக்கினாள். செண்பகவல்லி வெட்கத்தால் தலையைக் குனிந்து கொண்டாள். அருள்வர்மனுக்கு எனன பேசுவதென்றே புரியாமல் விக்கித்து நின்றுவிட்டான். மௌனம் நீடிக்கவில்லை, பூங்கொடியே தொடர்ந்தாள்.

“ஏன் தளபதியாரே! மௌனமாகிவிட்டீர்கள்? காதலித்தால் மட்டும் போதுமா? கண்ணீரோடு காத்திருக்கும் கன்னியரின் நிலைமை காதலிப்பவர்களுக்குப் புரிவதில்லையே! அதனால் தானோ என்னவோ இப்படி ஒரு சோதனை வந்து விடுகிறது. செண்பகவல்லி உங்கள் காதலி தானே? அப்படியென்றால் அவளைக் கடி மணம் செய்து கொள்ள நீங்கள் தயார் தானே?” என்றதும், அருள்வர்மன் பதிலேதும் கூறாது நிற்பதைக் கண்ட பூங்கொடி, “ஏதோ தோழி என்ற முறையில் எனக்கிருந்த கட்டாயக் கடமை. அதை நான் முடித்துவிட்டேன். இனி உங்கள் இருவரின் முடிவும் மங்களமாக எனது வாழ்த்துக்கள்” என்று கூறிவிட்டு விடைபெற்றாள்.

*“கண்ணிறைந்த காரிகைக் காம்பேர் தோட்பேதைக்கு*
*பெண்ணிறைந்த நீர்மை பெரிது.”*

(அதி. 128. குறள் : 1272.)

## மனித உரிமை......
16 ஆம் பக்கத் தொடர்ச்சி....

கள்ளச் சாராய கும்பல் மீது புகார் கொடுத்த அப்பெண்ணின் கணவர் குற்றவாளி ஆக்கப்பட்டார். பிக்பாக்கெட் குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டவரோடு அவரது வீட்டுப் பெண்களும் காவல் நிலையத்துக்கு இழுத்து வரப்பட்டனர். அந்தப் பெண்களின் தொடைகளில் ஏறி நின்று லத்திகளால் பின்புறம் அடித்து, குற்றத்தை நிரூபிக்க பொலிஸார் கடமை ஆற்றினர். எங்களை அடித்தாலும் பரவாயில்லை. தொடை மீத ஏறி நிற்காதீர்கள் என்று கண்ணீர் மல்க வேண்டுகோள் வைத்தனர் அந்தப் பெண்கள்.

அதேபோல், ஆட்டோ டிரைவர் ஒருவரை விசாரணைக்காகக் காவல் நிலையம் அழைத்துப் போய், விசாரணை என்கிற பெயரில் அவரது கையையே உடைத்துவிட்டனர். பிறகு அவர் குற்றமற்றவர் என்று கண்டுபிடித்து, அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தது பொலிஸ். ஆட்டோ ஓட்டிப் பிழைக்க முடியாமல் அவரது வாழ்க்கையே கேள்விக்குறி ஆகிப்போனது.

மீடியாவின் கண்களுக்கு உச்சகட்ட வன்முறைகள்தான் தெரியும். 'பேய் ஆட்சி செய்தால்", பிணம் தின்னும் சாத்திரங்கள் என்னும் வரிகளை, பொலிஸ் ஆட்சி செய்தால், பிணமாகும் மனித உரிமைகள் என மாற்றி எழுதலாம்.

சித்ரவதை, பாலியல் பலாத்காரம், அடிதடிகள் போன்றவற்றோடு மட்டுமே மனித உரிமையின் சம்பந்தம் முடிந்து விடுவதாக நினைக்கிறோம். குழந்தைத் தொழிலாளர் கொடுமை ஒழிந்து, அனைத்துக் குழந்தைகளுக்கும் சமனான கல்வி வழங்கப்படவேண்டும் என்கிற குழந்தைகளின் உரிமையும், தன் உடல் மீதும் வாழ்வு மீதும் அத்துமீறல் செய்வதைத் தடுக்கக்கோரும் பெண்ணுரிமையும், சாதி, மதம், இனம், மொழி, நிறம் போன்ற வேறுபாடுகளுக்கு எதிராக, உன்னைப்போல நானும் மனிதன்தான். என்னை வேறுபடுத்தித் துன்புறுத்துகிற அதிகாரம் உனக்குக் கிடையாது என்று போராடுகிற உரிமையும்கூட மனித உரிமைக் குரல்கள்தான். மனிதனாகப் பிறந்த எவரின் அடிப்படை வாழ்வு உரிமைகள் பாதிக்கப்பட்டாலும் அது மனித உரிமை மீறலே! எங்கள் மக்கள் தொகைக்கு சமூகத்தின் எல்லாத் தளங்களிலும் இட ஒதுக்கீடு வேண்டும் என்று கேட்பதும் மனித உரிமை சம்பந்தப்பட்டதுதான். அந்த உரிமையை மறுத்தோ, எதிர்த்தோ போராடுகிறவர்களை பொலிஸ் தன் லத்திகளால் மூர்க்கத்தனமாக அடக்க நினைப்பதுகூட மனித உரிமைகளுக்கு விரோதமான செயலே!

காவல்துறை அதிகார வர்க்கங்களாவ் மனித உரிமை மீறப்பட்டால், அதை முறைப்படி எப்படி எதிர்த்துப் போராட வேண்டும் என்று பலருக்குத் தெரியவில்லை. காவல் நிலையத்தால் துன்புறுத்தப்பட்டவர்களுக்கு மாவட்ட எஸ்.பி.யிடம் புகார் சொல்ல முடியும் என்பது தெரியாத பட்டதாரிகளே கூட இருக்கிறார்கள். துன்புறுத்தல் நடந்த நாள், நேரம், இடம் போன்ற சரியான தகவல்களை ஆவணப்படுத்தி ஒரு புகார் மனு எழுதத் தெரியாமல் தவிக்கிறோம். இதையெல்லாம் பள்ளி, கல்லூரிகளில் சொல்லிக்கொடுத்து விழிப்பு உணர்வு ஏற்படுத்துவது அவசரத் தேவை.

சாதி, மதம் பார்க்காமல், வேறு எந்தப் பிரிவினைக்குள்ளும் மனிதனைத் தள்ளாமல் சமமாக நடத்துகிற மனித உரிமைக் கல்வியை, கட்டாயம் பள்ளிகளில் ஒரு பாடமாகக் கொண்டுவர வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள், மாநில மனித உரிமை ஆணையத்துக்குப் புகார் அனுப்பித் தீர்வு தேட முடியும். ஆனால், தனிமனிதர்களாக அரசு அமைப்புகளை எதிர்த்துப் போராடுவது இயலாத காரியம். கூட்டு முயற்சிதான் மனித உரிமைகளை மீட்டுத் தரும். நம்பிக்கை மிகுந்த மனித உரிமை அமைப்புகள், பெண் இயக்கங்கள், தொழிற்சங்கங்கள் போன் மக்கள் திரளான அமைப்புகளின் உதவியோடு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். பக்கத்து வீட்டுக் காரரை பொலிஸ் கைது செய்தால் எனக்கென்ன? என்று இருக்காமல், முறையான விசாரணை மேற்கொள்ளப்படுகிறதா என்பதை எல்லோரும் கவனிக்க வேண்டும். அதையும் தனி மனிதனாகச் செய்ய வாய்ப்பில்லை என்பதால், ஒவ்வொரு ஏரியாவுக்கும் ஒரு 'விஜிலென்ஸ்" குழு அமைக்கப்படலாம். குறிப்பாக, கிராமங்களில் இந்த முறை வழக்கத்துக்கு வர வேண்டும். இப்படி தொடர்ச்சியான முயற்சிகளின் மூலம்தான், நாம் நமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

உரிமைகளோடு வாழ்ந்தால்தான், நாம் மனிதர்கள். உரிமைகள் அற்றவர்களுக்கு வரலாறு தந்த பட்டம் அடிமைகள்!

நாம் மனிதர்களாக வாழப் போகிறோமோ, அல்லது அடிமைகளாகவா?

*நன்றி :- ஆ.வி.*

## மக்கள் நலம் .........
3ஆம் பக்கத் தொடர்ச்சி....

பற்றியும் அவர்கள் அதிக கவனஞ் செலுத்த வேண்டும். மக்கள் பணியின்போது எதிர்கொள்ளும் தடைகள், சிரமங்கள் எதிர்பார்ப்புகள் பற்றிச் சமுர்த்தி முகாமையாளர்கள் ஊடாக எழுத்து மூலம் எனது கவனத்துக்குக் கொண்டு வந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்க நான் தயாராகவுள்ளேன்." என்று கூறினார். கடந்த 24ஆம் திகதி வேலணை மத்திய மகா வித்தியா லயத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையில், மக்கள் முன்வைத்த பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காணப்பட்டன.

தீவக மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணும் முகமாக நடமாடும் சேவை யொன்றினை எதிர்வரும் இரண்டாம் திகதி நடத்துவதற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திட்டமிட்டுள்ளார். தீவக மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளான கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, குடிநீர், மின்சாரம் உட்பட அனைத்துப் பிரச்சினைக ளுக்கும் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று அமைச்சர் தெரிவித்துள்ளார். இதற்கெனச் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளும் அன்றைய தினம் நடமாடும் சேவையில் பங்கு பற்று வார்கள். ஏற்கனவே கடந்த 24ஆம் திகதி வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் நடமாடும் சேவை யொன்று நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை சார்ந்த விடயங்கள் சம்பந்தமாகவும் யாழ்.கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் பல நடவடிக்கைகளை அமைச்சர் மேற்கொண்டு வருகிறார்.

## வடக்கின் இயல்பு.........
5ஆம் பக்கத் தொடர்ச்சி....

இதற்கு அடுத்த கட்டமாக உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களின் அதாவது, வலிகாமம் வடக்கு, காங்கேசன்துறை, மாவிட்டபுரம், பலாலி, கீரிமலை, வீமன்காமம், மாதகல் ஆகிய பகுதிகளிலுள்ள மக்களின் பிரச்சினை குறித்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரச உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். இந்த மக்கள் இப்போது தற்காலிகமாக சக்கோட்டை, பொலிகண்டி, இன்பருட்டி ஆகிய பகுதிகளில் வாழ்கின்றனர். அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் வாழும் இந்த மக்களின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண்பதற்கு ஏதுவான நிலை யாழ்ப்பாணத்தில் இல்லை.

இனப்பிரச்சினையும், படைத்தரப்புக்கு எதிரான தாக்குதலும் தொடரும் போது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த காரணங்களால் இந்த மக்களின் நிரந்தரக் குடியேற்றம் தாமதப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி இந்த மக்களைத் தொடர்ந்தும் அவலமாக விட முடியாது என்பதால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்துக் கொண்ட முயற்சியால் தென்மராட்சியில் உள்ள அரச காணிகள் இனங் காணப்பட்டு, அந்தக் காணிகளில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு அம்மக்கள் குடியமர்த்தப்பட வேண்டும் எனவும் பின்னர், வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் அப்புறப்படுத்தப்பட்ட பிறகு அங்குள்ள அந்தக் காணிகளையும் வீடுகளை இந்த மக்கள் தமது சொந்தமாக்கிக் கொள்ளவும் முடியும் என்ற திட்டத்தை அமைக்க முன்வைத்தார்.

அதாவது, தற்போதிருக்கும் அவலமான வாழ்விலிருந்து மக்களை மீட்டு தென்மராட்சியில் சொந்தக் குடியமர்த்தலைச் செய்வது பின்னர் நிலைமைகள் சீரடையும்போது சொந்த இடங்களையும் மக்களுக்கு வழங்குவது - அப்போது இரண்டு இடங்களும் அந்த மக்களுக்குச் சொந்தமானதாகும். இந்த யோசனைக்கு அந்த மக்களும் அரச அதிகாரிகளும் சம்மதித்தபோதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும், புலிகளும் எதிர்த்தும் தடுத்து வருகின்றனர்.

அவர்களைப் பொறுத்தவரை இந்த மக்களின் அவலங்களைப் பயன்படுத்தி உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றும் வரை இந்த மக்கள் இதே நிலையிலேயே இருக்க வேண்டும் என்பதாகவே இருக்கிறது. மக்களை சாகவும் விடாமல், வாழவும் விடாமல் சுயலாபம் தேடும் இயல்நிலையின் எதிரிகளுக்கு இந்த ரெண்டும்கெட்ட நிலை அவசியமாகிறது. இராணுவத் தரப்பு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யோசனைகளை வரவேற்றுள்ளது.

படையினர் மீதான தாக்குதல் இல்லாதவிடத்தும், இனப்பிரச்சினைக்கு சுமுகமான சூழல் உருவாகாத விடத்தும், உயர் பாதுகாப்பு வலையங்கள் தவிர்க்க முடியாததாகவே இருக்கப் போகின்றன. மேற்குறிப்பிட்ட விடயங்களில் சுமுக நிலை ஏற்படுமானால் உயர் பாதுகாப்பு வலயத்தின் தேவை தானாகவே இல்லாது போய் விடும். இந்த யதார்த்தத்திலிருந்து பார்க்கும்போது புலிகள் மேற்கொண்டுவரும் தாக்குதல்களும் போருக்கான தயாரிப்புகளும் தற்போதைய நிலையை மாற்றத்துக்கு உட்படுத்தப் போவதில்லை. அவ்வாறாயின் இந்த மக்களின் நிரந்தர வாழ்க்கை கேள்விக் குறியாகவேதான் இருக்கப் போகிறதா? புலிகள் இதைத்தான் விரும்புகிறார்களா? என்ற கேள்விகள் மேலெழத் தொடங்கியுள்ளன.

அடுத்ததாக யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை சுனாமிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளும், அரச கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குள்ளும் இருக்கின்றனர். வடமராட்சி வடக்கு, அரச கட்டுப்பாட்டுப் பகுதியாகவும், வடமராட்சி கிழக்கு அரச கட்டுப்பாடற்ற பகுதியாகவும் இருக்கின்றன.

வடமராட்சி வடக்கில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு போன்ற பகுதிகள் சுனாமியால் தாக்கப்பட்ட போதும் குடியிருப்புகள் மற்றும் நிரந்தர சேதங்கள் என்பன குறைவாகவே உள்ளன. ஆனால் வடமராட்சி கிழக்கில் நாகர் கோவில், வெற்றிலைக் கேணி, தாழையடி, உடுத்துறை போன்ற அரச கட்டுப்பாடற்ற பகுதிகள் பெரும் சேதங்களுக்கு உள்ளாகியிருந்தன. இங்கு பெரிதும் குடியிருப்புகளே சேதமடைந்தன. தவிர, இரு பகுதிகளிலும் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தரக் கட்டமைப்புகள் இதுவரை சரியாக முன்னெடுக்கப்படவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் முழு மூச்சாக உதவும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இதற்கு உதாரணமாக அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் இதுவரை 170 நிரந்தர வீடுகள் மக்களிடம் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு பகுதி மக்களுக்கும் உலர் உணவுப் பொருட்களை அரசு வழங்கி வருகின்றது. ஆனாலும், அந்த மக்கள் சுயமாகத் தொழில் செய்வதில் பிரச்சினைகள் தொடர்ந்து வருகின்றன. புலிகள் கடற்பகுதியில் படையினரின் படகுகளைத் தாக்கி அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுட்டுவருவதும், அதற்கான திட்டங்களைத் தீட்டிவருவதுமே படைத்தரப்பு கடல் நடமாட்டங்கள் தொடர்பில் கட்டுப்பாடுகளை மேற்கொண்டு வருவதற்கான காரணங்கள். இது கடற் தொழிலை நம்பி வாழும் மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதே நிலை தற்போது மன்னாரிலும் தோன்றியுள்ளது. பேசாலையில் கடற்படையினரின் முகாமை புலிகள் தாக்கியதைத் தொடர்ந்து மன்னார், பேசாலை, பள்ளிமுனை கடற்பகுதியில் மீன் பிடித்தொழில் செய்வது இன்னும் தடை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நாளாந்தம் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் மக்களுக்கு ஒரு வழியைக் காட்டும் முயற்சியாகவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பணியாற்றி வருவதாகவும் இந்த ஆறாம் மாதத்தில் மட்டும் சுமார் எட்டாயிரம் முதல் பத்தாயிரம் வரையான மக்களை அமைச்சர் நேரடியாகச் சந்தித்துள்ளதாகவும் பதிவுகள் மூலம் அறியமுடிகிறது.

எனவே மக்கள் தேவைகளைச் சுமந்து கொண்டும், நெருக்கடிகளை எதிர்கொண்டும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கையில், கிளைமோர், கைக்குண்டு, துப்பாக்கிப் பிரயோகம், படுகொலைகள், ஹர்த்தால், பணிப் புறக்கணிப்பு என்று மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குழப்பும் செயற்பாடுகளைப் புலிகள் நிறுத்த வேண்டும் என்பதையும், தாம் இனியும் ஒரு போரை விரும்பவில்லை என்பதையுமே அமைச்சரைச் சந்திக்கும் மக்கள் வெளிப்படுத்தி வருகின்றனர்.


"பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்ற நிலையிலுள்ள பொதுமக்களின் வாழ்வில் சுபிட்சத்தைத் தாம் தோற்றுவிக்க முடியாது போனாலும், அதற்கு வேட்டு வைக்கும் மக்கள் விரோதச் செயற்பாடுகளையாவது தயவு செய்து சம்பந்தப்பட்டவர்கள் நிறுத்திக் கொள்வது அவசியமாகியுள்ளது.

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## அபார வெற்றி

**இலங்கை** - இங்கிலாந்து கிரிக்கட் அணிகளுக்கிடையில் இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் ஐந்து ஒரு நாள் போட்டிகளில் இலங்கை அணி மூன்று போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளதால் மூன்றுக்கு பூஜ்ஜியம் என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியுள்ளது. எஞ்சியிருக்கும். இரண்டு போட்டிகளிலும் போராடவேண்டிய கட்டாயம் இலங்கை அணிக்கு இல்லை. இந்த ஒரு நாள் போட்டிகளுக்கு




முன்னர் இவ்விரு அணிகளுக்குமிடையில் நடைபெற்ற இரண்டு டெஸ்ட் போட்டிகளை இரு அணிகளும் வெற்றி தோல்வியின்றி சமன் செய்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.




முதலாவது ஒருநாள் போட்டி பெரும் போராட்டமாக இரு அணிக்கும் அமைந்தது. இரண்டாவது, மூன்றாவது போட்டிகளே சுவாரஸ்யமான போட்டிகளாக அமைந்தது. இரண்டாவது போட்டி, 20.06.06.நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஜெயசூரியா அடித்த சதம் வெற்றிக்கு உதவியது 2 சிக்ஸர்,11 பௌண்டரிகள் அடங்கலாக 122 ஓட்டங்களை எடுத்தார். இது அவரது 20 ஆவது சதமாகும். இலங்கை அணி மொத்தமாக 319 ஓட்டங்களைப் பெற்றது.பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 273 ஓட்டங்களுக்குச்சுருண்டது.

மூன்றாவது போட்டியில் மஹேல ஜெயவர்தன ஆட்டமிழக்காமல் 126 ஓட்டங்களைப் பெற்றதும், சங்கக்கார 58 ஓட்டங்களைப் பெற்றார். இரண்டு விக்கட் இழப்புக்கு 265 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றது. முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 7 விக்கட் இழப்புக்கு 261 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வி கண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## தற்கொலைக் குண்டின் .......
3ஆம் பக்கத் தொடர்ச்சி....

தடுக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கிறது. தற்கொலைத் தாக்குதல் களையடுத்து வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களுக்கு கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் வீடுகளை வாடகைக்கு விட மக்கள் தயங்கு வதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன. யுத்த நிறுத்த காலத்துக்கு முந்திய பாதுகாப்பு நடவடிக்கைகள் மீண்டும் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரி வித்தார். தமிழ் மக்களைப் பொலிஸ் நிலையங் களில் பதிவு செய்யும் பழைய முறை மீண்டும் அமுல்படுத்தப்படுமா? என்று கேட்டபோது, இதுவரை அது சம்பந்தமான முடிவெதுவும் எடுக்கப்படவில்லை. நிலைமைகள் மோச மடையும் பட்சத்தில் சகல விதமான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியேற்படும் என்றும் அவர் சொன்னார்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 5, கூட்டெண் - 8

5, 14, 23, போன்ற திகதிகளில் பிறந்து திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண் 8 வருமேயானால் புதன், சனி ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்கு சுமாரான உயரமுள்ளவராகவும் காட்சியளிப்பர். இயற்கையிலே மனத்திடம் பெற்ற இவர்கள், தான் எந்தக் காரியத்தில் இறங்கினாலும் செய்து முடிவுக்கும் வரை, அயராது உழைப்பர். சிலர், ஆரம்பத்திலேயே வசதி படைத்தவர்களாகவும், இன்னும் சிலர் இளமையில் இருந்து போராடி, தன் தனித்திறமையால் உயர்ந்த நிலைக்கு வருபவராகவும் இருக்கின்றனர்.

பொதுவாக உத்தியோகத்தில் உள்ளவர்கள்கூட பெரும் பணம் சம்பாதிக்கும் திட்டங்களைப் போட்டும், தன் வருமானத்தை உயர்த்த வழி தேடுவர். பெயர் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமையப் பெற்றவர்கள் தொழிலாலும், உத்தியோகத்தாலும் உயர்நிலையை அடைந்து வீடு, வாகனம், நிலம் போன்ற அனைத்து வசதிகளும் பெற்று வாழ்கின்றனர். ஆனால் பெயர் பொருத்தமின்றி அமையப் பெற்றவர்கள் வாழ்க்கையில் ஏறவும் இறங்கவுமாக இருக்கின்றனர். இதனால் தனது பெயரை பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

இந்த எண்ணிக்கைக்காரர்கள் இயற்கைக் காட்சிகளையும், புதுமையான தொழில்கூடங்களையும் கண்டுகளிப்பதில் ஆர்வம் உள்ளவர்கள். இவர்கள் எங்கு சென்றாலும், எந்த ஒரு புதிய பொருளைப் பார்த்தாலும் அதைப்பற்றி ஆராய்ந்து இரசித்துக் கொண்டிருப்பர். இரும்பு சம்பந்தமான பொருள்கள் அனைத்தும் இவர்கள் மனதைக் கவரும். தன் வாழ்க்கையில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற குறிக்கோளோடு அயராது உழைத்துக் கொண்டிருக்கும் இவர்கள், வாழ்க்கையின் உச்ச ஸ்தானத்தை அடைவர். இவர்களை Mechanical Mind Man என்று அழைத்தால் பொருந்தும். இவர்கள் யாரும் புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிராக விளங்குவர்.

பலருக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்ட இவர்கள் தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவுவர். ஆனால் முடியாத காரியத்தை முடியும் என மிகைப்படுத்திக் கூறமாட்டார். எல்லோரும் இவரை விசயமானவர் எனக் கூறுவர். சாதாரண மனிதராக இருந்தால்கூட இந்த எண்ணிக்கைக்காரர்கள் பலர் போற்றும் மனிதராக வாழும் வாய்ப்புள்ளது. ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் அவர்கள் நினைக்கின்ற திட்டமெல்லாம் நடைபெறாது. இதனால் பெயரைப் பொருத்தமானதாக அமைத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

பிறருக்காக எந்தக் காரியத்தில் இறங்கினாலும் தைரியமாகச் செயல்பட்டு, வெற்றியைத் தேடிக் கொடுப்பர். ஆனால் தனக்கென்று ஒரு காரியத்தில் இறங்கும்போது சிறிது மனம் குழம்புவர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்து விடுமேயானால் பல விஷயங்களில் வெற்றியே பெறுவர். தொழில் செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர்கள், தான் பெரிய தொழிலைச் செய்து பெரும் பணம் ஈட்ட வேண்டுமென்று ஓடோடி உழைப்பர். உத்தியோகம் பார்க்கும் சிலர் தன் வருமானம் தனக்குப் போதவில்லையென்று, வேறு ஏதாவது தொழில் செய்து பொருளீட்ட ஆர்வமாக இருப்பர்.

சட்டம், சமயம், கணிதம், சோதிடம், கலை போன்றவற்றில் இவர்களுக்கு ஆராய்ச்சி இருக்கும். தூர தேசப் பயணங்களை மேற்கொள்ளும் இவர்கள், ஒவ்வோரிடத்திலும் என்ன பொருள் கிடைக்கிறது. அதை நாம் வியாபாரம் செய்து பொருளீட்ட முடியுமா? என்று சிந்தனை செய்வர். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கும் இவர்கள் ஓய்வெடுக்க நினைத்தால் முழுச் சோம்பேறி போல் இருப்பர். என்றும் இவர்களுக்கு ஆண்டவன் அருள் உண்டு. எல்லாப் பழக்கவழக்கங்களையும் பழகி அனுபவித்து விட்டுவிடுவர். பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குப் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமைந்துவிட்டால் எல்லாவிதமான வளமும் பெற்று சுகமான வாழ்க்கையை அனுபவிப்பர்.

**தொழில்**

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு இரும்பு, தங்கம், வெள்ளி சம்பந்தமான அனைத்துத் தொழிலும் உகந்தவையே. அத்துடன் கமிஷன், காண்ட்ராக்ட், மின்சாரம், வாகனம் சம்பந்தமான தொழில் அனைத்தும் வெற்றி அளிக்கும்.

**நோய்**

புதன், சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு வயிற்றுக் கோளாறு, முதுகுவலி, மூட்டுவலி, கண், காது வலி, இரத்தக் கொதிப்பு, மூல வியாதி போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை :**

புதன், சனி ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு சுக்கிரன், புதன் ஆதிக்கமான 6, 15, 24, 33, 42, 60, 69, 14, 23; 32, 41, 50, 59, 77 போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண் - 5, 6, 1.
யோகமான திகதிகள் - 5, 14, 23; 6, 15, 24; 1, 10, 19, 28.
யோகமான மோதிரக்கல் - வைரம், ஜிர்கான்.
யோகமான நிறம் - நீலம், சாம்பல் நிறம்.
ஆகாத நிறம் - கறுப்பு, சிவப்பு.
ஆகாத திகதிகள் - இல்லை.

அடுத்த வாரம் பிறப்பெண் 5, கூட்டெண் 9 பற்றிப் பார்ப்போம்.

# வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற எட்வர்ட் - டி - வேர் (கி.பி. 1550 - 1604 நூற்றாண்டு)

சென்றவாரத் தொடர்ச்சி

**டி-வேர்** தமது அடையாளத்தை மறைத்து வைத்ததற்கான முழுக் காரணத்தை நாம் அறிந்திருந் தாலும், இல்லாவிட் டாலும், மற்ற அனைத்து அம்சங்களிலும் அவர் சேக்ஸ்பியரின் தகுதிப்பா டுகளுக்கு முழுவதுமாகப் பொருந் துகிறார். அவருக்கு நெருக்கமாக வேறெ வரும் வரவில்லை! என வே, என்னைப் பொறுத்தவரையில், அவர் தான் எழுத்தாளர் என்பதை உறுதி யாக நம்புகிறேன்.

இங்கு கடைசியாக ஒரு கேள்வி எழுகிறது; "நாடகங்களை எழுதியவர் சேக்ஸ்பியர்தான் என்று கருதும் எண்ணம் அப்போது தோன்றியது?" சேக்ஸ்பியர் கால மான சில ஆண்டுகளுக்குப் பின் கூறப்பட்ட ஐயப்பாடான மூன்று குறிப் புகளிலிருந்து இந்த நம்பிக்கை தோன்றியது எனலாம்.



யாரேனும் ஒருவர் வேண்டுமென் றே இந் தக் கட்டுக் கதையை இட்டுக் கட்டியிக்க வேண் டும். இத னைச் செய்தவர் யார்? ஏன் செய்தார்?

இந்தக் கேள்விக்கு திட் டவட்டமாக பதில் கிடைக்குமெனத் தோன்றவில்லை. ஆனால், இதற்கு ஒரேயொரு விளக் கம் மட்டுமே இருக்க முடியும். அதா வது , டி-வேர் படைப்புகளின் முழுத் தொகுப்பினை வெளி யிடவும், அவருடைய அடையாளத்த இரக சியமாக வைத்திருக்கவும் அவருடைய குடும்பத்தினர் (1620இல்) முடிவு செய்த போது, அவரது குடும்பத்தினர் தான் இதனைச் செய்திருக்கவேண்டும். அதாவது,வீண் வதூறுகளைத் தவிர்ப் பதற்காக இவ்வாறு செய்திருக் கலாம். (அரசியாருக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுதல் போன்ற வேறு நோக்கங்களும் இருந்திருக்கலாம்). இந்த ஏமாற்று வேலையை முழுமையாகச் செய்வதற்காக, வேறொரு ஆளை முதலாவது இருமடிப் பதிப்புக்கு ஒரு முன்னுரைக் கவிதை எழுதிய பென் ஜான்சன், அதன் எழுத்தாளர் ஸ்டிராட் ∴போர்ட் - ஆன் - ஆவோனைச் சேர்ந்தவர் என்று குறிப்பாகத் தெரிவிக்கும் ஓரிரு தெளிவற்ற வரிகளைச் சேர்க் கும்படி வலியுறுத்தப்பட்டார். சேக்ஸ்பியரின் கல்லறைக்கு அருகே, பாராட்டுரைகளை கல் லறை வாசகமாகக் கொண்டு ஒரு நினைவுச் சின்னத்தை நிறுவவும்

## உலகை வியக்க வைத்தவர்கள்

எழுத்தாளராக முன்னிலைப் படுத்த அவகள் முடிவு செய் தார்கள். பெயர் ஒற்றுமை காரண மாக சேக்ஸ் பியரை அவர் கள் தேர்ந்தெடுத் தார்கள். மே லும், அவர் பல ஆண்டுகளுக்கு முன்பே இறந்து விட்டதால், அவ ரால் இந்த மோசடி அம்ப லமாக வழியில் லை. அத்துடன், லண்டனில் அவர் நன்கறி யப்படாதவர் என்பதாலும், அவரை யாரும் நினைவில் வைத்திருக் கவில்லை என்பதாலும், இந்தக் கட்டுக் கதை போலியானது என்பதை நகரிலுள் ளவர்கள் அறிந்து கொள்ளமாட்டார்கள்.

இந்தப் போலிச் செய்தியைக் பரப்புவதும் எளிதாக இருந்தது. அவர்கள் ஏற்பாடு செய்தனர். வில் லியம் சேக்ஸ்பியரின் அடையாளம் எப்போதுமே இரகசியமாக வைக்கப்பட்டி ருந்தமையால், அவர் ஸ்டிராட் ∴போர்ட்டைச் சேர்ந் தவர்தான் என்று கூறும் ஒரு சில குறிப்புகளே இந்தக் கட்டுக் கதையை பரப்புவதற்குப் போது மானதாக இருந்தது. இந்த கதை சரியானது தானா என்று கவனமாக ஆராய்வதில் அந்தக் காலத்தில் எவரும் ஆர்வம் காட் டவில்லை. (இலக்கிய வாதிகளின் வாழ்க்கை வரலாற்றில் இன்று போல் அன்று யாரும் ஆர்வம் கொண்டி ருக்கவில்லை). சேக்ஸ் பியரின் வாழ்க்கை வரலாற்றை முதலில் 1709இல் வில்லியம் ரோவ் என்பவர் எழுதினார். அந்த நூல் வெளி வருவதற்குள், உண் மையை அறிந்தவர்கள் மாண்டு மறைந்து போனார்கள்; சேக்ஸ்பியர் பற்றிய கட்டுக்கதை நம்பிக்கையுடன் ஏற்கப் பட்டு விட்டது.

**அடுத்த வாரம் ஆபிரகாம் லிங்கனின் வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



வணக்கமுங்கோ!

**நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**

**வ**டிவேலை மட்டுமா பேட்டி காண்பீங்க, இந்த விவேக்கை மறந் துட்டீங்களான்னு தொலைபேசியிலேயே தொல்லை பண்ணுறாருங்க. நமக்கென்ன பேசிட்டாப் போச்சுன்னு விவேக்கிட்டையே கேட்டுட்டோமில்ல...

**கா.பூ.** :- வணக்கம், சின்னக் கலை வாணர் விவேக்.

***விவேக்*** :- என் அன்புக்கும் பாசத் துக்குமுரிய தமிழ் பேசும் மக்களே.

**கா.பூ.** :- என்ன என்னைப் பாத்து மக்க ளேங்கிறீங்க?

***விவேக்*** :- ஆஹா...சைக்கிள் கேப்பில என்னையே மடக்கிப்புட்டியளே. அது பாருங்கோ, சிங்கிளா இருந்தாத்தான் சிங் கம்...பட்டியா இருந்தா அது பன்னி...நீங்கள் சிங்கிளா இருந்தாலும் சிங்கமில்லையா. அதுதான் ஏதோ... ஒரு ஞாபகத்தில அப்புடிச் சொல்லிப்புட்டேன்...சிலோன்காரர் நீங்க சின்னத் தவறுகளையெல்லாம் கண் டுக்க மாட்டீங்களோன்னு நெனச்சுட்டேன். அதுசரி...அவர் தமிழ்ச்செல்வன் மட்டும் சிங் கிளா நின்னுகிட்டே மக்கள் மக்கள்னு மடக் கிக் குத்துறாரு அதையெல்லாம் கண்டுக்க மாட்டீகளே...

**கா.பூ.** :- அதென்ன சின்னத் தவறு, பெரிய தவறுன்னு... தவறு தவறு தானுங்களே...?

***விவேக்*** :- ரொம்ப சினிமா பாப்பியளோ? சுஜாதா அந்நியனில எழுதின மாதிரியே கேக்குறீங்களய்யா. முதலில சங்கருக்கு சொல்லணுமய்யா. இனிமே இந்த மாதிரி டயலாக்கெல்லாம் வச்சுக் காதீங்கனு.

**கா.பூ.** :- அது சரி, நீங்க எங்க நாட்டுப் பக்கமே வாரதில்லையே, ஏன்?

***விவேக்*** :- சொல்லியடிப்பேன் சூட்டிங்குக்கு வந்திருந்தேன். நீங்க காண யில்லையா?

**கா.பூ.** :- இனிமே எப்ப வருவீங்க?

***விவேக்*** :- இனியெங்க வாரது...வார மாதிரியா அந்த நாட்டை வச்சி ருக்கீங்க...எங்க வெடிக்குமோ, எப்ப வெடிக் குமோன்னு நீங்களே உங்க நாட்டு வெளிப் பயணம் போறதையே நிறுத்திட்டீங்களே! என்ன நெனப்பில என்ன அங்க வரச் சொல்லுறிக...?

ஏ...விவேக்கை விட்டா...வேலைக்கு ஆகாதுன்னு போட்டுத்தள்ளுறதா யார் கிட்டையாவது எக்ரிமெண்ட் எழுதீட் டீங்களா? குறிப்பா நம்ம லைனில அடிக்கடி குரோஸ் பண்ணுதே, ஒரு கறுப்பு வைகைப் புயல், அந்த ஜந்துகிட்ட ஏதாச்சும் அண்ட கிரவுண்டில டீல் பண்ணிட்டீங்களா?

**கா.பூ.** :- எங்க நாட்டில இப்புடி இருக் குன்னு உங்களுக்கு எப்புடித் தெரியும்?

***விவேக்*** :- ஆமா. அதென்ன தங்கமல ரகசியமா தெரியாம இருக்கிற துக்கு...அதான் ஓவர் நைட்டுல தமிழங்க தண்ணியில தவிச்சு தமிழ் நாட்டுக்கு வந்து சேர்றாங்களே... போதாதா?

விவேக் வம்புக்கு வாரான்னு நெனச் சுடாதீங்க. தமிழுங்க இங்க வாராங்க. தமிழுங்க அடிக்கிற சிங்களவுங்க எங்க போறாங்க. அது மாதிரி நம்ம முஸ்லிம் சகோதரங்க எங்க போறாங்க...?

**கா.பூ.** :- அங்க அங்க தான் இருக் கிறாங்க. நம்மவங்கதான் இந்தியா தாய் நாடுங்கிறதால அங்க வந்து சேர்ந் திடுறாங்க...

***விவேக்*** :- இது தாய் நாடுன்னா, இலங்கையில தாய்நாடு தனிநாடுன்னு ஆளாளுக்கு அடிபட்டுக்கிட்டு கிடக் கிறாங்களே அதெல்லாம் சும்மாவா?

**கா.பூ.** :- அதுவும் இருக்குத்தான். அது ஒரு பெரிய சப்ஜெக்ட். உங்களுக்கு நேரமிருக்கா....

***விவேக்*** :- அது சரி, அதென்ன ஒரு வரிக் கதையா சொல்லுறதுக்கு சினிமாவா இல்லையே! சிட்டிசன் படத்தில அஜித் சொல்லுறமாதிரி...அது ஒரு கறுப்புச் சரித் திரம். ஒரு தனிமனிதனின் கதையில்லை. ஒரு ஊரின் கதை...கடல் வந்து அழிச்ச மாதிரி, யுத்தம் நடந்து அழிந்து போன ஒரு தேசத்தின் கதை. அப்புடித்தானே...

**கா.பூ.** :- தனி மனிதனுடைய கதை யில்லையினு நீங்க சொன்னாலும் எங்க நாட்டில அதுதானே நடக்குது.

***விவேக்*** :- ஓ...வ்...நீங்க அவரைச் சொல்றீகளா? மெல்லமாச் சொல்லுங்க, கேட்டிடப் போகுது. இல்லாட்டியும் கூடவே இருக்கிற பயலுக சமயம் பாத்து சந்தடி சாக்கில போட்டுக் குடுத்திடுவானுங்க.

அவரு அங்கயிருந்து ஆளை அனுப்ப மொதலிலேயே இங்க இருக்கிற திருமாவும் கைக்கோவும் ஜெமினி பிலிம்காரங்க மாதிரி ரெண்டு பேரும் கோவணத்தோட வந் துடுவாங்கய்யா.

அப்புறம் வெறும் தாஸில்ல, லாடு லபக்கு தாஸ் வந்தாலும் ஒன்னும் பண்ண முடியாதுங்க.

**கா.பூ.** :- அப்ப நான் கிளம்பட்டுமா...?

***விவேக்*** :- ஆமா...பேட்டி எடுங்கன்னு சொன்னதுக்கு, என்னைய பெரட்டி எடுக்கிற ரேஞ்சுக்கு வாயக்கிளறிட்டு போறங் கிறியளே, போங்க.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

29.06.2006 தொடக்கம் 05.07.2006 வரை.

**சோதிட மாமணி தில்லை**

### இந்த வாரக் கிரக நிலை

மிதுனம் - சூரியன்.கர்க்கடகம் - புதன், சனி, செவ்வாய்.கன்னி - கேது.
துலாம் - வியாழன்.மீனம் - இராகு.இடபம் - வெள்ளி. சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். (29.06.2006 தொடக்கம் 05.07.2006 வரை.)

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நிலை அச்சம், மனப்பயம், எதிர்பாரா செலவு, பணவரவு, தூர இடப் பயணம், உறவினர் உபத்திரம், குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில்நிலை மாற்றம், புதிய முயற்சி பலிதம், செலவு மிகுதி, கடன்படல், பெரியோர் நட்பு, வெளியிட வாழ்க்கை, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக அலைச்சல், மாணவர் கல்வி குழப்பம், சோம்பல் தன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.) தொழிற் கவலை, செலவு மிகுதி, பணியாளர் தொல்லை, தூர இடப்பயணம், பெரியோர் உதவி, உறவினரால் துக்கம், குடும்பக் கவலை, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் மேன்மை, பெரியோர் சகாயம், பணவரவு, மனக்குறை நீங்கும், சுபகாரிய சித்தி, உத்தியோகக் கவலை, மேலதிகாரிகளின் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் உயர்ச்சி, பணவரவு, உயர்ந்தோர் நட்பு, மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, உறவினர் உதவி, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகச் சிக்கல், மனக்கலக்கம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் மந்தம், மனக் குழப்பம், செலவு மிகுதி, கடன் பயம், பெரியோர் உதவி, உறவினர் தொல்லை, குடும்பக் கவலை, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் அனுகூலம், மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் நன்மை, காரியானுகூலம், செலவு அதிகம், வெளியிடப் பிரயாணம், மனக்குறை நீங்கும், அந்நியர் சகவாசம், குடும்ப சுகம், உத்தியோகச் சிக்கல், பெரியோர் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும், பிரயாணக் கஷ்டம், தேகசுகக் குறைவு, குடும்பக் கலகம், துயர் நீங்கும், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் அலைச்சல், பணச் செலவு, வீண்குறை கேட்டல், வெளியிட வாழ்க்கை, குடும்பக் கஷ்டம், உறவினர் உதவி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**விருச்சிகம்** (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் மாற்றம், மனக்கலக்கம், அந்நியர் உதவி, பயனற்ற செயல், பிரயாண மிகுதி, பொருள் இழப்பு, குடும்பக் கவலை, திடீர் செலவு, உத்தியோக மாற்றம், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம் :- 06.

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், வெளியிடப் பிரயாணம், எதிர்பாராச் செலவு, குடும்பச் சுகம், பிள்ளைகளால் மகிழ்ச்சி, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் மேன்மை, பணவரவு, பல்சார் உதவி, வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகாயம், தேகசுகக் கஷ்டம், குடும்ப நன்மை, உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)

தேசிய லொத்தர் சபை
நாட்டில் கோடீஸ்வரர்களை உருவாக்குகிறது.

கொவிசெத லொத்தரின் அடுத்த
கோடீஸ்வரரா நீங்களா ?

கோடீஸ்வரராகுங்கள்,
மென்மேலும் கொவிசெத
டிக்கெட்டுகளை
வாங்குங்கள்!



கொவிசெத

இலங்கையரின் அபிமானத்திற்குரிய
மகத்தான லொத்தர்

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663, 2433631 இணையதளம www.nlb.lk



## பலூன்

**சிங்கப்பூரைச்** சேர்ந்த பொழுது போக்கு நிருவாக மையத்தில், 1039 பேர் ஒன்று சேர்ந்து பலூன்களைத் தொப்பிகளாக வடிவமைத்து அணிந்து கொண்டனர். பலாவன் கடற்கரை யோரத்தில் இந்த பலூன் தொப்பி விழா 13.03.2004 இல் நடைபெற்றது.



## கோபுரம்

**பிரிட்டனைச்** சேர்ந்த அளித்தா காஸ் என்பவர் 55.3 அங்குல உயரமான வட்டவடிவ கோபுரமொன்றினை சீனிக் கட்டிகளைக் கொண்டு உருவாக்கினார். 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ஆம் திகதி ஸ்ரோபரியில் இச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

## காதணி



**காதுகளின்** கீழ்ப்பகுதிகளில் நீண்ட வளையங்கள் அல்லது ஆபரணங்கள் அணியும் பழக்கம் கி.பி.6000 ஆண்டில் ஆரம்பித்து இன்று வரை இருந்து வருகிறது. ஒரு இறாத்தல் எடையுடைய வளையங்கள் கூட அணியப்படுக்கிறது. அழகுக்காகவும் நீண்ட ஆயுள் கிடைக்குமென்ற நம்பிக்கையிலும் காதுகளை நீளமாக்கும் இச்செயல் தெற்கு மற்றும் தென்கிழக் காசியாவிலேயே அதிகம் காணப்படுகிறது.

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



### வக்ஷனா 04.07.2006

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட

சுரேஷ் - சிந்துமதி தம்பதிகளின் செல்வப் புதல்வி வக்ஷனா தனது முதலாவது பிறந்த நாளை கொழும்பில் இல. 214 A 2, மெஸஞ்ஜர் வீதியிலுள்ள 'பிறைடடன் ரெஸ்ட்'டில் 04-07-2006 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, வெளிநாட்டில் வசிக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் கடவுள் கிருபையுடன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:- வி.வி. தம்பிராசா (அப்பப்பா).
தொ.பே:- 0777470065

## 2 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



### க. ரதீஸ்வரா 28.06.2006

கமல் - ஆனந்தி தம்பதியரின் செல்வப் புதல்வன் செல்வன் க.ரதீஸ்வரா 28.06.2006 அன்று கொழும்பிலுள்ள தனதில்லத்தில் தனது இரண்டாவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா ஆனந்தி, அக்காமாரான பிரியா, சகி, மச்சான்மார்களான அம்பு, நிசான், கபி, போல், மச்சாள்மார்களான ஆசா, கம்சி, புஸ்பா, அண்ணன்மார்களான ஜெனகன், துவா, லாவண்யன் ஜெயசு, பாபு, இளங்கோ மற்றும் அத்தைமார்களான சோபா, கஜா, சுதா, வானதி, சித்தப்பா கஜன், மாமாமார்களான ஈசன், றஜனி, அஜோ, பிரி பெரியப்பா, பெரியம்மாமார், அம்மப்பா, அப்பம்மா, அனைவரும் வேதவனப் பிள்ளையாரின் அருளால் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:- அப்பா



இப்பத்திரிகை கொழும்பு-06 வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ் 16 A ஆம் இலக்கத்தில் டிடி என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமணல கிராபிக்ஸ் அச்சகத்தில் ஜூன்.29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.